SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்–214 டிச.17–டிச.23 2000 விலை ரூபா 12/=

ஒரே வழி!

ஓர்தோணி மீதொருகால் இன்னொன்றில் மற்றொருகால்
ஆரேனும்வைத் தேகுவரோ அக்கரையை-போருமுங்கள்
வழியென்ற புசத்தல்களை விட்டின்றே புறப்படுங்கள்
வழியொன்றே! சமாதான வழி!

ஈழமோகம்





மட்டு: நீதி கேட்டு ஒரு போராட்டம்!

## மத்திய கிழக்குப் பணிப் பெண்கள்: ஏமாற்றும் முகவர்களும் எஜமானர்களும்– சில திடுக்கிடும் தகவல்கள்




## புலிகள் அரசு யுத்தம்: ஆளுக்கொரு நீதி!








## விடுதலைக்கு உரம் பாய்ச்சும் பலஸ்தீனக் கவிதைகள்

## குதிரைக்குக் குளத்தைக் காட்ட மட்டுமே முடியும்!

# இவ்வாரச் செய்திகள்

## யாழ்.:

### அனுமதி வழங்குவதில் சீர்கேடு!

யாழ்ப்பாணத்தில் பயண அனுமதி வழங்குவதில் தொடர்ந்து சீர்கேடுகள் நிலவி வருவதாக யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கொழும்பிலுள்ள வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் எஸ்.வாமதேவனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளதாவது: யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குக் கப்பல் மற்றும் விமானத்தில் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கும் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் யாழ் கிளையில் பல முறைகேடுகள் இடம் பெற்று வருகின்றன.

இக்கிளையின் நடவடிக்கைகளில் தமிழ் ஆயுதக்குழுவொன்றின் ஆதிக்கமே இடம் பெற்று வருகின்றது. இக்குழுவின் நடவடிக்கையை கண்டும் காணாமலும் யாழ். அரச அதிபரும் அக்குழுவுக்கு முண்டு கொடுத்து வருகின்றார். நடைபெறும் போரினால் அல்லலுற்றுத் துயரங்களுடன் வாழும் மக்களை இந்த ஆயுதக்குழு துப்பாக்கி முனையில் சோதனைக்கு உள்ளாக்குவதுடன் சிலரை விசாரணைக்கும் உட்படுத்தி வருகின்றது.

இதைவிட தமக்குத் தேவையானவர்களுக்கு எந்தவித அனுமதியுமின்றிப் பயணச் சீட்டுகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் சில பொதுமக்களிடமிருந்து கூடுதலான பணத்தை அறவிட்டு வருகின்றனர். இவ்வாறான மோசமான செயல்களினால் எமது மக்கள் உங்கள் அலுவலகம் மீது மிகுந்த அதிருப்தியும் கசப்புணர்வும் கொண்டுள்ளனர்.

மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நான் தங்களின் கவனத்திற்கு இதைத் தெரியப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளேன். எனவே இந்தப் பயணச் சீட்டு வழங்கும் அலுவலகம் எவருடையதும் கட்டுப்பாட்டிலும் இல்லாது சுயாதீனமாக இயங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### யாழ்ப்பாணத்திற்கு யூரியா கொண்டு செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுப்பு

யாழ்.மாவட்ட விவசாயச் செய்கைக்குத் தேவையான யூரியா உரத்தைக் கொழும்பிலிருந்து கொண்டு செல்வதற்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளதாக கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்குத் தேவையான யூரியா உரத்தை எடுத்து வருவதற்கான அனுமதியை வழங்கக் கோரி கமநல சேவைகள் திணைக்களம் கடந்த மாதம் பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால் தற்போது அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் மற்றும் சிவில் நிருவாக அதிகாரி பிரிகேடியர் திலகரெட்ண ஆகியோரின் சிபார்சுடன் இதற்கு விண்ணப்பித்த போதும் பாதுகாப்பு அமைச்சு அதனை நிராகரித்து விட்டதென அவர் மேலும் தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ள மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கு யூரியா உரம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. கொழும்பிலிருந்து யூரியா எடுத்து வருவது நீண்ட காலமாகத் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட பின்னர் 1996 ஆம் ஆண்டிலிருந்து யூரியா எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அது திடீரென நிறுத்தப்பட்டு விட்டது.

தற்போது யூரியா எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்படாததால் விவசாயிகள் பாதிக்கப்படலாமென விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் டிச.10 ஞாயிறு அன்று இரவு குடும்பஸ்தர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானார். மேலும் இருவர் காயமடைந்து மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மூன்று பிள்ளைகளின் தந்தையான திருப்பெருந்துறையைச் சேர்ந்த சிவநாயகம் இளங்கோ (29) என்பவரே பலியானவராவார். தங்கராசா சந்திரகுமார் (31) சின்னத்தம்பி சிறிபத்மநாதன் (30) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி காயமடைந்த சிறிபத்மநாதன் வைத்தியசாலையில் வைத்து நமது செய்தியாளருக்கு தகவல் தருகையில் -ஞாயிறு இரவு 8 மணியளவில் துப்பாக்கி சகிதம் எனது வீட்டிற்கு வந்தவர்கள் எனது தொலைக்காட்சியையும், சைக்கிளையும் அபகரித்துச் சென்றனர். இது தொடர்பாக அருகில் உள்ள விமானப்படை பாதுகாப்பு காப்பரணில் உள்ள விமானப்படையினருக்கு நானும், எனது உறவினர்கள் ஆறு பேருமாகச் சென்று முறையிட்டோம்.

காலையில் அது பற்றி விசாரிப்பதாக விமானப் படையினர் கூறினர். நாம் வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் திருப்பெருந்துறை முருகன் ஆலயத்தின் பின்பக்கம் இருந்து எம்மை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார்கள்.

இளங்கோ சூடுபட்டு அந்த இடத்திலேயே விழுந்து விட்டார். நாங்கள் காயத்துடன் வீட்டிற்கு ஓடி வந்து உறவினர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு வந்தோம் என அவர் தெரிவித்தார்.

திருப்பெருந்துறை கிராமம் விமானப் படையின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் விமானப் படையினரின் காப்பரணுக்கு அண்மையிலேயே நடைபெற்றுள்ளதாகவும், விமானப்படையினரே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் திருப்பெருந்துறை மக்கள் தெரிவிக்கின்றனர். இறந்த சிவநாயகம் இளங்கோ என்பவரது சடலம் மட்டக்களப்பு பொது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு அங்கு மரண விசாரணைகள் நடைபெற்றன. சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## குடாநாட்டில் படையினர் கண்மூடித்தனமாக வாகனங்களை ஓட்டக்கூடாது -பல்கலைக்கழக சமூகவியல் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா படையினர் கண்மூடித்தனமாக வாகனங்கள் செலுத்துவதால் பொதுமக்கள் வீதியில் நடமாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கண்மூடித்தனமான வாகன ஓட்டங்களைப் படையினர் நிறுத்த வேண்டும் என யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. டிச.8 வெள்ளியன்று காலை பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் படையினர் பயணம் செய்த அம்புலன்ஸ் வாகனம் வீதியால் சென்று கொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக சமூகவியல் மாணவி ராதிகா ஆனந்தராஜா மீது மோதி விபத்துக்குள்ளானது தொடர்பாக சமூகவியல் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நேற்றுக்காலை பல்கலைக்கழக விரிவுரையை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி மீது யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கிச் சென்ற படையினரின் அம்புலன்ஸ் மோதி ஆபத்தான நிலையில் வீதியில் வீழ்ந்து கிடந்துள்ளார். ஆனால் அம்புலன்ஸ் வண்டியின் இராணுவச் சாரதி இவரது அடையாள அட்டையைப் பரிசீலித்துள்ளார். இதனால் இருபது நிமிடம் தாமதமானதுடன் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லாது விசாரணை நடத்தியுள்ளார். பின்னர் அவர்கள் அவ்விடத்திலிருந்து அகன்று சென்று விட்டனர். பின்னர் மாணவியைப் பல்கலைக்கழத்திலிருந்து சென்ற மாணவர்களே வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

படையினர் பாதுகாப்பு என்ற பெயரில் கொலைகளைச் செய்து வருவதுடன் தற்போது இவ்வாறான விபத்துக்களையும் நடத்தி வருகின்றனர். இதனை எமது பல்கலைக்கழக சமூகவியல் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இதற்கு இராணுவ சிவில் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே குடாநாட்டு மக்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களைவிட தற்போது இடம் பெற்று வரும் இத்தகைய சம்பவங்களும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. எனவே இவ்வாறன கண்மூடித்தனமான செயல்களில் படையினர் ஈடுபடுவது எதிர்காலத்தில் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்/ என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறுவாக்கேணியில் நான்கு இளைஞர்கள் படையினரால் கைதாகித் தாக்கப்பட்டனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனைக்கு அருகிலுள்ள கறுவாக்கேணி கிராமத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் டிச.10 அன்று அதிகாலை 3 மணியளவில் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பாடசாலை மாணவர்களாவர். மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 30 கி.மீற்றரில் கறுவாக்கேணிக் கிராம் உள்ளது. கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களான எஸ்.ஹேமநாதன், சுரேஸ்குமார் ஆகியோரும் சகோதரர்களான மாதவராஜா, நாதன் ஆகியோருமே கைதாகித் தாக்குதலுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிறன்று அதிகாலை 3 மணியளவில் கறுவாக்கேணிக்குக் கவச வாகனங்களில் சென்ற படையினர் இவர்களின் வீடுகளைச் சுற்றி வளைத்து இவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். பின்னர் கறுவாக்கேணி, சுங்கான்கேணி, கொண்டயன்கேணி பகுதியும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது. இச்சுற்றி வளைப்பு காலை 9 மணியளவிலேயே முடிவடைந்தது.

சுற்றிவளைப்பு முடிந்து படையினர் திரும்பிச் செல்லும் போது கைதான நான்கு பேரையும் விடுவித்துள்ளனர். ஆனால் இவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பாடசாலை மாணவர்களில் ஹேமநாதன் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்ற வேண்டியவரென பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதான இரு சகோதரர்களின் மற்றொரு சகோதரரே படையினருக்குக் காட்டிக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. இச்சகோதரர் அண்மையில் தமிழ் குழுவொன்றுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் அவருக்கு இவர்களுடன் இருந்து வந்த பகைமை காரணமாகவே இது நடந்ததாகவும் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் கிண்ணையடிக் கிராமமும் ஞாயிறு காலை இராணுவத்தினரால் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது. வீடுவீடாகச் சென்ற படையினர் வயது வித்தியாசமின்றி ஆண், பெண்களை கிண்ணையடி விளையாட்டு மைதானத்திற்குக் கொண்டு சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

## யாழ் மாவட்ட மருத்துவமனைகளில் ௬௨ மருத்துவ அதிகாரிகள் வெற்றிடங்கள்

யாழ் மாவட்ட மருத்துவமனைகளில் 62 மருத்துவ அதிகாரிகள் வெற்றிடங்கள் காணப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர். மொத்தமாக 71 மருத்துவ அதிகாரிகள் பணியாற்ற வேண்டிய யாழ்.மாவட்டத்தில் தற்போது 9 மருத்துவ அதிகாரிகளே கடமையாற்றி வருகின்றனர்.

இதனிடையில், வடக்கு கிழக்கில் அரச மருத்துவமனைகளில் பணி புரியும் அனைத்துப் பட்டதாரி மருத்துவர்களும் தங்களுக்கு விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க வடக்கு கிழக்கு கிளை ஊடாகவே இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

## ரெலோ உறுப்பினர்கள் கைது

மட்டக்களப்பு ஆரையம்பதியில் பரமேஸ்வரன் யுகேந்திரன் என்ற இளைஞரின் மரணத்திற்குக் காரணமாக இருந்த ரெலோ உறுப்பினர்களான வரதன் என்று அழைக்கப்படும் சீனித்தம்பி ரஞ்சன், கண்ணன் என்று அழைக்கப்படும் சீனித்தம்பி கோகுலராஜ் ஆகிய இருவரையும், டிச.11 திங்கள் மாலை காத்தான்குடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இரு சந்தேக நபர்கள் தலைமறைவாகி விட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 26ம் திகதி ஆரையம்பதியில் வைத்து மேற்படி இளைஞர் ரெலோ உறுப்பினர்களால் தாக்குதலுக்கு உள்ளானார் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்த இளைஞர் ஞாயிறு மாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமானார்.

# வந்தாறுமூலையில் புலி பிடிக்க ஒரு புதிய முகாம்!


– வி.ஜே.கே.

மட்டக்களப்பு வந்தாறுமூலை களுவன்கேணிச் சந்தியில் இராணுவத்தினர் புதிதாக முகாமொன்றை அமைத்துள்ளனர். அண்மைக் காலங்களில் புலிகளின் நடமாட்டம் இப்பகுதியிலேயே அதிகரித்துக் காணப்படுவதாகவும், புலிகள் இப்பாதையையே தமது போக்குவரத்துக்கு பயன்படுத்துவதாகவும் , வாகனங்களையும் இவ்விடத்தில் வைத்தே கடத்திச் செல்வதனாலேயே தாங்கள் இவ்விடத்தில் முகாமமைக்க வேண்டிவந்ததாகவும் இம்முகாம் இவ்விடத்தை விட்டு அகற்றப்பட வேண்டும் என்று கூறிய பலரிடம் படைத்தரப்பு வட்டாரங்கள் கூயிருக்கின்றன.

இன்றுவரைக்கும் இராணுவத்தினர் வீதிக்கடமையில் இல்லாத வேளையில் புலிகள் எந்த வாகனங்களையும் கடத்தவில்லை. அண்மையில் கடத்தப்பட்ட அரசதிணைக்கள வாகனம் கூட இராணுவத்தினர் வீதிக்கடமையில் ஈடுபட்டிருக்கும் போதே கடத்தப்பட்டது என்பது யாவருக்கும் தெரிந்த உண்மை.

புலிகள் எழுவானிலிருந்து படுவானுக்கும் , படுவானிலிருந்து எழுவானுக்கும் இப்பாதையையும் தமது பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றாக வைத்திருந்தனர் என்பது இன்றைக்கு அப்பகுதியிலிருக்கும் சின்னப்பிள்ளையிடம் கேட்டால்கூட சொல்லும் . ஆனால் இதிலென்ன சிரிப்பென்றால் வருகின்ற புலி இராணுவத்தினரின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு தேவையானதைக் கொண்டு போய்விடுவார்கள். பட்டப்பகலிலே சாணுக்கொன்று முழத்துக்கொன்று நிற்கும் போதே அந்தப் பெரிய வாகனத்தை கொண்டுபோகும் போது பிடிக்க முடியாதவர்கள் முகாம் அமைத்துத் தான் புலி பிடிப்பதென்பதெல்லாம் மரமறியாதவனுக்கு இலைபறித்து காட்டுவது போன்று தான்.

1994லிலும் வந்தாறுமூலை உப்போடையில் புலிபிடிப்பதற்காக . போடப்பட்ட இராணுவமுகாம் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களைக் குடித்ததை இன்னமும் அப்பகுதி மக்கள் மறக்கவில்லை. 1995 நவ.14 அன்று அதிகாலை உப்போடை இராணுவமுகாம் தாக்கப்பட்ட போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாணிக்கம் சிவலிங்கம் இவரது மனைவி நல்லநாயகி மகள் சரண்யா ஆகியோர் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் காயப்பட்டு உயிர்பிழைத்த இவர்களது இரண்டு பிள்ளைகளையும் உறவினர்கள் எடுத்து வளர்க்கின்றனர்.




இந்த சம்பவத்தை செய்த கோப்ரல் பண்டார என்பவரே தற்போது வந்தாறுமூலை முகாமுக்கும் வந்துள்ளார் என்றவுடன் அப்பகுதி மக்களெல்லாம் கதிகலங்கிப்போய் நிற்கின்றார்கள். கடந்த டிச.8ம் திகதி இரவு வந்தாறுமூலை வீ.சீ வீதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டிலிருந்த தாயையும் மகளையும் வெளியில் விட்டு வீட்டுத்தலைவனை வீட்டுக்குள் வைத்து கதவைப் பூட்டியிருக்கின்றார்கள் தகப்பன் கதவையுடைத்து விட்டு வெளியே வந்திருக்கின்றார். திரும்பவும் வீட்டுக்குள் சோதனை செய்யவேணும் பொம்பிளையள் வீட்டுக்குள் வாங்க என்று சொல்லியிருக்கின்றனர். தகப்பன் விடவில்லை. வேணுமெண்டால் நான் வாறேன் என்று கூறியிருக்கின்றார். நீண்ட நேர வாதாட்டத்தின் பின் இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டுச் சென்றிருக்கின்றனர்.

இதேபோன்று டிச.9ந் திகதி காலையில் அதே வீதியிலுள்ள இன்னுமொரு வீடொன்றுக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டிலுள்ளவர்கள்பற்றி விசாரித்து விட்டு கணவன் எங்கே என்று கேட்டுள்ளனர் கணவன் அரிசி ஆலைக்கு வேலைக்கு சென்றுள்ளார் எனக்கூறியிருக்கின்றார். அன்றிரவு அந்தப் பெண் அந்த வீட்டில் இருக்கவில்லை. பக்கத்திலுள்ள வீடொன்றிற்கு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு படுக்கைக்குச் சென்று விட்டார். ஆனால் அன்றிரவு அந்த வீட்டுக்கு இராணுவத்தினர் சென்று கதைவையுடைத்து வீட்டுக்குள் சென்று பார்த்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளதாக அப்பெண் குறிப்பிட்டார்.


வந்தாறுமூலைப் பிரதேசத்தில் அனேகமான ஆண்கள் வெளியிடங்களிலுள்ள அரிசி ஆலைகளுக்கு வேலைக்கு சென்று ஒருவாரம் இரண்டுவாரம் கழித்துத்தான் வீடுதிரும்புவார்கள். ஆனால் இன்றுள்ள இந்தச் சூழ்நிலையில் யாரையும் நம்பி தங்களுடைய குடும்பங்களை விட்டுச் செல்ல முடியாதுள்ளதென அப்பகுதி வாசியொருவர் தெரிவித்தார்.

வந்தாறுமூலை இராணுவத்தினர் இரவு வேளைகளில் முகாம்களில் தங்குவதில்லை ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று பூக்கல்லு ஓட்டைகளாலும், குடிசை வீடுகளில் ஓட்டைகளாலும் கண்ணை விட்டுப் பார்ப்பதிலே இரவு நேரத்தைக் கழிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் இராணுவத்தினர் பொதுமக்களை உளவியல் ரீதியாக தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாமென நினைக்கின்றனர். பொதுமக்களுக்கு நெருக்குவாரத்தைக் கொடுக்க வேறு வழியில்லாமல் அம்மக்கள் மீண்டும் தமது காலடிக்கே வருவார்கள் என்று படையினர் நினைக்கிறார்கள். இதற்கூடாகப் புலிகளை மக்களிடமிருந்து இலகுவாக ஓரங்கட்ட வைக்கலாம் என்றும் நினைக்கின்றனர்.

இதன் இன்னொரு பக்கத்தையே ஈ.பி.டி.பியினர் செய்கின்றனர். புலிகள் நன்றாக அடிக்கின்றனர். அவர்கள் அடிப்பார்கள் தானே அடிபடட்டும் நீங்கள் வாங்கோ. வீடில்லாதவர்கள் வீட்டுக்கு பதியுங்கோ , உங்கள் பிள்ளைகளுக்கு வேலையில்லையாட்டி எங்களிட்ட பெயரைப் பதிந்து போட்டு வீட்டில் இருங்கோ. மாதாமாதம் உங்களுக்கு ரூபா3000 நாங்கள் தருகின்றோம். இப்படி கிராமம் கிராமமாக ஈ.பி.டி.பியினர் தங்களுக்காதரவானவர்களைச் சேர்த்து குழுக்கள் அமைத்து பணவுதவியும் செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

இது என்னவென்றால் பாம்புக்கும் நோகாமல் பாம்படித்த கம்புக்கும் நோகாமல் புலிகள் நன்றாக அடிக்கக்




கூடியவர்கள் நீங்களெல்லாம் தேவையில்லை என மெதுமெதுவாக புலிகளுக்கும் மக்களுக்குமான ஒரு அன்னியப்பாட்டை ஏற்படுத்துவதே இவர்களின் வேலை.

இதைத் தான் தினமுரசு பத்திரிகை செய்து வந்தது. இப்போ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகச் செய்து வருகின்றார்.

என்ன தான் இருந்தாலும் இராணுவத்தினரதும் அரச ஒத்தூதிகளதும் கபட நாடகங்களுக்குள் சிக்குப்படாமல் இருப்பவர்கள் இருக்கத் தான் செய்கின்றனர். மறு புறத்தில் சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் இனவாதமும், பொ.ஐ.முவின் பிரதமர் வீசியெறியும் இனவாதச் சொற்களும் எதிரிடையாக தமிழ் தேசிய உணர்வை ஒவ்வொருவர் மனதிலும் வளர்த்து வருகின்றது என்பதை யார் தான் மறுக்க முடியும்.

கடந்த வாரம் மட்டக்களப்பில் வைத்தியர்களும், தாதிமார்களும், சிற்றூழியர்கள் நடத்திய சமாதானப் பேரணியில் 'பொதுமக்கள் பயண வாகனங்களில் ஆயுதம் ஏந்தியவர்கள் பயணம் செய்யாதீர்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதை தனியொருவர் சொல்லமுடியாத நிலையில் இவர்கள் குறிப்பிட்டது வரவேற்கத்தக்கதொன்று.

இதே நேரத்தில் அப்பேரணியின் போது கையெழுத்துப் பிரதியொன்றும் வழங்கப்பட்டது. அதில் இம்மாதம் 6ந் திகதி இடம்பெற்ற துரதிஷ்டவசமான பஸ் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் வைத்தியர் டியூக் அருட்பிரகாசம், சாரதிகள், நடத்துனர் உட்பட்ட பொதுமக்களின் உயிரிழப்பினால் ஏற்பட்ட தாக்கமே இப்பேரணியை நடத்த எம்மைத் தூண்டியது எனக் குறிப்பிடப்பட்டிருந்து.

உண்மையில் இற்றைவரை ஆயிரக்கணக்கில் அப்பாவிப் பொதுமக்கள் குண்டு வெடிப்புக்களாலும் துப்பாக்கிச் சூட்டுக்களாலும் கொன்றொழிக்கப் பட்டுள்ளனர். மட்டக்களப்பில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இறந்த குழந்தைகளைக்கூட புலிகளின் குண்டுவெடிப்பில் இறந்தார்கள் என்று மருத்துவ அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி யாரும் மூச்சு விட்டதில்லை. வைத்தியத்துடன் தொடர்புடைய சங்கங்கள் டியூக்கின் மரணத்தின் பின் போர்க் கொடி தூக்கியிருப்பது சரியான ஒரு விடயம். வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

உண்மையில் இற்றைவரை ஆயிரக்கணக்கில் அப்பாவிப் பொதுமக்கள் குண்டு வெடிப்புக்களாலும் துப்பாக்கிச் சூட்டுக்களாலும் கொன்றொழிக்கப் பட்டுள்ளனர். மட்டக்களப்பில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் இறந்த குழந்தைகளைக்கூட புலிகளின் குண்டு வெடிப்பில் இறந்தார்கள் என்று மருத்துவ அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி யாரும் மூச்சு விட்டதில்லை. வைத்தியத்துடன் தொடர்புடைய சங்கங்கள் டியூக்கின் மரணத்தின் பின் போர்க் கொடி தூக்கியிருப்பது சரியான ஒரு விடயம் தான் என்றாலும் இதற்கு முன்னர் எதையும் யாரும் செய்ய முன் வராதமை நினைவில் வருவதை தவிர்க்க முடியவில்லை.

எமது சமூகம் குறித்த விழிப்புணர்வு எங்கள் ஒவ்வொருவருக்கும் இல்லையாயின் இன்னுமின்னும் இவ்வாறானஉயிரிழப்புகள்




ஏற்படத் தான் போகின்றன. அவ்வப்போது இவ்வாறானதொரு எதிர்ப்பைக் காட்டிவிட்டு நாம் வாழாவிருக்கப் போகிறோமா? நாம் சிந்திக்க வேண்டிய இடமில்லையா இது.

எமது வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் போன போக்கணம் கெட்ட நமது மக்கள் பிரதிநிதிகளில் எவரும் கூட 'பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் படையினர் பயணம் செய்யக் கூடாதென்று' சொன்னதில்லை. அதற்காகக் குரல் கொடுத்ததில்லை. அவர்களுக்கே படையினர் தான் பாதுகாவலர்களாக இருக்கிறார்கள் என்றால் இவர்கள் எப்படி இதைச் சொல்வார்கள்?

எந்தவிதத்திலும் உப்புச்சப்பில்லாத பிரதியமைச்சுப் பதவியை வைத்துக் கொண்டு பாதுகாப்பைக் காரணம் காட்டி கொண்டு மட்டக்களப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கே வரமறுக்கும் அமைச்சர் கணேசமூர்த்தியை குறைசொல்வதா இராணுவத்தினதும் சந்திரிக்காவினதும் றிமோட் கொன்ரோலால் இயங்குவதாகக் கூறும் அண்ணன் செல்வராசாவைக் குறைசொல்வதா, யாரைச் சொல்வது! யாரோடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம்!

○

# சூழலியல் ஏகாதிபத்தியம்

– ரியாஸ்

"ஓசியிலயெண்டா, அம்மாக் கொண்டு, அப்பாக்கொண்டு"என்ற மனோபாவந்தான் எம்மைப் பீடித்துள்ள பீடையும் மூடமையுமாகும். இந்த பிரதான மனோபாவத்தைச் சரியாக எடை போட்டதினால் தானோ என்னவோ வல்லரசுகளினதும், ஏகாதிபத்தியத்தினதும் அடிமைச் சங்கிலியிலிருந்து விடுபட்டுக் கொண்டதாக, பெரிதாகப் பீற்றிக் கொண்டு, பழம்பெருமை, வீறாப்புப் பேசிக் கொண்டு திரிந்தாலும், நாம் இன்னும் அடிமைகளாகவும் அவர்களில் தங்கியுந்தான் இருந்து கொண்டிருக்கிறோம். கிடைத்த சுதந்திரம் என்பது கொள்கை ரீதியான [illegible]வில் மட்டுந்தான். கலை, கலாசாரம், பொருளாதார தளங் களில் இவர்களின் ஊடுவல்கள் மிகவும் அபாயகரமானதாக இன்னும் இருந்து கொண்டிருக் கின்றன. இந்த ஊடுருவல்களை பகுத்தறிவதற்கு துறை சார் நிபுணத்துவம் மிகவும் முக்கிய மானது. இவைகளில் சில சாதாரண புலனுணர்விற்கு உட்பட்டனவாகவும், மற்றும் பல

தளபாடங்கள் செய்யவும் இம் மரங்களைப் பயன்படுத்தலாம் என்பதையும் தெரிந்து கொண்டனர். இதனால் மக்கள் விறகுத் தேவைக்குப் பதிலாக ஆலைகளுக்கும் மர ஆலைகளுக்கும் அம் மரங்களை விற்றுப் போதிய பணம் உழைக் கலாம் என நம்பினர். இதனால் அம்மரங்களை பெருமளவுக்கு நடுவதற்கு உந்தப்பட்டனர். இம் மரக் கன்றுகளுக்கு திடீர்த் தேவை யும் அதிகரித்தது. இதற்கு உதாரணமாக உத்தரப் பிரதேச மாநிலத்தில் 1979-1984 காலப் பகுதியில் வனத் திணைக்களத் தினர் 8 மில்லியன் விக்ஸ் கன்று களை மக்கள் மூலம் நடத் தீர்மானித்திருந்த போதிலும் 350 மில்லியன் கன்றுகளுக்கு எதிர் பாராத தேவையேற்பட்டது. அதிகம் முதலீடுகளைச் செய்து மக்களைக் கொண்டு இம் மரங்களை பெருமளவு வளர்ப் பதில் ஈடுபட்டனர். வர்த்தக வங்கிகள் மற்றும் கடன் வழங்கு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு இம் மரங் களால் இலகுவாக அதிகமாக

இதனை இந் நாடுகளில் அறிமுகம் செய்தது பெரிய துரோகமாகும். இதுவும் விக்ஸ் மர உற்பத்தி யினால் ஏனைய தாவரங்கள் வளர்ச்சி குன்றுவதற்கு ஒரு காரணமாகும். இன்னும் கொஞ்சக் காலத்தில் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகள் தான் மிகவும் அதிகமாக பாதிக்கப்படப் போவது என்பது உறுதி.

விக்ஸ் மரங்களை கடலோரப் பயிர்களாக நடலாம். அது காற்றுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதாக இருந்தாலும் கூட காற்று வீசும் போது இம் மரங்கள் ஒரு பக்கமாகவே சாய்வதால் அந் நோக்கமும் நிறைவேறக் கூடியதாக இல்லை. இந்த இடத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போதிய தரிசு நிலங்கள் இல்லாமையால் இம் மரங்களை வளவுகளிலும் விவசாயக் காணிகளிலும் வளர்க்க வேண்டியிருக்கின்றது. இம் மரங்கள் ஏனைய தாவர வளர்ச்சியை பாதிக்கும் என விஞ்ஞானிகள் கருதுவதால் நம் விவசாய உற்பத்திக்கு இது ஊறு விளைவிக்கலாம். இவ்

## மரநடுகையா அல்லது உயிரியற் தொழில்நுட்ப ஆக்கிரமிப்பா?

புலனுனணர்விற்கு அப்பாற்பட்ட வையுமாகும். இவற்றைப் பகுத்துணர நவீன தொழில் நுட்பம் தேவை. (ஓநாயிடமி ருந்து ஆட்டைக் காப்பாற்ற நரியைக் கூப்பிட்ட கதை மாதிரி). இதற்கு கூட ஏகாதிபத்தி யத்தில் தான் நாம் தங்கி யிருக்க வேண்டியிருக்கின்றது.

விக்ஸ் எனப் பலராலும் அழைக்கப்படும் "யுக்கலிப்ரஸ்" என்னும் மரங்கள் இன்னும் பரவலாக கிராமங்களில் காணப் படுகின்றன. மக்கள் தடிமல் மற்றும், சளி உபாதைகள் ஏற்படும் போது விக்ஸ் இலையை அவித்து ஆவியை உள்வாங்குவதன் மூலம் நிவார ணம் பெறுகிறார்கள். அவுஸ்தி ரேலியாவைப் பிறப்பிடமாக கொண்ட இம்மரங்கள் 1970 களில் வட-கிழக்குப் பிரதேசங் களிற்கு அறிமுகமாயின. அவுஸ்திரேலியாவில் வேறு மரங்கள் அதிகம் காணப்படாத வனாந்தரங்களில் இம் மரங்கள் தனியாக வளர்கின்றன. வளர்க் கப்படுகின்றன. நம் அண்டை நாடான இந்தியாவிலோ 15 வருடங்களுக்கு முன்னர் இம் மரங்கள் அறிமுகப்படுத் தப்பட்டன. அங்கு விவசாயப் பண்ணைகளில் இவை நடப்பட் டன. கிராமவாசிகளின் விறகுத் தேவைக்கும், பண்ணைகளில் பராமரிக்கப்படும் கால்நடை களின் தீவனத்திற்கும் இம் மரங்கள் அங்கு நடப்பட்டன. தோட்ட வரம்புகள், தோட்ட எல்லையோரங்கள் வேலியோரங் களில் இவை நடப்பட்டன. ஆரம்பத்தில் இம் மரங்களின் பிரயோசனம் விறகாகவும், தீவன மாகவும் அமைந்தாலும் அவற்றின் பெறுமதி அதனை விட மேலானது என அறியத் தொடங்கினர். காகித உற்பத்திக்கு காகிதக் கூழ் பெற்றுக் கொள்ளுமளவுக்கு இதன் பெறுமதி உயர்ந்தது என்ற இரகசியத்தை மக்கள் புரிந்து கொண்டனர். அத்தோடு மர வேலைகளுக்கும்,

உழைக்கலாம் எனக் கிராமவாசி களுக்கு ஆசையூட்டின.1980 களின் ஆரம்பத்தில் அந்த விவசாயிகள் இம் மர நடுகையில் ஓரளவு வருமானத்தை பெறக் கூடியதாக இருந்தது. ஆனால் 1980 களின் முடிவில் நிலைமை மாறத் தொடங்கியது.

விவசாயிகள் பணம் பண்ணும் ஆசையில் மரநடுகையில் ஓர் ஒழுங்கு முறையைக் கவனிக்காது அதிகளவு மரக் கன்றுகளை கண்ட படி நட்டதாலும் வனத் திணைக் களத்தினர் ஆரம்ப காலத்தைப் போலன்றி தரமற்ற கன்றுகளை விநியோகித்தமையினாலும் விக்ஸ் மரத்தின் வளர்ச்சி குறையத் தொடங்கியது. மரங்களின் தரமும், பருமனும் குறைந்து விட்டன. இதனால் பண்ணை விவசாயிகளின் விக்ஸ் மர விவசாயம் சரியத் தொடங்கியது. காகித ஆலைகளும் [illegible] இலாகாவில் இருந்தே தங்கள் தேவைக்கு அவற்றைக் கொள்வ னவு செய்தன. பண்ணை விவசாயிகள் மரங்கள் ஏற்றுமதி செய்து வியாபாரம் நடத்தவோ சந்தை வாய்ப்பு பெறவோ இயலாது தடுமாறினர்.

இந்த நிலவரத்தில் பண்ணை விவசாயிகளுக்கு மற்றொரு பேரிடியும் ஏற்பட்டது. விக்ஸ் மரங்கள் துரிதமாக வளர்ச்சி பெறும் இனமாகும். விரைவில் இம் மரங்கள் வளர்ந்து நிலத்திலி ருந்து கனியுப்புக்களையும், நீரையும் உறிஞ்சி முடித்தன. இதனால் மண் வளம் குன்றிப் போனது. ஏனைய விவசாயப் பயிர்ச் செய்கை குன்றி பல விவசாயிகள் பயிர்ச் செய்கையைக் கை விட்டு ஏழையாயினர். இதிலிருந்து கொட்டும் பூ, இலை, காய் கொண்டுள்ள இரசாயனப் பொருள் ஏனைய தோட்டப் பயிர்களின் வளர்ச்சியையும் தடை செய்தது. மேலும் இதன் இலையை உண்ணும் கோலா கரடி, உக்கச் செய்யும் பக்டீரியாவும் இலங்கையிலும், இந்தியாவிலும் இல்லாத போது

விவகாரத்தில் நமது விஞ்ஞானிகள் அதிகளவு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நிலவரத்தில் இம் மர நடுகைக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

ஐரோப்பியரின் வெள்ளெலிகளாக நாங்கள் பயன்படுத்தப் படுகின்றோம். இலங்கையில் சமீபகாலமாக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் நெல்லினங்களும், இபில் மரங்களும் மலை நாட்டில் வளர்க்கப்பட்டிருக்கும் பைனஸ் மரங்களும், இந்தியாவில் அறிமுகப்படுத் தப்பட்டிருக்கும் சில பருத்தியினங்களும், சூடானின் சில கோதுமையினங்களும், தெரிந்தோ அல்லது தெரியாமலோ அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சில அங்கிகளும், முதலாளித்துவ முதலாம் மண்டல நாடுகளால் இன்னும் மூன்றாம் மண்டல நாடுகளை இறுகப் பிடித்து வைத்திருக்கும் உயிரினவியற் தொழில்நுட்பட ஆக்கிரமிப்பேயன்றி வேறொன்றுமில்லை.

எனவே வெளிநாடுகளிலிருந்து இலவசமாகவோ அல்லது வேறு வழியாகவோ தருவிக்கப்படும் எதைப் பற்றியும் முன்னெச்சரிக்கையுடன் பலாபலன்கள் ஆராயப்பட்ட பின்னரே நாட்டில் அறிமுகம் செய்யப்பட வேண்டும். அவ்வாறின்றேல் மேற்கண்ட மாதிரியான பிரச்சினைகள் ஏற்படவே செய்யும். "ஓசியிலயெண்டா அம்மாக் கொண்டு அப்பாக் கொண்டு" என்ற மனோபாவம் எப்போது மாறுகிறதோ, அப்போது தான் வெள்ளெலிகளாக நாங்கள் ஆக்கப்படுவதிலிருந்து விடுபட முடியும்.

# விலைத் தலையனி

## மனமும் இடமும்!

கடைசியாக தாங்களும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

வெளிநாட்டிலிருக்கும் ஜனாதிபதிக்கு அனுப்பி அவரது அனுமதியுடன் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கையொன்று பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் கதிர்காமரால் வாசித்துக் காட்டப்பட்டது.

மாவீரர் தின உரையில் பிரபாகரன் தெரிவித்த சமாதானத்துக்கு தயார் என்று அறிவிற்குப் பதிலாகவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

நிபந்தனை அற்ற உடனடியான பேச்சுக்கு தயார் என்ற அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

ஆனால், வெறுமனே காலத்தைக் கடத்தவே பிரபாகரன் எம்மைக் கூப்பிடுகிறார் என்று நினைத்துக் கொண்டு பேச்சில் இறங்காமல், தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்துடன் பேச்சில் இறங்க வேண்டும்.

அதேபோல புலிகளும் இந்தப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் உலகுக்கு காட்டுவதற்காகவே பங்குபற்ற நினைக்கிறது என்று கூறுவதைத் தவிர்த்து பேச்சில் இறங்க வேண்டும்.

புலிகளும் அரசும் சொல்பவைகள் உண்மையாக இருந்தாற் கூட பேச்சுவார்த்தை அதையும் விட வெற்றி பெறும் சக்தி வாய்ந்தது. (சரியாக நடாத்தப்பட்டால்) மனமுண்டானால் இடமுண்டு.

மனம் உண்டா?

## சபாஷ் ரணில்!

"தமது எதிர் தரப்பினரைப் பழிவாங்கவும் அரசியல் அதிகாரத்தை அனுபவிக்கவுமே இப்போதெல்லாம் அரசியல் பயன்படுத்தப்படுகிறது. இப்போது நடந்து கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு யுத்தம் ஜனநாயக உரிமைகளை மட்டுப்படுத்தி விட்டுள்ளது. இனங்களுக்கிடையேயான மோதலாக கருதப்பட்டு இனக்குழுமங்கள் சிலவற்றின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இது தொடர்ந்தால் இலங்கையில் பாசிசப் பயங்கரம் உருவாகிவிடும்."

இப்படிப் பேசியிருப்பவர் வேறு யாருமல்ல. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தான்.

கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்ட மனித உரிமைகள் தினத்தையொட்டி நடந்த கூட்டத்தில் அவர் இவ்வாறு உரையாற்றி இருக்கிறார்.

"இன்றுள்ள அரசாங்கம் மக்களுக்கு சேவையாற்றுவதற்குப் பதில் அமைச்சர்களுக்காக சேவையாற்றி வருகிறது. இந்த அரசாங்கத்தின் அரசியலமைப்பு திருத்த முயற்சியால் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுள்ள நிலையை மாற்றிவிட முடியாது" என்று அவர் மேலும் பேசியுள்ளார்.

இலங்கையில் ஆட்சியில் இருப்பவர்களை விட எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அவ்வப்போது இவ்வாறான 'மணியான' கருத்துக்களை தெரிவிப்பது வழக்கம். சந்திரிக்கா அம்மையாரும் இப்படித்தான் எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் 'பொன்மொழி வித்தகியாகத் திகழ்ந்தார்.

ஆயினும் ரணிலின் பேச்சுக்கும், 'அவரது புதிய அரசியல் யோனை'களுக்காகவும் அவருக்கு பாராட்டுத் தெரிவிப்போம்.

சபாஷ் ரணில்!

## கதிர்காமர் தான் சொல்ல வேணும்!

நாய்க்கும் போர்த் தேங்காய்க்கும் சம்பந்தமில்லை: கழுதைக்கும் கற்பூர வாசனைக்கும் சம்பந்தமில்லை: தென்னை மரத்தில் தேள் கொட்டியதற்கும் பனைமரத்தில் நெறிபோட்டதற்கும் சம்பந்தமில்லை.

ஆனால், புலிகளை தடைசெய்யச் சொல்லி உலக நாடுகளை கோருவதற்கும் பேச்சுவார்த்தைக்கும் சம்பந்தமில்லையா?

இல்லை என்கிறார் கதிர்காமர்.

மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறதில் பேர் பெற்ற அமைச்சருக்கு இவை இரண்டுக்கும் சம்பந்தம் இருப்பது தெரியாமல் போனது தான் ஆச்சரியம்!

ஒருவேளை சம்பந்தமில்லாதவற்றைச் சம்பந்தமிருப்பதாகவும், இருப்பதை இல்லை என்று சாதிப்பதும் தான் அவரது தத்துவமோ என்னவோ?

அமைச்சரைத் தான் கேட்க வேணும்!

# குதிரைக்குக் குளத்தைக் காட்ட மட்டுமே நமக்கு முடிகிறது!

- சிசைரோ

யுத்தத்தில் ஈடுபட்டவுடன் அரசு தனக்கும் தனது எதிராளிக்கும் இடையில் வித்தியாசமான விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படியான வித்தியாசம் பாராட்டுதலே யுத்தத்துக்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்ற போது அத்தகைய வித்தியாசத்தை எதிர்பார்த்தல் முட்டாளத் தனமானதாகும். இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், யுத்தத்தின் ஒரு தரப்பான புலிகள் பேச்சுவார்த்தைக் காலத்தில் தங்களைத் தயார்படுத்தக் கூடாது என்று கூறும் அரசு தானும் அதே விதிகளினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்வதில்லை. இதற்குக் காரணம் கேட்டால், மக்களைக் காப்பாற்றும் பொறுப்பிலுள்ள அரசு, இறைமைமிக்க அரசு எப்படிச் சும்மா வாளாவிருக்க முடியும் என்று பதில் கேள்வி போடுவார்கள். ஆனால் மக்களைக் காப்பாற்றுவதற்கும் சாதாரண சட்டம் ஒழுங்குப் பிரச்சனையைக் கவனிக்கவும் யுத்தக் கப்பல்களும் ஹெலிகொப்டர்களும் தேவையில்லை என்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

உண்மையில் இருதரப்புக்குமே பேச்சுவார்த்தையில் நம்பிக்கையிருக்குமானால் யுத்த முஸ்தீபுகளை நிறுத்திக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம். அங்ஙனமில்லையேல் இருதரப்பினருமே யுத்த சன்னத்தராக இருந்துகொண்டும் பேசலாம். ஆனால் பின்னைய சந்தர்ப்பத்தில் பரஸ்பர நம்பிக்கை அவர்களுக்கிடையில் உருவாகுதல் என்பது மிகக் கடினமானதாக இருக்கும். ஆனால் அதற்காக, ஒரு தரப்பு யுத்தத்துக்குத் தயாராக இருக்க முடியாது. தான் மட்டுமே அங்ஙனம் இருக்க வேண்டும் என்று அரசு கூறுதல் மறுதரப்பை மட்டந்தட்டுவதாகும் என்பதுடன் அதுவே நிபந்தனை விதிப்பொன்றாகவும் அமைந்து விடும். எனவே பேச்சுவார்த்தை என்றவுடன் புலிகள் மூச்சு விட அவகாசம் கேட்கின்றார்கள் என்று அறிக்கை விடுவோரின் கருத்தில் எவ்வித நியாயமோ வலுவோ இல்லை என்பதையும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

> யுத்தத்தின் ஒரு தரப்பான புலிகள் பேச்சுவார்த்தைக் காலத்தில் தங்களைத் தயார்ப்படுத்தக் கூடாது என்று கூறும் அரசு தானும் அதே விதிகளினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்வதில்லை. இதற்குக் காரணம் கேட்டால்,
> மக்களைக் காப்பாற்றும் பொறுப்பிலுள்ள அரசு, இறைமைமிக்க அரசு எப்படிச் சும்மா வாளாவிருக்க முடியும் என்று பதில் கேள்வி போடுவார்கள். ஆனால் மக்களைக் காப்பாற்றுவதற்கும் சாதாரண சட்டம் ஒழுங்குப் பிரச்சனையைக் கவனிக்கவும் யுத்தக் கப்பல்களும் ஹெலிகொப்டர்களும் தேவையில்லை என்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

இன்னொரு விதத்தில் கூறுவதாயினும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டிய சட்ட ரீதியிலானதும் தார்மீக ரீதியிலானதுமான கடப்பாடுகள் அரசுக்கு உண்டே தவிர கிளர்ச்சிக்குழு எதற்கும் அத்தகைய அவசியம் கிடையாது. கிளர்ச்சிக் குழு ஒன்றின் இருப்பே அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தி எப்படியாவது அதனை அடி பணிய வைப்பதாக இருக்கும் என்கின்ற போது பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டிய அவசியம் கிளர்ச்சிக் குழுக்களுக்குக் கிடையாது. இதனை இலங்கையில் விடுதலைப் புலிகளின் நிலையுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்தின் ஒரே பிரச்சாரமாக இருந்து வந்தது தாங்கள்



பேசத் தயாராக இருந்தும் புலிகளுக்குத் தீர்வில் அக்கறையில்லை என்பதும் அவர்கள் சமாதான சக வாழ்வுக்குப் பொருத்தமற்றவர்கள் என்பதுமாகவே இருந்து வந்தது. ஆனால் அதற்குப் பதிலளிக்குமாற் போன்றே தற்போது புலிகள் காய் நகர்த்தியுள்ளார்கள். இதனால் அரசின் வாய் வீச்சுக்கள் ஒரேவிதமாக அமுங்கிப் போக வேண்டியதாயிற்று.

என்னுடைய வாதமெல்லாம் அரசொன்று தன்னை ஜனநாயக அரசென்று விளம்பரப்படுத்த வேண்டும் என்றால் அதற்கான ஆசையிருந்தால் ஜனநாயகத்தின் ஏனைய அம்சங்களில் கோட்டை விட்டிருந்தாலும் இத்தனைக்கும் பின்பு சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்குத் தட்டிக் கழித்தல் அல்லது பல்வேறு சாக்குப் போக்குகளின் கீழ் காலங் கடத்தல் என்பது ஜனநாயகத்தையே கேலி செய்வதாக இருக்கும் என்பதாகும்.

அதுவும் பன்மைத்துவ சமூகம் ஒன்றைக் கொண்டுள்ள அரசில் இத்தகைய பேச்சுவார்த்தை முயற்சி என்பது அவசியம் என்பதை விட வேறு எந்த வழியிலும் பூர்த்தி செய்யப்பட முடியாத அவசியத் தேவைகளை உள்ளடக்கியதாகவும் இருக்கும் என்று கூறலே பொருத்தமானதாகும். இங்ஙனம் கூறும்போது இதற்கான ஆதாரம் என்ன என்று வாசகர்கள் கேட்கக் கூடும். ஆரம்பத்தில் நான் கூறியுள்ளதைப்போல ஜனநாயகத்துக்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டிருப்பினும் சட்டரீதியாக அதன் அவசியம் வலியுறுத்தப்பட்ட சம்பவம் ஒன்றை மட்டும் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

### கனேடிய உயர்நீதிமன்றத் தீர்ப்பு

*எமது அரசியலமைப்புச் சட்டத்திலும் அரசியல் கலாசாரத்திலும் ஜனநாயகம் என்பது ஓர் அடிப்படை விழுமியமாக உள்ளது. ஜனநாயகத்தில் தனிப்பட்ட ஒருவரின் அக்கறைகள் என்பதும் நிறுவன ரீதியிலான அக்கறைகள் என்பதும் ஒரே விதமாகப் பார்க்கப்பட வேண்டும். கியூபெக் மாகாணம் தன்னிச்சையாகப் பிரிந்து போவதற்கான உரிமை உள்ளதா என்பதை ஆராய்கையில் அரசியலமைப்பைப் பற்றியும் ஜனநாயகத்தின் உள்ளார்ந்த அம்சங்கள் பற்றியும் ஆராயாமல் எம்மால் தீர்ப்புக் கூற முடியாது.*

*ஜனநாயகம் என்பது வெறுமனே பெரும்பான்மை ஆட்சியை வலியுறுத்தும் அரசியல் முறைமை என்றே பொதுவில் நம்பப்படுகின்றது. ஜனநாயகம் என்பது அரசாங்கம் பற்றிய நடபடிமுறை* (process) *மட்டுமல்ல. அதற்கு மாறாக, ஜநாயகம் என்பது அடிப்படையில் சில இலக்குகளைச் சாராம்சமாகக் கொண்டிருக்க வேண்டும். இதில் இன்றியமையாததாக சுயாட்சியை அது வலியுறுத்துவதாகவும் முன்னெடுப்பதாகவும் இருக்க வேண்டும்.*

*ஜனநாயகம் கலாசார ரீதியிலானதும் குழுக்கள் இடையிலானதுமான பல்வேறுபட்ட அடையாள வேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதாகவும் இருக்க வேண்டும். இறைமையுள்ள மக்கள் தமது சுயாட்சிக்கான உரிமையினை ஜனநாயக நடபடிமுறைகளினூடாகவே பிரயோகிக்கின்றார்கள். ஜனநாயகத்தில் தான் உரிமைகளின் அம்சங்கள் உள்ளார்ந்தவையாக இருக்கின்றன.*

*இந்த நீதிமன்றமானது சுதந்திரமான ஜனநாயக சமூகமொன்றுக்கு அவசியமான விழுமியங்களினாலும் கோட்பாடுகளினாலும் வழி நடாத்தப்பட வேண்டும். இவற்றுள் மனிதனின் உள்ளார்ந்த கௌரவம், சமூக நீதிக்கும் சமத்துவத்துக்குமான பற்றுறுதி, பல்வேறுபட்ட நம்பிக்கைளின் உள்வாங்கல், கலாசார மற்றும் குழு அடையாளங்களை மதித்தல், சமூக மற்றும் அரசியல் நிறுவனங்கள் மீது நம்பிக்கை வைத்தல் என்பன உள்ளடங்கியிருக்கும். அத்துடன் இங்ஙனமிருந்தாலன்றி சமூகத்தில் தனிநபர்களதும் குழுக்களதும் பங்குபற்றல் ஒருபோதும் அதிகரிக்கப் போவதில்லை. இவை அதிகரிக்காத போது ஆட்சியை வெறுமனே ஜனநாயக ஆட்சியென்று பிரகடனப்படுத்துவதால் எவ்வித பயனும் கிட்டப் போவதில்லை.*

*ஆளப்படும் மக்களின் சம்மதம் என்பது சுதந்திரமான ஜனநாயக சமூகமொன்றை விளங்கிக் கொள்வதற்கான அடிப்படையாக அமைகின்றது. ஆயினும் ஜனநாயகம் என்பது அதன் யதார்த்தமான பொருளில் சட்ட ஆட்சி என்ற ஒன்றில்லாமல் ஒருபோதும் இருக்க முடியாதது. சட்ட ஆட்சி உருவாக்கம் சட்டக் கட்டமைவுக்குள்ளே தான் மக்களின் இறைமைவழி விருப்பு என்பதும் வெளிப்படுத்தப்பட வேண்டும். ஜனநாயகம் சட்ட ரீதியானதாக வேண்டுமானால் ஜனநாயக நிறுவனங்கள் இறுதியில் சட்ட அத்திவாரம் ஒன்றில் தான் தங்கியிருக்க வேண்டும்.இதன் பொருள் யாதெனில் அவை மக்களின் பங்குபற்றலையும் மக்களுக்குப் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்தும் வழிவகைளை இயன்றளவு சாத்தியமாக்க வேண்டும். அதாவது கிடைக்கச் செய்ய வேண்டும்.*

*சட்டபூர்வமான தன்மை என்பது வேறு. இறைமை விருப்பு அல்லது பெரும்பான்மை யோரின் விருப்பு என்பது வேறு. ஏனைய அரசியலமைப்பு விழுமியங்களை அப்புறப்படுத்திவிட்டு வெறுமனே இறைமை விருப்பு அல்லது பெரும்பான்மையின் விருப்பு என்று கூறினால் அது சட்டபூர்வத் தன்மையை வழங்கப் போதாது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.*

*"இறுதியாக, செயற்படும் ஜனநாயகம் என்பது தொடர்ச்சியான கலந்துரையாடும் நடபடிமுறை ஒன்றைத் தேவைப் படுத்துகின்றது"*

*மேற்சொன்ன வாசகங்கள் யாவும் கனேடிய உயர்நீதிமன்றத்தின் கூற்றுக்களாகும்.*

இந்தப் பின்னணியில் இலங்கையின் நிலைமையை வாசகர்கள் பொருத்திப் பார்க்க வேண்டும். யாருக்குப் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லும் கடப்பாடு உள்ளது என்பதையும் நோக்க வேண்டும். அத்துடன் அங்ஙனம் பேசுவதற்கான சந்தர்ப்பங்கள் மறுக்கப்படும்போது சமூகக் குழுக்கள் வேறுவழிகளை நாடுவதில் எவ்விதத் தப்பும் இல்லை என்பதையும் நீதிமன்றம் குறிப்பிடத் தவறவில்லை.

இத்தகைய



பேச்சுவார்த்தை முயற்சிகள் கனடாவில் தொடர்ந்து நடந்தும் அவை வெற்றியளிக்கவில்லை என்பது கவலைக்குரியது தான் என்றாலும் அப்படித் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பும் ஆர்வமும் இருப்பதால் கியூபெக் மாகாண மக்கள் தன்னிச்சையாகப் பிரிந்து போவதற்கு அவசியமில்லை என்றும் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கும் கட்டம் வந்துவிடவில்லை என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சிறுபான்மைத் தேசியங்களது அபிலாஷைகள் என்ன? ஜனநாயக நாடொன்றில் அவற்றுக்கு எப்படி மதிப்பளிப்பது? அங்ஙனம் மதப்பளிக்கத் தவறும் பட்சத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்பதையெல்லாம் மேற்சொன்ன வழக்கு தெளிவாக விளக்கியுள்ளது.

என்ன இருந்தாலும் குதிரையைக் குளத்தருகே கொண்டுபோக மட்டுந்தானே நம்மால் முடிகின்றது.

○

# என்ன நடக்கப் போகின்றது? என்ன செய்யப் போகிறோம்?

– சுனந்த தேசப்ரிய

என்ன நடக்கப் போகின்றது என்ற கேள்வி இன்று பலராலும் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற. அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வு ஒன்றுக்கான அடிப்படை எழுப்பப்பட்டுள்-ளதா? என்ற கேள்வி என்ன நடக்கும் என்ற கேள்வியின் பின் மறைந்து கிடக்கின்றது.

புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடை-யில் பேச்சுவார்த்தை ரீதியிலான அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு பல நிபந்தனைகள் உண்டு. முதலாவதாக பொ.ஐ.மு அதாவது ஆளும் அரசியல் கூட்டணியினுள் அரசியல் தீர்வு குறித்து இணக்கப்பாடு ஏற்படுதல் அவசியமாகும். பொ.ஐ.முவுக்கு தலைமைத்-துவத்தை ஸ்ரீ.ல.சு.க வழங்குகின்றது. இதன்படி ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் இணக்கப்பாடு அதாவது உண்மையான இணக்கப்பாடு ஏற்படுதல் அவசியமாகும். ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த பிரதானிகளில் ஒருவரும் பிரதமரு-மான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தற்போதைய அரசாங்கத்தின் பாராளுமன்றத் தலைமைத் துவத்தைக் கொண்டிருக்கிறார். அவர் பேச்சு-வார்த்தை ரீதியிலான சமாதானத் தீர்வின் மீது நம்பிக்கைக் கொண்டிருப்பதாகத் தெரிய-வில்லை. சொல்ஹெய்மையும், ஹெயினையும் அவர் திட்டுவதையே காணக் கூடியதாக-விருந்தது. ஸ்ரீ.ல.சு.க வின் சமாதான விரும்பி-களான பீரிசும், மங்கள சமரவீரவும் கூட இன்று சமாதானத் தீர்வு குறித்து அக்கறை காட்டவில்லை எனலாம். இனவிவகாரங்களு-க்கு பொறுப்பான அமைச்சர் அத்தாவுத செனவிரத்ன இன்று மௌனம் சாதித்து வருகின்றார். ஓரளவுக்கேனும் பேச்சுவார்த்தை தீர்வுக்காக முன்னிற்பது ஜனாதிபதி மட்டுமே. ஸ்ரீ.ல.சு.கவினதும் மற்றும் பொ.ஐ.மு-வினதும் இத் தெளிவற்ற அரசியல் நிலைப்பாட்டினால் வெளிப்படுத்தப்படும் சமிக்ஞைகள் தெளிவற்ற நிலையிலேயே உள்ளன. பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வை நோக்கிப் பயணிக்க இந்நிலைமை ஒருபோதும் வாய்ப்பளிக்காது.

பொ.ஐ.மு நல்லெண்ணத்துடன் தன்னுள் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டால் மட்டுமே இவை சாத்தியமாக முடியும். சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக கட்சிக்குள் பலதரப்பட்ட கருத்து நிலைகள் காணப்படலாம். எனினும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருதல் அவசியமாகும்.

இரண்டாவது நடவடிக்கையாக எதிர்க்கட்சியுடன் இது குறித்து பொது இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும். தேர்தல் காலங்களில் மேற் கொண்ட சேறு பூசல்களை இவர்கள் மேலும் தொடருவார் களாயின் இணக்கப்பாடு தொடர்பான முயற்சிகளும் வீணாகும் எனலாம். லியம் பொக்ஸ் ஒப்பந்தம் மற்றும் 2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட பொ.ஐ.முவுக்-கும், ஐ.தே.கவுக்கும் இடையிலான இணக்கப்-பாடு என்பனவற்றை மேலும் அபிவிருத்தி செய்ய இரு கட்சிகளும் அரசியல் திடசங்கற்-பத்தைப் பூண வேண்டியது அவசியமாகும். அது செய்ய இயலாததும் அல்ல. ஐ.தே.க இலங்கையின் அனைத்து விடயங்களுக்கும் முரண்படும் சம்பிரதாய பூர்வமான பாத்திர வகிப்பி லிருந்து விடுபட்டு வருவதை சென்ற வருடம் முதல் காணக் கூடியதாகவுள்ளது. சேறு பூசும் அரசியலிலிருந்து விலகும் அவசியத்தை அரசாங்கமே முதன் முதல் சுட்டிக் காட்டியது. எனினும் தேர்தல் வெற்றிக்காக சேறு பூசும் பிரச்சாரங்களை பின்பற்றியது பொ.ஐ.முவே ஆகும். இந்நிலைமையில் ஐ.தே.கவும் சிறந்த இணக்கப்பாட்டுத் தன்மையை வெளிக்காட்டுவது அவசியமாகும்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பிற சிங்கள அரசியல் கட்சிகளான சிஹல உறுமயவும், ஜே.வி.பியும் பேச்சுவார்த்-தைத் தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால், அவர்களுடன் இணக்கப்பாட்டிற்கான முயற்சி-களை மேற்கொள்வது காலத்தை வீணடிக்கும் செயலாகும்.

பொ.ஐ.முவும் ஐ.தே.கவும் அரசியல் தீர்வுக்கான பொது கொள்கை விளக்கத்திற்கு இணங்கிய பின்னர் அதனை பிரசித்தப்படுத்தி மக்கள் கலந்துரையாடலுக்கு விடப்படுதல் அவசியமாகும். பேச்சுவார்த்தை தீர்வுக்கான மக்கள் அனுமதியை இதன் மூலம் கட்டியெ-ழுப்பலாம். உண்மையில் லியும் பொக்ஸ்ஸின் எண்ணமும் அதுவாகத்-தானிருந்தது. இரு கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தவே அவர் முயற்சித்தார்.


புலிகளுடன் இதன் பின்னர் நேரடி பேச்சு-வார்த்தைகளில் ஈடுபட முடியும். அப்பொழுது அரசாங்கத்தினால் தமது கருத்துக்களை துணிவுடன் முன்வைக்கக் கூடியதாக-விருக்கும்.

எவ்வாறாயினும், இவ்வாறான பேச்சு-வார்த்தை ஆரம்பிக்கப்பட முன்னர் அணுக வேண்டிய இன்னுமொரு பிரச்சினை உள்ளது. அது நம்பிக்கையை கட்டி எழுப்பும் செயற்பாடாகும். பிரபாகரன் வடக்கு கிழக்கில் சாதாரண நிலைமையை ஏற்படுத்துவது என்று சொல்வதனை சமாதான மொழியில் கூறுவதாயின் நம்பிக்கையை ஏற்படுத்துதலேயே ஆகும். வழமையான இயல்பான நிலைமையை ஏற்படுத்துவதும் அதற்காக யுத்த வழிமுறை-களைப் பின்பற்றுவதும் இரண்டு வேறுபட்ட விடயங்களாகும். இவ்விரண்டையும் ஒரே விடயங்களாக எடுத்துக் கொள்வது ஆபத்தான பிரதிபலன்களையே தரக் கூடும்.

1994-1995 சமாதானப் பேச்சுவார்த்தை-களின் போது அப் பேச்சுவார்த்தைகள் பூச்சியப் புள்ளிக்கு சற்று உயர்வாக இருப்பதைக் காணக் கூடியதாக விருந்தது. இச்செயற்பாடுகள் ஒழுக்கரீதியாகவும் நிபுணத்துவம் கூடியதாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டியவை. தியாகச் சிந்தையும், பொறுமையும் இதற்கு அவசிய மான கூடிய இலட்சணங்களாகும். அதேபோல் சமாதான செயற்பாடுகளுக்குள் அதனை உறிஞ்சுதல் வேண்டும். அதாவது அதிர்ச்சிகளை, தாக்குதல்களை சமாளிக்கக் கூடிய திறன் பெற வேண்டும். யுத்த பூமியைப் போன்று சமாதான பூமியிலும் வெற்றி தோல்விகள் ஏற்படக் கூடும். இத் தோல்விகள் காரணமாக சமாதான செயற்பாடொன்றை கைவிடாதிருத்தலுக்கான நீண்ட கால சமாதான பார்வை ஒன்றும் அவசியமாகும்.

**தற்போது புதிதாக இராணுவத்தில் ஆட்களைச் சேர்த்துக் கொள்ள நடைபெறும் பிரச்சார நடவடிக்கைகளாகும். பிரச்சாரத்தில் இராணுவம் சிங்கக் குட்டிகளின் சுவர்க்கம் எனக் குறிப்பிடப்படுகின்றது. விளம்பரங்களில் இளம் கட்டுமஸ்தான ஆண்கள் சித்திரிக்கப்படுகின்றனர். அவர்களது கட்டுமஸ்தான தேகத்திற்கு அழகிய இளம் பெண்கள் போட்டியிருகின்றனர்.**

அரசாங்கம் பேச்சுவார்த்தை ரீதியிலான தீர்வின் தேவையை அதாவது சமாதானத்தி-னால் யுத்தத்தை நிறுத்துவது குறித்து தெளிவான கருத்து நிலைக்கு உடன்படுவது, பிரதான அரசியல் கட்சிகள் இரண்டுக்கிடையில் அதற்கான பொது கொள்கை வரையறைகளுக்-குள் இணக்கப் பாடு ஒன்றை கட்டியெழுப்-புதல், அவ்விணக்கப்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புடன் சிறுபான்மை அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகக் குழுக் களுடன் பேச்சுவார்த்தைக்கு வருதல், பேச்சு-வார்த்தை ரீதியிலான தீர்வுக்கு தேவையான நம்பிக்கைச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்-புதல், சமாதான செயற் பாட்டிற்கான வாய்ப்பு-களையும், நிபுணத்துவத்தையும் உயர்த்தும் கல்வி மற்றும் பிரயோக நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல், வெற்றிகரமான சமாதான செயற்-பாட்டை முன்னெடுத்தல் என்பனவற்றை நிபந்தனைகளாகக் கொள்ளலாம்.



எனினும் துரதிருஷ்டவசமாக இவற்றை அடைவதற்கான ஆர்வத்தை அரசு முன் வைக்கவில்லை எனலாம். அதற்குப் பதிலாக புலிகளை நோக்கி குற்றம் சுமத்தும் செயற்-பாட்டில் அரசும் அரச ஊடகங்களும் முயன்-றுள்ளன. அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்-களை எதிர்வு கூறும் மெய்ஞானிகளாக அரச ஊடகங் களைக் குறிப்பிடலாம். இவர்கள் புலிகளுடன் மட்டுமல்ல, ஆளும் தரப்பினரை விமர்சனத்திற்குட்படுத்தும் அனைவருடனும் சமருக்குத் தயாராகவுள்ளனர் எனலாம்.

இதன் மூலம் தெரியவருவது யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலை நிறுத்துவது குறித்து மட்டுமல்ல, நாட்டை அரசியல் ஜனநாயகப்படுத்தும் ஆர்வம் கூட இவர்களிடம் இல்லை என்பதே. உண்மையில் கூறுவதாயின் இன்று அரச ஊடகங்கள் யுத்தவாதத் தினதும், அரச பயங்கரவாதத் தினதும் பாத்திரத்தையே வகித்து வருகின்றன. இந்நிகழ்வானது சமாதானம் குறித்தான நம்பிக்கை பொ.ஐ.மு அரசாங்கத்திடம் இல்லை என்பதாகும்.

இதற்குப் பிரதான காரணங்கள் இரண்டு உள்ளன. முதலாவதாக, அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட யுத்த வலையில் இருந்து அதனால் மீள முடியாமல் இருப்பது. யுத்தம் யுத்தத்தைத் தான் தரும்: யுத்தம் இன துருவ நிலையை ஏற்படுத்து கின்றது. இனங்களுக்கி-டையே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்து கின்றது. யுத்த யந்திரங்களையும், யுத்த நம்பிக்கையையும் வளர்த் தெடுக்கின்றது. இதற்கு சிறந்த உதாரணம் தற்போது புதிதாக இராணுவத்தில் ஆட்களைச் சேர்த்துக் கொள்ள நடைபெறும் பிரச்சார நடவடிக்கைகளாகும். பிரச்சாரத்தில் இராணுவம் சிங்கக் குட்டிகளின் சுவர்க்கம் எனக் குறிப்பிடப்படுகின்றது. விளம்பரங்களில் இளம் கட்டுமஸ்தான ஆண்கள் சித்திரிக்கப்-படுகின்றனர். அவர்களது கட்டுமஸ்தான தேகத்திற்கு அழகிய இளம் பெண்கள் போட்டியிடுகின்றனர். யுத்தத்தினால் யுத்தம் நியாயப் படுத்தப்படுவதற்கு சிறந்த உதாரணம் இதுவாகும். 1998 ஜனவரி மாதம் தலதா மாளிகை புலிகளின் தாக்குதலுக்குள்ளான போதும், 2000 ஏப்ரல் மாதம் யாழப்பாணத்தில் சமர் ஆரம்பமான போதும், அரச ஆதரவில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச ஊடகப் பிரச்சாரங்கள் இவற்றுக்கு சிறந்த உதாரணங்களாகும். 1994ல் சந்திரிகா இந்த விஷம வலையில் சிக்காமல் இருந்தார். இதனால் அவருக்கு சமாதான வழிமுறைகளைக் கட்டியெழுப்பும் ஆர்வம் இருந்தது. ஆனால், அதற்கான செயற்பாடுகளை அவர் இன்னும் வெளிகாட்டவில்லை. 94ல் அவரது தொனிப்பொருள் சமாதானம். 2000ல் அவரது தொனிப்பொருள் யுத்தம்.

இந்த அரசியல் நிலைப்பாட்டுச் சித்திரங்களை வரைந்து கொள்வது புலிகளுக்கு கடினமான செயற்பாடு அல்ல. அரசாங்கத்தின் சமாதான விருப்பும், தியாகத்தன்மையும் போதுமானதல்ல என்பதை எரிக் சொல்ஹெயிம் தொடக்கம் இன்டர்பார்த் வரை அனுபவ பூர்வமாக அறிந்திருப்பார்கள் என்பதை அறியக் கூடியதாகவுள்ளது. புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தமது விருப்பைத் தெரிவித்ததன் காரணம் சமாதான களத்தில் தமக்கு யுத்த களத்தை விட இலகுவாக இலங்கை அரசாங்கத்தை சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையில் தான் என்று கூறலாம். யுத்த வெற்றியை குறித்த திடசங்கற்பத்தைத் தவிர சமாதானம் தொடர்பான திடசங்கற்பத்தை பிரபாகரனின் மாவீரர் தின உரையில் காணக் கிடைக்கவில்லை. அவ்வுரை சந்திரிகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களேயன்றி சமாதா-னத்திற்கான வழிமுறையைக் கட்டியெழுப்பு-வதல்ல. பிரபாகரனின் மாவீரர் தின உரைக்குப் பின்னர் இங்கிலாந்தில் அன்டன் பாலசிங்கம் ஆற்றிய உரை பரஸ்பர குற்றச்சாட்டுக்கு இருவரும் விருப்பமாகவுள்ளனர் என்பதைத் தெளிவுறுத்துகின்றது.

சமாதானத்திற்கான முதல் நடவடிக்-கையை எடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கே உள்ளது. புலிகளின் மீது விரலை நீட்டி அனைத்துத் தவறுகளையும் புலிகளின் மீது சுமத்துவதைத் தவிர அதற்கான அடிப்படை நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆயத்தங்கள் எதையும் அரசாங்கத்திடம் காண முடியவில்லை.

புலிகளின் பிரச்சாரங்கள் ஒரு புறம் இருக்க, இரு சாராரினதும் விருப்பும் யுத்தம் என்பதும் தெளிவாகின்றது. இவ்விரு பிரச்சாரங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்த மக்கட் படை ஒன்றுண்டு. சிங்கள தமிழ் மக்கள் யுத்தத்தை தான் கோருகிறார்களாயின் இலங்கை அரசாங்கத்திற்கு வேறு மாற்று இல்லை எனலாம். அரசாங்கத்தையும், புலிகளையும் பற்றி கதைப்பதைப் போன்றே நாம் நம்மைப் பற்றியும் அதாவது சிவில் சமூகத்தைப் பற்றியும் கதைத்தல் வேண்டும். என்ன நடக்கும் எனக் கேள்வி கேட்டு விட்டு கடமையை முடித்துக் கொள்வதை விட என்ன செய்யலாம் எனக் கேள்வி கேட்க முன் வரும் வரை யுத்த வலையிலிருந்து மீள முடியாத-தாகவிருக்கும். இலங்கை அரசாங்கத்தினதும், புலிகளினதும் நிகழ்ச்சி நிரலிலும் மற்றும் அடிப்படைவாத யுத்தவாதச் சக்திகளின் அரசியல் கருத்து நிலைகளுக்கு முரணான ஜனநாயகத்தின் மற்றும் சமாதானத்தின் அரசியல் தேவை இந்நாட்டில் உள்ளதா? அவ்வாறான சமூக அரசியலுக்கான சூழலை உருவாக்கும் அக்கறை நம்மிடம் உள்ளதா?

இலங்கையின் எதிர்காலம் சந்திரிகாவினாலும், பிரபாகரனினாலும் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. சிவில் சமூகத்தின் செயற்பாட்டின் அடிப்படையிலும் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது எனலாம். என்ன நடக்கும் என கேட்பதை விட, என்ன செய்ய வேண்டும் என ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

○

# பேச்சுவார்த்தை: ஒப்புக்கா? மன ஒப்புதலுடனா?

ஒன்று வார கால மௌனத்திற்குப் பிறகு அரசாங்கம் தனது மௌனத்தைக் கலைத்து விட்டிருக்கிறது - அமைச்சர் கதிர்காமரின் வாயினூடாக.

பிரபாகரனின் சமாதானப் பேச்சுக்கான அழைப்பை ஏற்று, நாங்கள் பேசத் தயார். அதுவும் உடனடியாக அதைத் தொடங்கத் தயார் என்ற அறிவிப்பை கதிர்காமர் மூலம் வெளியிட்டிருக்கிறது அரசாங்கம்.

வரலாற்றில் இத்தகைய முரண்நகைகள் சாதாரணமானவை தான்.

ஆனாலும், தனது பதவிக்காலம் முழுவதும் புலிகளை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி வீசிவிட வேண்டும் என்ற வேகத்துடன் செயற்பட்ட முக்கிய அமைச்சர்கள் ஒரு சிலரில் மிகவும் தீவிர-மானவர் கதிர்காமர். சந்திரிகா கூட புலிகள் மீது கதிர்காமர் கக்கியளவு கூர்மையா.. வார்த்தைகளைப் பாவித்ததில்லை எனலாம். அவ்வளவு வேகம் இருந்தது அவருக்கு.

வடக்குக் கிழக்கிலும் புலம் பெயர் நாடுகளிலும பொதுவாக ஒரு சொற்றொடர் வழக்கில் இருக்கிறது. அதாவது 'புலிக-ளோடை சமாளிக்கலாம்: புலி வால்களைச் சமாளிக்க முடியாது என்பது.

புலிகளின் வரி விதிப்பு, பாஸ் நடை-முறை போன்ற சட்டங்களால் பாதிக்கப்பட்-டவர்கள், நேரடியான புலி உறுப்பினர்களை விட 'புலி வால்கள்' எனச் சொல்லப்படும் அதை அண்டி நின்று சுய நலன்களைப் பெருக்கிக் கொள்வோரால் பட்ட அவஸ்தைகள் அதிகம் என்பது பற்றிப் பேசும் போது இப்படிச் சொல்வார்கள்.

அப்படித்தான் ஒரு 'சிங்க வாலாக' செயற்பட்டவர் / படுபவர் கதிர்காமர்.

எவ்வளவுக்கு எவ்வளவு தமிழர் உரிமைகளையும், புலிகளையும் தூக்கி எறிந்து பேசுகிறாரோ அவ்வளவுக்கு தமக்கு அம்மாவுடனான நெருக்கம் அதிகரிக்கும் என்கிற தீவிரமான அடிமைப்புத்தி அவரிடம் ஊறிக் கிடக்கிறது.

சந்திரிகாவுடன் அவர் மேடையில் இருக்கின்ற போதும், சந்திரிகா பேசுகிற போது அவர் 'சிரக்கம்பம்' செய்து கொள்வ-தும் பார்க்க அருவருப்பாக இருக்கும்: ஒரு மனிதர் இவ்வளவுக்கு கீழிறங்கிப் போய் தனது விசுவாசத்தைக் காட்ட முடியுமா என்று ஆச்சரியமாக இருக்கும்.

வயிற்றுக்குள் வாலைச் சொருகியபடி முன்னங்காலை உயர்த்தி, பின்னங்காலில் நின்று தாளமிடும் ஒரு வளர்ப்பு நாயின் தோற்றம் உங்கள் கண்முன் காட்சிப் பிம்பமாக தோன்றினால் நான் அதற்குப் பொறுப்பல்ல.

ஆனால், அதே அமைச்சர் இப்போது புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டது வரலாற்றின் முக்கிய முரண் நகைகளுள் ஒன்று என்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

அமைச்சர் கதிர்காமர் பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து அரசாங்கத்தின் முடிவை அறிவித்தார். ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையை வாசித்துக் காட்டினார். வெளிநாட்டில் இருக்கும் ஜனாதிபதி எப்படி இந்த அறிக்கையை தயாரித்திருக்க முடியும் என்று யாராவது நினைத்து விட்டாலும் என்ற பயம் அவருக்கு. ஜனாதிபதி கூட இதைச் சிந்தித்திருப்பாரோ என்னவோ? இங்கு தயாரிக்கப்பட்ட அறிக்கை லண்ட-னுக்கு அனுப்பப்பட்டு அவரின் பூரண பரிசீலனைக்குப் பின்னான அனுமதி இப்போது வெளியிடப்படுகிறது என்று அவர் குறிப்பிட்ட விதத்தை யோசிக்கையில் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

ஒருவேளை ஜனாதிபதியால் பரிசீலிக்-கப்படாமலும் அவரது செயலகம் அறிக்கை வெளியிடுகிறதோ என்னவோ?

பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். பிரபாகரன் கோரிய சுமுகநிலை குறித்து பின்னரே ஆராய முடியும். யுத்தத்தை நிறுத்துவது என்பது பேச்சுவார்த்தை ஆரம்பமாக முதல் சாத்தியமிலலை என்பன அவரது கருத்துக்-களின் சாரமாக இருந்தன. கதிர்காமருக்கு பொருளாதாரத் தடை, யுத்தம் போன்றவை நிறுத்தப்படா என்பது பற்றியும் பேசாவிட்-டால் முழுமையாக வாயிழந்தது போலாகி-விடாதா என்ன?

சரி, ஜனாதிபதியைப் பார்க்க லண்டன் போய் வந்த அறிக்கை என்ன சொல்கிறது என்று பார்ப்போம்!



'பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் எப்போதும் தயாராக இருந்திருக்கிறது. புலிகள் தான் திரும்பத் திரும்ப இராணுவம் வாபஸ் பெற வேண்டும் என்று நிபந்தனை-களை வெளியிட்டு வந்திருந்தார்கள். இப்போது அவர் அதை விட்டுவிட்டார். எனவே நாம் பேச முடியும்.

'அப்படி ஒரு பேச்சுவார்த்-தைக்கான நிகழ்ச்சி நிரலில் முக்கிய சில விடயங்கள் இடம்பெற வேண்டும் என்பதைப் புலிகள் ஒப்புக் கொள்ள வேண்டும். போரை நிறுத்துதல், பயங்கரவாதக் கொலைகள் சகலதுக்கும் முடிவு கட்டுதல், பேச்சுவார்த்தை மூலமான அரசியல் இணக்கப்பாட்டுக்கு வந்து அதனூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், போரினால் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகட்கு தீர்வு காணுதல்' என்பன அந்த நிகழ்ச்சி நிரலில் இடம்பெற வேண்டும்.

போர் நிறுத்தம் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தில் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான ஒரு திட்டவட்டமான கட்டத்தை அடையும் போது போரைத் தணிக்க முடியும்....

இப்படித் தொடர்கிறது அந்த அறிக்கையின் விபரங்கள்.

யாழ் மக்கள் பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவிப்பதற்கான காரணம் புலிகள் சீரான விநியோகத்தைக் குழப்பியதே என்றும், யாழ்ப்பாணத்தை தாம் மீளக் கைப்பற்றுவோம் என்றும் பிரபாகரன் அறிவித்திருப்பது இலங்கையின் ஆள்புல உரிமம் மீதான அதிகாரத்தை தான் எடுப்பதாக சவால் விட்டிருக்கிறார் என்றும் புலிகளை விமர்சனம் செய்திருக்கிறது இந்த அறிக்கை.

அறிக்கை வெளிப்படுத்தும் விடயங்களின் சரிபிழைகளுக்கும் அபிப்பிராய வேறுபாடுகட்கும் அப்பால் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும் என்ற நிலையில் இருக்கிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. உணவு விநியோகம், சீராக இல்லாமல் அங்குள்ள மக்கள் சிரமப்படுவதற்கு, அதைப் புலிகள் குழப்பியதே காரணம் என்பது பகுதி உண்மை தான். அரசு மக்களுக்கு உணவனுப்புவது என்ற போர்வையில் இராணுவ தளபாட விநியோகங்களையும் செய்ததை அதனால் மறுக்க முடியுமா? தவிரவும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது என்று பிரபாகரன் சொன்னதை, அதை ஒரு விடுதலை யுத்தத்தை நடாத்தும் இயக்கத்தின் தலைவரது கூற்று என்று பார்ப்பதற்குப் பதில் அந்நிய ஆக்கிரமிப்பாளரது கூற்றுப்போல பார்ப்பது நாட்டின் யதார்த்த நிலைமை-யையே புரியாதவர்களது பார்வையை ஒத்தது. வடக்கு கிழக்கு பிரதேசம், தமிழ், முஸ்லிம் மக்களது பாரம்பரிய பிரதேசம், அவர்கள் மீதான இலங்கையரசின் இராணுவ ஆக்கிரமிப்பு அரசின் இறையாட்சிக் கோட்பாட்டாலோ, ஆள்புல தத்துவத்தாலோ நியாயப்படுத்தப்பட முடியாதது. இதை வெளியேற்றுவதை தான் பிரபாகரனது கைப்பற்றல் அல்லது மீட்டெடுத்தல் என்ற சொற்கள் வெளிப்படுத்துகின்றன என்பது புரிந்து கொள்ள முடியாதவை அல்ல. ஆனால், அரசாங்கம் தன்னை நியாயப்-படுத்தாமல் தனது இவ்வளவு கால தாமதத்திற்கு காரணம் கற்பிக்காமல் பேச்சில் இறங்குகின்ற 'கௌரவப் பிரச்சினையை' புரிந்து கொள்ள முடியும்.

ஆக, அரசாங்கம் பேசத் தயார் என்று அறிவித்திருப்பது ஒரு முக்கியமான திருப்பம் தான்.

ஆனால், ஒருசில கேள்விகள் ஏழாமல் இல்லை.

பேச்சுவார்த்தைக்கு பிரபாகரன் கோரிக்கை முன்வைத்து இன்றுவரை ஒருவர் அபிப்பிராயம் தன்னும் அறிவிக்காமல் இருந்த அரசாங்கம் இப்போது அறிவித்தது ஏன்? இதற்கும் அடுத்தவாரம் பாரிஸில் நடக்கவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமர்வு நடைபெற இருப்பதும் இப்பதிலை அளித்து அவசர-மாகப் புலிகளைப் பேச அழைத்ததற்கு ஒரு காரணமாக இருக்கலாமா? அல்லது நோர்வே, மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளின் தூண்டுதல் காரணமாக தான் அரசியல் ரீதியாக அம்பலப்பட்டு விடுவேன் என்ற அச்சம் காரணமாக ஒப்புக்கு ஒப்புக் கொண்டிருக்கிறதா?

சொல்லத் தெரியவில்லை.

ஆனால், அரசாங்கத் தரப்பில் பேச்சுவார்த்தையில் நோர்வே காட்டும் தீவிரத்தை, புலிகள் காட்டும் அக்கறையை இலங்கை அரசு காட்டுவதாகத் தெரியவில்லை.

நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் லண்டனுக்குச் சென்று அன்ரன் பாலசிங்கத்-துடன் பேச்சுர்வார்த்தை தொடர்பாகவும் அதை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவை-யான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது தொடர்-பாகவும் பேசுவதாக இக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது செய்தி கிடைத்தி-ருக்கிறது. புலிகளின் சார்பில் பேச்சுவார்த்தை தொடர்பாக கருத்து தெரிவித்த பாலசிங்கம், புலிகள் மீதான தடையை நீக்குவது பேச்சுவார்த்தைக்கு அவசியம் என்று ஏற்கெனவே சொல்லியிருந்தார். தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கத்துடனான பேச்சுவார்த்தை சட்டபூர்வ வடிவம் பெறுவதில் உள்ள சிக்கலையும், நடைமுறை சார்ந்த சிக்லையும் அவர் கணக்கிலெடுத்தே இவ்வாறு தெரிவித்திருந்தார். ஆனால், அரசாங்கம் அந்த விடயத்தை அவ்வளவு முக்கியமான விடயமாகக் கருதுவதாகத் தெரியவில்லை.

பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்த அன்றே, புலிகளை உலக நாடுகள் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தாம் தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று தெரிவித்திருக்கிறார் கதிர்காமர்.

இலங்கை அரசுக்கு ஆசை, பேச்சு-வார்த்தைக்கு போகாமலே, புலிகளை அடக்கிவிட்டு தாம் விரும்பிய விதத்தில் ஒரு தீர்வைத் திணித்துவிட ஆசை. இத்தனை நாள் முயன்றும் அது முடியாமல் போனது அதன் துயரம். பேசத்தான் வேண்டும் வேறு வழியில்லை என்பது அதற்கேற்பட்டுள்ள வெப்பியாரம். அரசியல் ரீதியாக உலக நாடுகளாலும், உள்நாட்டிலும் தாம் அம்ப-லமாகி விடுவோமோ என்ற அச்சம். அதனை பேச்சுவார்த்தையை நோக்கி தள்ளியிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் தான் இந்தப் பேச்சுக்கு அதை ஒப்புக்கொள்ள வைத்திருக்கிறது.

இதைத்தான் கதிர்காமரின் இந்த அறிவிப்பு வெளிப்படுத்துகிறது என்று சந்தேகிக்காமல் இருக்க முடியவில்லை.

ஆக நடக்கப் போகும் பேச்சுவார்த்தை வெறும் ஒப்புக்கு நடக்கப் போகிறதா? எதிராளியில் எப்படிப் பிழைபிடிக்கலாம் என்ற விடயத்தில் கவனத்தினைக் குவித்தபடி, தீர்வுகாண்பது என்ற நோக்கததை விட்டுவிட்டு, செயற்படப் போகிறதா அரசு?

அல்லது, முழு மன ஒப்புதலுடன் நடக்கப் போகிறதா?

அரசின் அறிக்கை இதை தெளிவுபடுத்-தவில்லை.

இதயசுத்தி இல்லாத எந்த முயற்சியும் வெற்றிபெறாது.

இதில் துயரம் என்னவென்றால், பேச்சுவார்த்தை வெற்றிபெறாவிட்டால் தோல்வியின் துயரத்தையும் சுமையையும் சுமக்கப் போறவர்கள் மக்கள் தான்.

இந்த நாட்டு மக்கள்

தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல, அனைத்து மக்களும்தான்!


நாசமறுப்பான்.

> ஆனாலும், தனது பதவிக்காலம் முழுவதும் புலிகளை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி வீசிவிட வேண்டும் என்ற வேகத்துடன் செயற்பட்ட முக்கிய அமைச்சர்கள் ஒருசிலரில் மிகவும் தீவிரமானவர் கதிர்காமர். சந்திரிகா கூட புலிகள் மீது கதிர்காமர் கக்கியளவு கூர்மையான வாாத்தைகளைப் பாவித்ததில்லை எனலாம். அவ்வளவு வேகம் இருந்தது அவருக்கு.

எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 10

# இராசதுரை மறுநாள் தொடர்பு கொள்ளவில்லை!





செல்லையா இராசதுரையின் பெயரை முதன்மை வேட்பாளராகக் கொண்டு தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியல் கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிவந்திருந்தது.

இராசதுரை எங்கே இருக்கிறார். தேர்தலில் போட்டியிடுவதற்கு இராசதுரை வருவாரா? மலேஷியாவில் குடியேறி விட்ட அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு இங்கே வருவாரா? இப்படிப் பல கேள்விகள் மட்டக்களப்பு மக்கள் மத்தியில் மட்டுமல்ல, இலங்கையில் பல பாகங்களிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்தன. இதே கேள்வியும் அதைத் தொடர்ந்த கருத்துப் பரிமாற்றங்களும் எமது தினக்கதிர் பத்திரிகை ஆசிரிய பீடத்திலும் எழுந்தது. இச்சமயத்தில் எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது.

"தம்பி எப்படி இருக்கிறீங்க. நான் இராசதுரை பேசுகிறேன்."

"நல்லாயிருக்கிறேன். அண்ணன் எப்படி இருக்கிறார். எங்கே இருக்கிறார்."

அண்ணன் கொழும்பில் தானிருக்கிறார்: நீங்கள் எங்கே இருந்து பேசுறீங்க?

"தம்பி, உங்க, குரல் இன்னமும் அப்படியேதானிருக்கிறது"

அரசியலில் நிறைந்த அனுபவம் கொண்ட சொல்லின் செல்.......?

"உங்கள் குரலும் அப்படியேதான் இருக்கிறது: அண்ணே எங்கே இருந்து பேசுகிறீங்க?"

"பக்கத்திலிருந்து தான் பேசுறேன்.

கதிர்காமதத் தம்பி இல்லையோ?

"கதிர்காமத்தம்பி இப்போ வாறதில்லை" என்று நான் பதில் சொன்னதும் அவருடன் எப்படித் தொடர்பு கொள்வது என்று இராசதுரை கேட்டார்.

"உங்கள் தொலைபேசி இலக்கத்தைத் தந்தால் கதிர்காமத்தம்பியை உங்களுடன் பேசச் சொல்லுகிறேன்" என்று கேட்டேன்.

நான் நாளைக்கு இதே நேரம் பேசுகிறேன். அவரைத் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்தை வாங்கி வையுங்க: நான் அவசியம் அவரோடு பேசவேண்டுமென்றும் அவரிடம் சொல்லுங்க" என்று ராஜா அண்ணா பல வருடங்களுக்குப் பின் முதல் தடவையாக என்னுடன் பேசிய போது கேட்டுக் கொண்டார்.

பக்கத்திலிருந்து பேசுகிறேன் என்று சொன்னாரே தவிர எங்கேயிருந்து பேசுகிறாரென்பதையோ, தொலைபேசி இலக்கத்தையோ தரவில்லை.

இராசதுரை அமைச்சராக இருந்த போது அவரது நண்பரான எனது அண்ணா அவரைச் சந்திப்பதற்கு ஒரு தடவை அவரது அமைச்சுக்குச் சென்றிருந்தும் சந்திக்கக் கிடைக்கவில்லையென்று பின்னர் ஒரு சமயம் அண்ணன் என்னிடம் கூறியதும் நிவைுக்கு வந்தது.

ராஜா அண்ணாவை நான் சந்தித்தது அவர் தமிழரசுக் கட்சியில் தீவிரமாக இருந்த காலத்தில் மட்டுமல்ல கட்சிக்குள் கருத்துவேற்றுமை ஏற்பட்ட சமயத்தில் ஒரு நாள் தாமரைக்கேணி வீதியில் பட்டிருப்பு பூ.கணேசலிங்கத்தின் இல்லத்தில் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற போது கூட்டம் முடிந்த பின் வந்த இராசதுரை வேண்டா வெறுப்பாக வெளியே உட்கார்ந்திருந்ததும் ஆதரவாளர்களும், கட்சிப் பிரமுகர்கள் சிலரும் இராசதுரையைச் சமாதானம் செய்ததும், சாப்பிடவரும்படி கணேசலிங்கமும் மற்றவர்களும் அழைத்த போது நான் மருந்து சாப்பிடுகிறேன். பத்தியம் தான் சாப்பிட வேண்டும் என்று மறுத்துவிட்டதும் அங்கு என்னையும் கதிர்காமத்தம்பியையும் பார்த்து நலன் விசாரித்ததும் எனக்கு நினைவிருக்கிறது.

மட்டக்களப்பில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கட்டிடத்தில் பிரதேச தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்ற சமயத்தில் மகாநாட்டில் இராசதுரை அவ்வளவாகப் பங்குபற்றவில்லை. ராஜன் செல்வநாயகமே அந்த மாநாட்டில் அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தார். இச்சமயத்தில் மகாநாடு முடிவடைந்த கடைசி நாளன்று மகாதேவாவையும் (அப்பொழுது மகாதேவா 'ஈழநாடு' பத்திரிகையில் இல்லை) என்னையும் மதிய உணவுக்கு அழைத்திருந்தார். நாங்கள் போயிருந்தோம். அவரது புதிய வீட்டில் அன்று நண்டுக்கறி சிறுகுறிஞ்சாக் கீரையுடனும் சாப்பாடு. (வயிற்றில் கோளாறு ஏற்படவில்லை.) இவை நடந்து பல வருடங்கள்.

மீண்டும் கடந்த பொதுத்தேர்தலில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின் தொலைபேசியில் பேசிய இராசதுரை எனது குரலை மறக்கவில்லை!

ராஜா அண்ணா தொலைபேசியில் என்னுடன் பேசியதை அன்று மாலை நண்பர் இரா பத்மநாதனுடன் பேசியபோது சொன்னேன். எங்கேயிருந்து பேசினாரோ தெரியவில்லை என்றேன். அவர் மலேசியாவிலிருந்து தான் பேசியிருப்பார். இங்கு வந்ததாகத் தெரிய வில்லை. சில மாதங்களுக்கு முன் வந்திருந்த போது கூட அடுத்த நாள் மதியம் வரச் சொல்லி விட்டு சொல்லிக் கொள்ளாமலே மலேசியா போய் விட்டார். அவர் ஒரு மர்ம மனிதர் என்று பத்மன் சொன்னார்.

> ராஜா அண்ணா தொலைபேசியில் என்னுடன் பேசியதை அன்று மாலை நண்பர் இரா பத்மநாதனுடன் பேசியபோது சொன்னேன். எங்கேயிருந்து பேசினாரோ தெரியவில்லை என்றேன். அவர் மலேசியாவிலிருந்து தான் பேசியிருப்பார். இங்கு வந்ததாகத் தெரியவில்லை. சில மாதங்களுக்கு முன் வந்திருந்த போது கூட அடுத்த நாள் மதியம் வரச்சொல்லிவிட்டு சொல்லிக் கொள்ளாமலே மலேசியா போய்விட்டார். அவர் ஒரு மர்ம மனிதர் என்று பத்மன் சொன்னார்.

தேர்தல் வருமுன்பே வழக்குத் தொடரப்பட்டதுடன் இராசதுரை தேர்தலில் பேட்டியிடுவதற்கு கிண்டலாக எதிர்ப்புத் துண்டுபிரசுரம் வெளி வந்ததும் பின்னர் தேர்தலில் இராசதுரை பற்றிய பேச்சே வெளிவராமல் போனதும் தெரிந்த கதை தான்.

மறுநாள் கதிர்காமத்தம்பியின் தொலைபேசி இலக்கத்தைத் தெரிந்து கொள்வதற்கு இராசதுரை தொலைபேசியில் தொடர்பு கொள்ளவே இல்லை!

# சுகபோகச் சாமியார்கள்

இன்றைக்கு நாட்டில் அதிக சுகபோகமாக வாழ்பவர்கள் யார் தெரியுமா?

சாமியார்கள் தான். அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும். எங்கே அநியாயமும், அக்கிரமமும், ஏமாற்று வித்தைகளும் அதிகம் என்று நினைக்கிறீர்கள்? தேவையானதெல்லாம் சுகபோகமான வாழ்வு மட்டும் தான். 12வது போப்புக்கும் ஹிட்லருக்கும் இருந்த உறவு அம்பலமான விடயமாகி விட்டது. இதனை விட வேறேது வேண்டும். இஸ்லாமிய நாடுகளில் மதத் தலைவர்கள் வெளிப்படையாகவே அரசியலதிகாரத்திற்காக நிற்பது புதிதல்ல.



இந்த சாமியார்கள் வாழும் அவர்களுடைய வழிபாட்டிடங்களில் தான். இந்தியாவின் அரசியலில் சந்திரா சுவாமி என்பவரின் காலில் விழுவதற்கு மாபெரும் அரசியல்வாதிகள் கூடத் தயாராக இருந்தனர். சந்திராசுவாமி அரசியலிலும் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தார். சாயிபாபாவின் கோட்டைக்குள்ளேயே கொலைகள் விழுந்தன. அரசியல் செல்வாக்கு அனைத்தையும் மூடி மறைதது விட்டது. பிரேமானந்தாவின் காமக்களியாட்டங்களுக்குப் பலியான பெண்கள் அநேகம். அவர் இன்னமும் சிறையில் சகல சௌபாக்கியங்களுடனும் இருந்து வருகிறார். அரசியல்வாதிகள் சிறை சென்று அவர் காலில் விழுகிறார்கள்.

இந்தச் சாமியார்களுக்குத் தெரியும். இறைவனிடம் அல்ல உலகை ஆட்டிப் படைக்கும் சக்தி இருக்கிறது என்று. அரசியல், அரசியல் அதிகாரம் தான் அனைத்துக்குமான மூல காரணம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இந்தியா இதற்கு நல்ல உதாரணம். அரசியலதிகாரமும், பணபலமும் தான் உலகத்தின் உயரோட்டம் கடவுள் அல்ல என்று நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் இவர்கள். சாயிபாபா சாமான்யர்க[illegible]ய திருமண வீட்டிற்குச் சென்று தனது மந்திரத்தாலோ தந்திரத்தாலோ தாலி எடுத்துக் கொடுக்க மாட்டார். ஏன் எங்களுடைய நாட்டில் பௌத்த மத குருமாருக்கு அரசியலிலும் சமூகத்திலும்' இருக்கின்ற இடத்தைப் பாருங்களேன். சன நெரிசல் நிறைந்த பஸ்ஸில் ஓட்டுனருக்கு பின்னாலுள்ள இருக்கையில் தனது கைக்குழந்தையுடன் இருந்து செல்லும் பெண்கூட பௌத்த மதகுரு பஸ்ஸில் ஏறியதும் கைக்குழந்தையை ஒற்றைக்கையில் பிடித்தபடி மற்றக் கையால் மேலுள்ள கம்பியைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டு பௌத்த குருமாருக்கு இருக்கையை விட்டக் கொடுக்கும் காட்சியை நாங்கள் அடிக்கடி காண்கிறோம் அல்லவா? மக்களுக்காக அவர்கள் எதையும் ஒறுப்பதில்லை. எவருக்காகவும் அவர்கள் எதையும் ஒறுத்ததில்லை. அவர்களுக்குத் ஊர்ப்பணத்தில் சொகுசாக வாழும் சந்தர்ப்பத்தை விட்டு வைக்க எந்தமதச் சாமிமாருக்குத் தான் மனம் வரும்?

அருகிலுள்ள படத்தைப் பாருங்கள். ஊஞ்சலில் அவர் படுத்துறங்க, ஊஞ்சலைத் தாலாட்ட கொஞ்சம் எடுபிடிகள்.கால்பிடிக்க, கைபிடிக்க கொஞ்சம் இளசுகள், பசி வரும் போது படையல் படைக்க எடுபிடி ஆட்கள், வேறு பசியானால் அவ்வப்போது சிறு பையன்கள்,மற்றும் பெண்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? தாகமெடுதால் உற்சாகபானமும் உண்டு. சாமியார் பொழுதுபோக்காக வானம்பாடி வானொலிச் சேவையிலும், சக்தி எவ்.எம்மிலும் சினிமாப்பாடல் விரும்பிக் கேட்பார். இதை விட சுகபோகம் வேறென்ன வேண்டும்?

இதெல்லாம் எங்கு என்கிறீர்களா? வவுனியாவில் தான்.

பெயர் பவா. சொந்த இடம் யாழ்ப்பாணம் அச்செழு. அங்கிருக்கும் போதே இவர் தனது செப்படி வித்தைகளை ஆரம்பித்து விட்டார். தன்னிடம் வருபவர்களுக்கு முக்காலத்தையும் கூறும் இந்தச்சாமிக்கு தன்னுடைய எதிர்காலம் தெரியாததாலோ என்னவோ 1995 இடப் பெயர்ச்சியோடு வன்னிக்கு இந்தச் சாமியும் இடம் பெயர வேண்டியதாயிற்று. மக்களின் அறியாமையும், அவலமும் தானே இவ்வாறானவர்களின் மூலதனம். வன்னியில் தனது தொழிலை ஆரம்பித்தார் இவர்.



⇨19

# புலிகளுடன் உறவை ஏற்படுத்த வேண்டும் என்றார் சிவராசன்

மனோ மாஸ்ரர் மற்றைய தோழர் இருவருக்கும் இதுவரை என்ன நடந்தது என்று எமக்குத் தெரியவில்லை. நாம் வழமை போல் ஈ.பி.ஆர்.எல்.எஃவ், ஈரோஸ் இன் இடங்களுக்குச் சென்று அவர்கள் ஏதாவது ரெலோவுடன் பேசினார்களா? புதிய செய்தி ஏதாவது தெரியுமா? எனக் கேட்டோம். நாம் ஈரோஸின் இடத்துக்குச் சென்று பாலகுமாரிடம் நிலைமைகளைக் கேட்டோம். பாலகுமார் சொன்னார்: ரெலோ தனக்கும் அவர்களின் தலைமறைவுக்கும் சம்பந்தமில்லை எனச் சொல்கின்றது. ஆனால், பஸ்ஸில் பிரச்சினைப்பட்ட நாலு இலங்கையரை பொலிஸ் பிடித்ததாகத் தான் கேள்விப்பட்டதாகவும் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் மறியல் வைத்துள்ளதாகவும் எம்மை விரும்பினால் விசாரித்துப் பார்க்கவும் சொன்னார். அவர் சொன்ன பிரதேசம் ரெலோவினரின் பிரதேசமாக இருந்தபடியால் திங்கட்கிழமை கியூ பிரிவினரின் உதவியுடன் போய் விசாரித்துப் பார்ப்பதாக முடிவெடுத்தோம்.

### பெண் போராளிகளைப் புலிகளுடன் சேர்ப்பதற்கு நிர்மலா முயற்சி

இந்த நிலையில் புலிகளுடன் இருந்த நிர்மலா நித்தியானந்தன் தமிழர் தகவல் நிலையத்துக்கு வந்து பெண்களுடன் கதைக்க விரும்புகிறார் எனவும், அவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக முடிவு செய்யச் சொல்லியும் வேண்டினார். அவரின் நிலைப்பாடு ரெலோ தான் இவர்களைக் கடத்தியது என்பதும் மிஞ்சி இருப்பவர்களை பாதுகாப்பதற்குப் புலிகள் தயாராக உள்ளதாகவும் நாம் கையெழுத்து வைத்துக் கொடுத்தால் புலிகள் எமக்குப் பாதுகாப்பு வழங்குவார்கள் என்பதுமாகும். விளக்கமாகச் சொல்வதென்றால் எம்மைப் புலிகளுடன் சேரச் சொல்லி அவர்களின் இடத்துக்கு கூட்டிப் போவதற்காகத் தான் நிர்மலா அங்கு வந்து எமக்கு தகவல் அனுப்பினார். எம்மைப் பொறுத்தவரையில் எந்த நிலையிலும் புலிகளுடன் உறவு வைத்துக் கொள்ள நாம் தயாராக இருக்கவில்லை. வேறு இடத்தில் இருந்த மற்றைய இருவரும் புலிகளின் உதவிகளைப் பெறுவது நல்லது என்று கருதினர். இவர்கள் இருவரைத் தவிர மிகுதிப் பேர் ஒரே கருத்தில் இருந்ததால் அவர்களின் கருத்து எடுபடவில்லை. அந்த இருவரில் ஒருவர் தான் பின்னர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு முக்கியமானவராகத் தேடப்பட்டு கொலை செய்யப்பட்ட சிவராசன்.

திங்கட்கிழமை காலையில் இருந்து கியூப் பிரிவினரின் அலுவலகத்தில் எம்முடன் தொடர்புள்ள அதாவது எம்மைக் கண்காணிக்கும் அதிகாரியுடன் சென்று இவர்களை விடுதலை செய்தோம். மனோ மாஸ்ரரும் மற்றைய தோழரும் மட்டுமல்ல ரெலோவைச் சேர்ந்த இருவரையும் கூட விடுதலை செய்தனர். விடுதலை செய்த ரெலோ உறுப்பினர் ஒருவரை அந்த அதிகாரி கூப்பிட்டு ரெயினிங் எல்லாம் முடிந்ததா என்று கேட்டார்.

உடனே அந்த உறுப்பினர் உ.பி றெயினிங் முடிந்தது எனவும் தான் அதில் விசேட பயிற்சி பெற்றதாகப் பெருமையாகவும் கூறினார். உடனே இந்த அதிகாரி எங்களைப் பார்த்து இவர்களை நம்பி இந்தியா றெயினிங் கொடுத்து இருக்கிறது. இங்கு றெயினிங் கொடுக்கப்பட்டது ஒரு இரகசியமாகப் பேணப்பட வேண்டியது எனவும் இவனோ வாந்தி எடுத்தவன் போல இந்தியாவைக் காட்டிக் கொடுக்கிறானே என்றார். எம்மை இனிமேல் அவர்களின் பிரதேசத்துக்குள் கவனமாக இருக்கும்படியும் கூறினார்.

இந்த மனோ மாஸ்ரரின் கடத்தல் நடவடிக்கையின் விளைவாக நாட்டிற்குச் சென்ற பல தோழர்களில் சிலர் எமது பாதுகாப்பிற்காக திரும்பிச் சென்னை வந்தார்கள். இந்த நிலையில் மனோ மாஸ்ரர் இங்கிருப்பது பிரச்சினை எனக் கருதி நாட்டிற்குச் சென்றார்.

### மனோ மாஸ்ரர் கொலை

நாட்டிற்குச் சென்ற மனோ மாஸ்ரர் இரு தினங்களுக்குள் கொல்லப்படவே எமது நிலைமை மோசமாகி விட்டது. ரெலோ தான் கொன்றார்கள் எனச் சென்னையில் புலிகளின் தயவில் இருந்த ரெலோவின் முன்னாள் இராணுவப் பொறுப்பாளர் ரமேஸும் அவர் குழுவினரும் கூறினர். எமக்கு அந்தக் கொலையைச் செய்தவர்கள் சம்பந்தமான தகவல்கள் கிடைத்திருந்தன. அந்தக் கொலையைச் செய்தவர்கள் புலிகள் எனவும் அந்தக் கொலையைச் செய்த நபர்களின் தகவல்களும் கிடைத்திருந்தன.

மனோ மாஸ்ரர் நாட்டிற்குச் சென்றவுடன் புலிகளினால் பின் தொடரப்பட்டு, பருத்தித்துறைப் பிரதேசத்திலுள்ள திக்கம் - தும்பளைப் பகுதியில், அதுவும் சனநெருக்கடியற்ற குடியிருப்புப் பகுதிகளில் கிட்டு மற்றும் ரவி என்ற இரு புலிகளினால் நிறுத்தப்பட்டு முப்பது நிமிடம் அளவில் வாக்குவாதப் பட்டதாகக் கூறப்பட்டது. இதில் பிரச்சினைப்பட்ட விடயமாவது ரெலோவில் இருந்து பிரிந்த எம்மைப் புலிகளுடன் சேர்த்து விட வேண்டும் என்பதாகும். இதற்கு உடன்படாத நிலையில் தப்பியோட மனோ மாஸ்ரர் முயற்சித்தார் எனவும் அருகில் இருந்த மதில் மேலாக தப்பியோட வெளிக்கிட்ட இவரை இவர்கள் இருவரும் சுட்டுக் கொன்றார்கள் என்பதுமாகும். இது நேரில் பார்த்த மக்களின் வாக்கு மூலமாகும். இந்த முழுமையான செய்திகள் உடனடியாக எமக்குத் தெரியாவிட்டாலும் புலிகள் கொன்றார்கள் என்ற செய்தி சென்னையிலிருந்த எமக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. புலிகள் இந்தக் கொலையை உரிமை கோருவதைத் தவிர்த்திருந்தனர். முக்கியமாக இதன் பழி ரெலோவிடம் விழும் எனவும் மனோ மாஸ்ரரின் செல்வாக்கு புலிகளின் கோட்டையான வல்வெட்டித்துறையில் அதிகம் என்பதாலும் வதிரி மக்களிடம் பிரச்சினைகளை வளர்த்துக் கொள்வதை அப்போது புலிகள் தவிர்த்திருந்ததாலும் இக்கொலைக்கு உரிமை கோரவில்லை. இவ்வேளையில் புலிகளுடன் உள்ள ரமேஸ் குழுவினர் மனோ மாஸ்ரரின் கொலைக்கு ரெலோவைப் பழிவாங்கப் போவதாகவும் எமக்குப் பாதுகாப்புத் தருவதாகவும் சொன்னார்கள். ஆனால் எமக்கு உடன்பாடில்லாத ஒருவர் எம் தோழரின் கொலைக்கு பிழையான இடத்தில் பழி வாங்குவது நாம் அவர்களை எமக்கு பாதுகாப்பு தருமாறு கேட்காமலேயே எமக்கு பாதுகாப்பு தருவது என்பது பிரச்சினையானதாகும். அவர்களுக்கு நாம் அவர்களின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை முரண்படாத வகையில் தெரியப்படுத்தினோம். ஆயுதம் உள்ள ரமேஸ் குழுவினரும் அவர்களின் பின்னால் உள்ள புலிகளுடன் ஆயுதமற்ற நிராயுதபாணிகளாக நிற்கும் எமக்கும் உறவுகளே இல்லை என்று அவர்களுக்குச் சொல்வது இலகுவான காரியமல்ல. அவர்களை எமது இருப்பிடத்துக்கு வரவேண்டாம் என்று பல தடவை சொன்னாலும் அவர்கள் வந்தார்கள். கடைசிக் கட்டமாக இவர்கள் வந்தால் நாம் தேநீரோ உணவோ கொடுப்பதில்லை. இது ரமேஸ் குழுவினரின் மிகப் பெரிய கேவலமான வேலையானது. வதிரியைச் சேர்ந்த ரெலோ உறுப்பினர்களையும் தமது விசுவாசிகள் எனப்படுபவர்களையும் ரெலோ வீட்டுக்குள் போய் தம்முடன் அழைத்துக் கொண்டு சென்றனர். அதன் பிறகு தமது பாதுகாப்பிற்காகவும் எம்மை ரெலோவுடன் முரண்பட வைப்பதற்காகவும் இரவு நேரங்களில் எமது பாதுகாப்பிற்கு வருபவர்கள் போல் வந்து தங்கினர். அவர்களின் நோக்கம் எமது இடத்துக்கு ரெலோ தேடி அங்கு வராது என்பதும் வந்தாலும் பெண்கள் உட்பட நாம் அங்கிருப்பதால் அதன் விளைவு எம்முடன் சம்பந்தப்படுவதால் விளைவுகள் எம்மைப் புலிகளுடன் சேர்க்கப் பண்ணும் என்பதாகும்.

> எம்மைப் புலிகளுடன் சேரச் சொல்லி அவர்களின் இடத்துக்கு கூட்டிப் போவதற்காகத் தான் நிர்மலா அங்கு வந்து எமக்கு தகவல் அனுப்பினார். எம்மைப் பொறுத்தவரையில் எந்த நிலையிலும் புலிகளுடன் உறவு வைத்துக் கொள்ள நாம் தயாராக இருக்கவில்லை. வேறு இடத்தில் இருந்த மற்றைய இருவரும் புலிகளின் உதவிகளைப் பெறுவது நல்லது என்று கருதினர். இவர்கள் இருவரைத் தவிர மிகுதிப் பேர் ஒரே கருத்தில் இருந்ததால் அவர்களின் கருத்து எடுபடவில்லை. அந்த இருவரில் ஒருவர் தான் பின்னர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு முக்கியமானவராகத் தேடப்பட்டு கொலை செய்யப்பட்ட சிவராசன்




**ஒரு தமிழீழப் போராளியின் கதை**

### வீடு மாறுதலும் கியூப் பிரிவினர் உதவியும்

பொலிசினால் ஏற்பட்ட பிரச்சினையாலும் ரமேஷ் குழுவினரின் பிரச்சினையைத் தவிர்க்கும் முகமாகவும் வேறு இடத்துக்கு வீடு மாறினோம். இந்த வீட்டினை எடுப்பதற்கு கியூப் பிரிவினர் நிறைய உதவி செய்திருந்தனர். எம்மால் வீட்டுக்காரருக்கு எந்தப் பிரச்சினையும் வராது என்று வீட்டு உரிமையாளருக்கு கியூப் பிரிவு அதிகாரி அளித்த உறுதியின் பின் தான் எமக்கு வீடு கிடைத்தது. அந்த அதிகாரி செய்த உதவி எமக்குப் பெரிய விடயமாக இருந்தது. நாம் ரெலோவின் பிரதேசத்தை விட்டு தூரமாகவும் ரமேஷ் குழுவினருக்குத் தெரியாமலும் இந்த வீட்டுக்கு மாறினோம். வீட்டுக்கு மாறி இரு வாரங்களில் ரமேஷ் குழுவினர் எமது இருப்பிடத்தினைக் கண்டு பிடித்து விட்டனர். வீட்டுக்கு வந்த ரமேஷை வீட்டின் வெளியில் வைத்தே அனுப்பி விட்டோம். அப்போது எமக்கிருந்த பிரச்சினை வீட்டு வாடகைக்காகவும் சாப்பிடுவதற்காகவும் பண வசதிகளை ஏற்படுத்துவது என்பதாகும். மனோ மாஸ்ரர் கொலையின் பின் இந்தியாவில் சில காலம் தங்குவதைத் தவிர வேறு வழி எமக்கு இருக்கவில்லை. வாடகை என்பதை விட ஒரு வருட முற்பணம், மற்றும் எமது நாளாந்த சாப்பாட்டுச் செலவு என்பவற்றிற்கு ஏதாவது வகை பண்ணும் வகையாக பலரை அணுகினோம். சிலர் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் தரவில்லை. சிலர் சிறிய அளவு தொகை தந்தார்கள். எனவே நாட்டிற்குப் போய் ஏதாவது வழி பண்ணும் முகமாக நானும் சுந்தரம் என்ற தோழரும் நாட்டுக்குப் புறப்பட்டோம். நாட்டில் எம்முடன் இருந்த பலர் ஏற்கெனவே நாட்டில் நாம் நிற்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். நாட்டிற்கு புறப்படும் போது என்னுள் பல கேள்விகள் எழுந்தன. நாம் உயிருடன் திரும்பி வருவோமா? வராவிட்டால் இங்குள்ளவர்களின் நிலைமை என்ன? வீட்டில் என்னை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்? நாட்டின் விடுதலைக்காக இயக்கத்தில் சேர்ந்து இயக்கத்திற்காகப் பலரையும் உள்வாங்கி இப்போது நாம் வளர்த்த இயக்கம் பிழை எனவும் வித்தியாசமான போராட்டத்தினை நாம் நடத்திக் கொண்டிருப்பதாகச் சொன்னால் அவர்கள் நம்புவார்களா? இது போன்ற பல கேள்விகள். எதுவாயிருந்தாலும் திரும்பி நாட்டிற்குச் செல்கிறேன்.

### வீடு திரும்புதல்

எனது அம்மா சகோதரிகள் நண்பர்கள் ஊரவர்கள் எல்லோரையும் பார்க்கப் போகிறேன் என்ற சந்தோசத்திலும், அதே நேரத்தில் ஒருவிதப் பயத்துடனும் திருவள்ளுவர் பஸ்ஸில் வேதாரண்யம் நோக்கிச் சென்றோம். ஈ.பி.ஆர்.எல்.எஃவ் இன் படகில் போவதற்கான ஏற்பாடுகளைச் சென்னையில் செய்திருந்தோம். எனவே ஈ.பி.ஆர்.எல்.எஃவ் இன் வீட்டில் இருந்து அடுத்த நாள் இரவு எமது பயணம் தொடங்கியது. இந்தப் படகில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் சொந்தத் தயாரிப்பான மோட்டார் துப்பாக்கியைப் பொருத்தினார்கள். நமது பாதுகாப்பிற்காகவும் இலங்கைக் கடற்படை தாக்கும் போது திருப்பித் தாக்குவதற்காக என்றும் விளக்கம் சொன்னார்கள். அப்போதும் எனக்குள் ஒரு சந்தோசம். இவர்கள் கடற்படையின் தாக்குதலுக்கு ஈடாக தாக்குதல் செய்வதற்கு தயாராகத் தற்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளனர். எனவே பயமில்லை. மத்தியானம் சோறு சாப்பிடும் போது சுந்தரம் சாப்பிட மறுத்து விட்டார். கடலில் பிரயாணம் செய்யும் போது தனக்கு வாந்தி வரும் என்பதால் சாப்பிடவில்லை எனச் சொன்னார். எனக்கு முதன் முறை வரும் போது வாந்தி ஒன்றும் வராதபடியால் நான் நன்றாக சோறு சாப்பிட்டேன். அவரோ என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருந்தார்.


தொடரும்

தேவமகன்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு: பலியிடப்படும் இளம் பெண்கள்!

– நிராஜ் டேவிட்

ஓட்டமாவடியைச் சேர்ந்தவர் சபீனா. இந்தப் பெண் தனது எதிர்காலம் பற்றிய கனவுகளோடும், நம்பிக்கைகளோடும் 13.09.89 அன்று குவைத் நாட்டிற்கு பணிப்பெண்ணாக தொழில் புரியச் சென்றார். அவருடைய பெற்றோருக்கு அவ்வப்போது சில கடிதங்களும், கொஞ்சம் குவைத் டினார்களும் வந்தன. 1990ம் ஆண்டு ஏற்பட்ட ஈராக் - குவைத் யுத்தத்தைத் தொடர்ந்து பெற்றோருக்கு இவருடனான தொடர்புகள் அற்றுப் போயின. ஏழைப் பெற்றோர், இந்தப் பெண்ணின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதற்காக எல்லாவித முயற்சிகளையும் மேற்கொண்டனர். இவரை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்த 'கல்ப் லங்கா' வெளிநாட்டு முகவர்



நிறுவனத்தின் ஊடாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வித பயனும் கிடைக்கவில்லை. சுமார் 9 வருடங்களின் பின்னர் 1998ம் வருடம் ஆவணி மாதம், இந்த அரசில் அங்கம் வகிக்கும் ஒரு பிரபல முஸ்லிம் அமைச்சரின் உறவினர் வீட்டில் இந்தப் பெண் தங்கி இருப்பதாகத் தகவல் கிடைத்து. இதனைத் தொடர்ந்து இவரது பெற்றோர் கொழும்பில உள்ள குறிப்பிட்ட அந்த வீட்டிற்குச் சென்ற போது, அந்தப் பெண் தன்னிலை மறந்த நிலையில் அங்கு இருப்பதைக் கண்டு திகைத்தனர். பெற்றோரையே அவளால் அடையாளம் காண முடியவில்லை.

பின்னர் அந்தப் பெண் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டாள். கல்வி அறிவில் பின் தங்கிய இந்த அப்பாவி பெற்றோரால் அந்தப் பெண்ணிற்கான நீதியையோ அல்லது நிவாரணத்தையோ கேட்டுப் பெற முடியவில்லை.

* ஓட்டமாவடியைச் சேர்ந்த றிபாயா என்ற பெண் 25.07.96 அன்று துபாய் நாட்டிற்கு பணிப் பெண்ணாகச் சென்றார். கொச்சிக்கடை மௌலானா என்கின்ற வெளிநாட்டு முகவரே இவரை துபாய்க்கு அனுப்பி வைத்தார். போனவர் போனது தான். கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இவரது தொடர்புகள் எதுவும் பெற்றோருக்கு இல்லை.

* மட்டக்களப்பைச் சேர்ந்த விக்னேஸ்வரி தெய்வேந்திரம் என்ற பெண் 21.09.96 அன்று 'லெபனான்' நாட்டிற்குப் பணிப் பெண்ணாக தொழில் புரியச் சென்றாள். நான்கு பிள்ளைகளின் தாயான இந்தப் பெண் இப்பொழுது எங்கு இருக்கின்றாள் என்று தெரியவில்லை.

* சம்மாந்துறையைச் சோந்த முகமட் ஹனிபா (கடவுச்சீட்டு இல: L0969532) என்பவர் 16.02.96 இல் பியூட்டி லங்கா என்டர் பிறைசஸ் என்ற வெளிநாட்டு முகவர் நிறுவனத்தின் மூலம் ஜெட்டா சென்றுள்ளார். இந்தப் பெண்ணிற்கும் என்ன நடந்தது என்கின்ற விபரம் இதுவரை தெரியவில்லை.

இந்தப் பெண்களுடைய பெற்றோர்களோ அல்லது உறவினர்களோ இவர்கள் பற்றிய விபரங்களை, இவர்கள் இன்னமும் உயிருடன் இருக்கிறார்களா? இருந்தால் எங்கிருக்கிறார்கள்? இவர்களுடன் எப்படித் தொடர்புகளை ஏற்படுத்துவது? என்று திணறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் தமது பெண்ணை அனுப்பி வைத்த ஏஜெண்ட் மட்டும் தான்.

அவர்கள் ஏஜெண்ட்டைத் தொடர்பு கொண்டார்கள்.

**முகவர் நிலையம் உதவ மறுப்பு:**

றிபாயா என்ற பெண்ணை 'கொச்சிக்கடை மௌலானா' என்ற வெளிநாட்டு முகவரே அனுப்பி வைத்திருந்தார். இவளது தொடர்பின்றி தவித்த பெற்றோர் குறிப்பிட்ட முகவரை அணுகிய போதும் அவர்களுக்கு சரியானபடி உதவி வழங்க இந்த முகவர் நிலையம் மறுத்து விட்டது.

இதேபோன்று சபீனா என்ற பெண் 'கல்ப் லங்கா' என்ற முகவர் நிறுவனம் மூலமாகவே துபாய் சென்றிருந்தார். இந்த முகவர் மூலமாகவும் சபீனாவின் உறவினர்களால் அவளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை.

சம்மாந்துறையைச் சேர்ந்த அஹறா என்பவர், மருதானையில் உள்ள 'பியூட்டி லங்கா என்டர்பிறைசஸ்' என்ற வெளிநாட்டு முகவர் நிலையம் ஊடாகவே தொழில் பெற்றுச் சென்றுள்ளார். இவரது மீட்பிற்கும் இந்த முகவர் நிலையத்தால் உதவ முடியவில்லை.

இதற்கு மேல் இந்தப் பெற்றோர்களாலோ அல்லது உறவினர்களாலோ எதுவம் செய்ய முடியவில்லை.

ஏழ்மையும், அறியாமையும், இயலாமையும், அவர்களது பெண் பிள்ளைகளை மீளப் பெற வழி சமைக்காது தடுத்து வருகின்றன.

அறியாமை காரணமாக பிழையான வெளிநாட்டு முகவர்களிடம் அநியாயத்திற்கு ஏமாந்து நிற்கும் இவர்களது சோகம், வார்த்தைகளால் விபரிக்க இயலாதது.

**முகவர்களின் ஏமாற்று வித்தை:**

வெளிநாடு செல்லும் பெண்களில் அனேகமானவர்கள் இந்த முகவர்களினால் ஏமாற்றப்படுவது தொடர்கிறது. கடவுச் சீட்டு எடுப்பது முதல் வெளிநாட்டில் வேலைசெய்வது தொடர்பான பயிற்சி வழங்குவது என்றும், "விசா" எடுப்பது என்றும் கூறி கொழும்புக்கு அழைத்துச் சென்று, பலவகைகளிலும் இப் பெண்கள் ஏமாற்றப்படுகின்றார்கள்.

மோசடியான கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த முகவர்கள் பல ஆயிரம் ருபாய்களை பெற்றுக் கொள்கின்றார்கள். 18 வயதிற்குக் குறைவான பெண்களுக்கு தமது வயதை அதிகரித்து காண்பித்து, கடவுச் சீட்டுப் பெறுவதற்கும், தமிழ் பெண்கள் முஸ்லிம் பெண்களின் பெயர்களில் கடவுச்சீட்டு பெறுவதற்கும், 10 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரையில் இந்த முகவர்களுக்கு வழங்க வேண்டி உள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலரது சகோதரனும், ஓட்டமாவடி பிரதேசத்சில் வசிப்பவருமான ஒரு வெளிநாட்டு உதவி முகவரே, இப்படியான மோசடிக் கடவுச்சீட்டு பெற்றுக் கொடுப்பதில் பிரபல்யமானவர் என்று, பல பணிப்பெண்கள் மூலம் அறிய முடிந்தது.

**போகுமிடம் ஏது?**

கிரான் பிரதேசத்தில் உள்ள 'தடாகம்' கிராமிய மக்கள் நிறுவனத்தில், இரண்டு நாட்களில் மத்திய கிழக்கு நாடொன்றிற்கு பயணமாக இருந்த இரண்டு இளம் பெண்களை சந்திக்க் முடிந்தது. ஜீவா, யோகமலர் என்ற அந்த இருவருக்கும் மறுநாள் தாம் பயணமாக இருக்கும் நாட்டின் பெயர் தெரிந்திருக்க-



வில்லை. தம்மை வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவரின் பெயரோ விபரமோ தெரிந்திருக்கவில்லை. அவர்களது கைகளில் அவர்களது கடவுச் சீட்டுக்களும் கிடையாது. மறுநாள் அந்த முகவருடன் அவர்கள் கொழும்பிற்குச் சென்றதும், அவர்களுக்கான கடவுச் சீட்டுக்கள், விமானப் பயணச் சீட்டுக்கள் என்பன வழங்கப்பட உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு மேல் அவர்களுக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், எதிர்கால வாழ்க்கை, இங்குள்ள வறுமை நிலை என்ற காரணங்களுக்காக, இளம் பெண்கள் மேற்கொள்ளும் இந்த வெளிநாட்டுப் பயணங்களில் அனேகமானவை கடைசியில் அவர்களுக்கு ஒரு பாதகமான முடிவையே ஏற்படுத்துவதாக அமைகின்றதை இங்கு அனுபவம் வாயிலாக அறிய முடிகின்றது.

பெண்களின் கற்புக்கு இலக்கணம்(?) வகுத்ததாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் தமிழ் சமூகமும், தமது பெண்களின் முகத்தைக்கூட மற்றைய ஆடவர் பார்ப்பதற்கு அனுமதிக்காது 'பர்தா' போட்டு மறைக்கும் முஸ்லிம் சமூகமும், தம் வீட்டுப் பெண்கள் வேறு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் சென்று அங்கு அவர்கள் எதிர் கொள்ளும் சீரழிவுகளையும், கலாசாரச் சீர்கேடுகளையும், தெரிந்தும் அனுமதிக்க வேண்டிய நிலை. வறுமையும் வேலையின்மையும், எல்லாவற்றையும் விட பலமான சக்தியாக நின்று இவர்களை அங்கு விரட்டுகிறது. ஆனால், இதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் மௌனம் காப்பது தான் விந்தை. அரசாங்கத்தின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமோ, வெளிநாட்டமைச்சோ இவ்வாறு தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வோருக்கு போதிய பாதுகாப்பை வழங்குவதோ இங்குள்ள முகவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோ இல்லை. வெளிநாடு சென்று திரும்பும் ஒரு பெண்ணின் பொருளாதார முன்னேற்றமும், அவளது மெருகூட்டப்பட்ட வெளித் தோற்றமும் மட்டுமே இங்குள்ளவர்களால் நோக்கப்படுகின்றன. ஆனால், இந்தப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவள் கொடுத்த 'விலை' பற்றி எவரும் கவலைப்படுவதாகவோ அறிந்து கொள்ள முயற்சிப்பதாகவோ தெரியவில்லை. வெளிநாடுகளுக்கு சென்று திரும்பும் பெண்களும் பயத்தாலும் அவமானத்தாலும் சாதாரணமாக தாம் அனுபவித்த சௌகரியங்களையும், நன்மைகளையும் மட்டுமே வெளியே சொல்வது வழக்கம்.

அங்கு அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், அவர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் பற்றி, எமது சமூகத்தின் இறுக்கமான கட்டமைப்பு பற்றிய அச்சம் காரணமாக வெளியே கூறுவதற்கு முன்வருவதில்லை.

முகவர்களின் சுத்துமாத்துக்களையும், ஏமாற்றுக்களையும் தாண்டி வெளிநாடு செல்லும் பெண்கள் அங்கு எதிர் கொள்வதோ சுபிட்சமான எதிர்காலம் அல்ல.

வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்லும் சில பெண்கள் இலங்கையில் உள்ள பெற்றாரைத் தொடர்பு கொள்ளக்கூட அனுமதிக்கப்படாது சிறை வைக்கப்படும் சம்பவங்களும் உள்ளன.

சில பணிப்பெண்களுடனான தொடர்புகள் முற்றிலும் அற்ற நிலையில், தமது பெண்களை இழந்து தவிக்கும் குடும்பங்களும் மட்டக்களப்பில் உள்ளன.

வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்கள் வெளியே சொல்ல முடியாத எத்தனையோ இடர்களை எதிர்கொள்கின்றார்கள்.

**எஜமானர்களின் கொடுமை:**

ஒரு பெண் தனது சினேகிதி ஒருவருக்கு நேர்ந்த கொடுமைகளை விபரித்தார்:

இலங்கையின் தென் பகுதியைச் சேர்ந்த 16 வயது நிரம்பிய ஒரு பெண் பணிப்பெண்ணாக மத்திய கிழக்கு நாடொன்றிற்கு சென்றிருந்தாள். அவள் வேலை செய்த வீட்டில் இருந்த ஒரு வாலிபன் அவளை பல தடவைகள் அணுக முயற்சி செய்துள்ளான். ஆனால், அந்த பெண் இடம் கொடுக்கவில்லை. ஒரு வைபவத்திற்காக வீட்டில் இருந்த பெரியோர்கள் எல்லாம் வெளியே சென்றிருந்த போது, அந்த பெண்ணின் தனிமையை அந்த வாலிபன் பயன்படுத்தியுள்ளான். அந்த இளைஞனும் அவனது நண்பர்கள் இருவருமாக அந்தப் பெண்ணை வீட்டில் அடைத்து வைத்து பலாத்காரம் செய்துள்ளார்கள். அந்த அப்பாவிப் பெண்ணை நான்கு நாட்கள் நிர்வாணமாகவே வைத்து வல்லுறவு புரிந்துள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் பெண் மயக்கம் அடைந்து விழுந்ததைத் தொடர்ந்து பயமடைந்த இளைஞர்கள், தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த இந்தியாவைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரை அழைத்து வந்து, அவருக்கு நிறையப் பணம் கொடுத்து சிகிச்சை அளித்தார்கள். அந்த வைத்தியர் மேற்கொண்ட முயற்சியால், அந்த விடயம் வீட்டு உரிமையாளருக்குத் தெரியவந்தது. பின்ளர் அந்த பெண் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டாள்.

வெளிநாடுகளில் இப்படியான பலவகைத் துன்புறுத்தல்களுக்கு அங்கு பணிபுரியச் செல்லும் பெண்கள் உள்ளாவது சகஜமாகி விட்டது.

**இலங்கையர்களுக்கும் 'மனைவி'யராக...**

எழுத்தில் எழுத முடியாத எத்தனையோ வகையான இன்னல்களை அங்குள்ள பெண்கள் அனுபவிக்கின்றனர்.

குவைத் நாட்டில் வேலைக்கு என்று சென்ற சில பணிப்பெண்கள் வீட்டு மின்சாரப் பொருட்களை சரியான முறையில் கையாளத் தெரியாத காரணத்தினாலும், இவர்களது வேலையில் வீட்டு உரிமையாளர் திருப்தி கொள்ளாத காரணத்தினாலும், வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள். நாடு திரும்புவதற்கும் இவர்கள் கையில் பணம் இருக்கவில்லை. தொழில் வாய்ப்பு பெறுவதற்காக இவர்கள் பட்ட கடனும் இவர்கள் கழுத்தை நெரித்தன. வேறு வழிதெரியாத இவர்களில் சிலர் குவைத்தில் உள்ள பாயில் என்ற இடத்தில் ஒரு வீட்டில் தங்கி இருக்கின்றார்கள். அந்த வீட்டில் வியாபாரத் ஸ்தலங்களில் தொழில் புரியும் ஆண்களுக்கு எல்லாவித பணி விடைகளும் செய்தபடி, கிட்டத்தட்ட அவர்களுக்கு மனைவி போன்று இவர்கள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்படியாக எத்தனையோ துன்பங்களை அனுபவித்து, ஏதாவது சில சம்பாத்தியங்களுடன் நாடு திரும்பும் இந்த பணிப்பெண்களை இங்குள்ள சில மிருகங்களும் விடுவதாக



* ஓட்டமாவடியைச் சேர்ந்த றிபாயா என்ற பெண் 25.07.96 அன்று துபாய் நாட்டிற்கு பணிப் பெண்ணாகச் சென்றார். கொச்சிக் கடை மௌலானா என்கின்ற வெளிநாட்டு முகவர் மூலமாகவே சென்ற இவரது தொடர்புகள் எதுவும் இப்பொழுது இல்லை என்று இவரது உறவினர்கள் தெரிவித்தார்கள்.

* மட்டக்களப்பைச் சேர்ந்த விக்னேஸ்வரி தெய்வேந்திரம் என்ற பெண் 21.09.96 அன்று 'லெபனான்' நாட்டிற்குப் பணிப் பெண்ணாக தொழில் புரியச் சென்றாள். நான்கு பிள்ளைகளின் தாயான இந்தப் பெண் இப்பொழுது எங்கு இருக்கின்றாள் என்று தெரியவில்லை.

* சம்மாந்துறையைச் சோந்த முகமட்' ஹனிபா (கடவுச்சிட்டு இல: டு0969532) என்பவர் 16.02.96 இல் பியூட்டி லங்கா என்டர் பிறைசஸ் என்ற வெளிநாட்டு முகவர் நிறுவனத்தின் மூலம் ஜெட்டா சென்றுள்ளார். இந்தப் பெண்ணிற்கும் என்ன நடந்துள்ளது என்கின்ற விபரம் தெரியவில்லை.

இல்லை. இந்த அபலைகளை எப்படியெல்லாம் ஏமாற்ற முடியுமோ அந்த அளவிற்கு தமது கைவரிசையை இப்பெண்களிடம் காண்பிக்க இவர்கள் தயங்குவதில்லை.

**கட்டுநாயக்காவிலும் ஏமாற்றுக் கும்பல்:**

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கும் பணிப்பெண்களை சுரண்டுவதற்கு என்று பல கும்பல்கள் அங்கு காத்திருக்கின்றன.

ஏறாவூர் 'மிர்ஜ்" நகரைச் சேர்ந்த ஒரு பெண் 15. 01.97ம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். விமான நிலைய அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனம் ஒன்றில் (Airport Taxi) ஏறி ஏறாவூருக்குப் புறப்பட்டாள். வழியில் 'கணேவல்ல' என்ற பிரதேசத்தில் உள்ள காட்டுப்

ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.)

இப்படியான நாதியற்ற அப்பாவிப் பெண்கள் ஒரு குறிப்பிட்ட குழுவினரால் திட்டமிட்டு ஏமாற்றப்பட்டு வருவது, வேறுசில பெண்கள் பெற்ற ஒரே வகையான அனுபவங்களில் இருந்து தெரிய வருகின்றது.

**வெளிநாட்டிலிருந்து குழந்தையுடன்...**

சந்திவெளி என்ற கிராமத்தைச் சேர்ந்த அன்புமணி என்ற பெண் சில காலம் வெளிநாடு ஒன்றில் தொழில் புரிந்து விட்டு சொந்த இருப்பிடம் திரும்பி உள்ளார். வெளிநாட்டில் அவர் சம்பாதித்த பணம், பொருட்கள் என்பனவற்றுடன் ஒரு அழகான குழந்தையையும் அவர் நாடு திரும்பும் போது கொண்டு வந்துள்ளார். அந்தப் பெண்ணை அவரது இல்லத்தில் சந்தித்து அந்தக் குழந்தை பற்றிக் கேட்ட போது, அக்குழந்தையை அவர் வளர்ப்பதற்காகக் கொண்டு வந்ததாகத் தெரிவித்தார். ஏற்கெனவே இரு குழந்தைகளும் இருக்க இக்குழந்தையைத் தத்தெடுக்க வேண்டிய காரணம் என்ன என்ற கேள்வி ஒரு புறம் இருக்க, பழமையான கட்டுக்கோப்புக்களை இன்னமும் தன்னகத்தே கொண்டுள்ள அந்தக் கிராமத்தில், அந்தப் பெண்ணைப் பற்றிய 'விடுப்புப்' பேச்சுக்களே அதிகம் காணப்படுகின்றன. அந்தப் பெண் சம்பாதித்துக் கொண்டு வந்த பணத்திலும், அவள் கட்டிய புதிய வீட்டிலும் அவள் நிம்மதியாக வாழ்வதற்கு அவளைச் சூழ உள்ள சமூகம் அனுமதிக்கப் போவதில்லை. அந்த பெண் கொண்டு வந்த அந்தக் குழந்தையின் எதிர்காலத்தைக் கூட அயலவர்களின் கேலிப் பேச்சுக்கள் சுட்டெரித்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை.

கலாசாரம் என்றும் கட்டுப்பாடு என்றும் பொத்திப் பொத்தி வளர்த்த எமது இளம் பெண்கள், இன்று புரியாத ஒரு நாட்டுக்கு, தெரியாத ஒரு நபருடன், தனியாகப் புறப்பட்டுச் செல்லும், கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறு எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து, பலதடவைகள் முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ஒருவாறு வெளிநாடு சென்று உழைத்து திரும்பி வரும் பல பெண்கள், தாம் சம்பாதித்த

புரிவதாக, உத்தியோகபற்றற்ற ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதே அளவிலான பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடு புறப்பட தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இந்த பணிப்பெண்கள் சார்ந்த பிரச்சினை என்பது இலகுவில் ஒதுக்கிவிடக்கூடிய பிரச்சினைகள் அல்ல.

எமது அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்த பணிப்பெண்களை அது அன்னிய செலவாணியை ஈட்டிக் கொடுக்கும் ஒரு இயந்திரமாகவே பார்த்து வருகின்றது. எனவே பணிப்பெண்கள் பற்றிய அக்கறையை நாம் எமது அரசிடம் எதிர்பார்க்க முடியாது.

ஆனால், இந்தப் பணிப்பெண்கள் விடயத்தில் எமது சமூகத்திற்கு என்று சில கடமைகள் இருக்கின்றன. அதனைச் சரிவரச் செய்ய வேண்டிய கடப்பாடும் அதற்கு இருக்கின்றது.

அனேகமான பணிப்பெண்கள் தாங்கள் இந்தத் துறையைத் தேர்ந்தெடுப்பதற்காக தம்மீது திணிக்கப்படுகின்ற வரதட்சணைச் சுமையையே காரணம் சொல்கிறார்கள்.


தமிழர்களிடம் இருந்து கற்றுக் கொண்டு விட்ட இந்த வரதட்சணை முறை முஸ்லிம் பெண்களையும் வெளிநாடு சென்று சம்பாதிப்பதற்கு நிர்பந்திக்கின்றது.

குறைந்த காலத்தில் நிறையச் சம்பாதிக்க இந்த வெளிநாட்டுப் பயணம் இன்றியமையாதது தான்.

ஆனால், தனது மனைவியும், மகளும் கஸ்டப்படுவார்கள் என்று தெரிந்திருந்தும் அந்தத் துறைக்கு அவர்களை ஊக்குவிக்கும் சமூகம் தான், இந்தப் பெண்கள் எதிர்கொள்ளும் அனைத்து துன்பங்களுக்குமான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தனது குடும்பத்தின் சுமைகளையும், தனது வாழ்க்கையின் எதிர்காலத்தையும் தனது தலையில் சுமப்பதற்கு என்று புறப்படும் ஒரு பெண்: அவள் இப்படிப் புறப்பட நினைத்த நிமிடம் முதலாக அவள் கடமைகளை முடிக்கும் வரையிலாக, அவளைச் சூழ உள்ள உலகத்தால் அவளது சக்திக்கும் மீறி துன்புறுத்-

# முகவர்களுக்கு முண்டு கொடுக்கும் அரசும் அரசியல்வாதிகளும்!



பகுதியில் வாகனத்தை நிறுத்திய சாரதி, அந்தப் பெண்ணையும், அவள் உடமைகளையும் பலவந்தமாக வாகனத்தை விட்டு இறக்கிவிட்டு, வாடகைப் பணத்தையும் பெற்றுக் கொண்டு சென்று விட்டான். குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்து விட்டதாக ஒப்புக் கொள்ளும் படிவத்திலும் பலவந்தமாக அப்பெண்ணிடம் கையொப்பமும் பெற்றுச் சென்றுவிட்டான்.

நடுக்காட்டில், இருளில் தனியாக அந்தப் பெண் தவித்துக் கொண்டு இருந்த போது அவ்வழியாக வந்த மற்றொரு வாகனத்தில் ஏறிக்கொள்ளுமாறு கேட்கப்பட்டாள். வேறு வழி இன்றி அந்த வாகனத்தில் ஏறிய அந்தப் பெண் காட்டுப் பிரதேசத்தில் உள்ள ஒரு வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டாள். அந்த வீட்டில் இவளைப் போல் 15 பேர் வரையில் தங்கி இருந்தார்கள். இவளுக்கு நேர்ந்த அதே அனுபவம்தான் அவர்களுக்கும் ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். இரண்டு நாட்கள் அவ்வீட்டில் தங்கி இருந்த இவர்கள் வெவ்வேறு வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி சொந்த இருப்பிடம் செல்லப் புறப்பட்டார்கள். குறிப்பிட்ட இந்தப் பெண்ணை அழைத்து வந்த வாகனம் மன்னம்பிட்டி சோதனைச் சாவடிக்கு முன்பாக இவளை இறக்கிவிட்டு திரும்பிவிட்டது. பின்னர் அங்கிருந்து மற்றொரு வாகனம் மூலமாக வீடு வந்து சேர்ந்த இந்தப் பெண், விமான நிலையத்திலிருந்து வீடு வந்து சேர்வதற்கு இவர் நான்கு வாகனங்களை வாடகைக்கமர்த்த வேண்டிய ஏற்பட்டதாகவும், இதற்கு சாதாரண வாடகையை விட பன்மடங்கு அதிகமாக தான் கொடுக்க வேண்டிய இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஏறாவூரைச் சேர்ந்த இரண்டு பெண்கள் 13.12.1995 அன்று விமான நிலயத்தில் இருந்து சொந்த இருப்பிடம் திரும்பும் போது இதே போன்ற அனுபவம் தமக்கு ஏற்பட்டதாகவும், ஆனால் அவர்கள் தனியார், வாடகை வாகனத்திலேயே பயணம் மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்கள். 'கணேவல்ல' பிரதேசத்திலேயே இவர்களும் இறக்கிவிடப்பட்டதாகவும், இவர்களது உடமைகள் அனைத்தும் வாகனச் சாரதியால் அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் இவர்கள் தெரிவித்தார்கள்.

இதேபோன்று மற்றொரு பெண்ணிற்கும் 17.06.96 அன்று இம்மாதிரியான சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பொலிஸில் முறையிட்டு இதுபோன்ற நிகழ்வுகளை வெளிக்கொணரும் துணிவோ, அறிவோ இவர்களுக்கு கிடையாத காரணத்தினால் உயிர்தப்பியதே, பெரிய காரியம் என்று வாழாவிருந்துவிடுகிறார்கள்.

(இப்படியான சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கத்தில் யாராவது அதிகாரிகள் செயற்பட முன்வந்தால் பாதிக்கப்பட்ட பெண்களுடனான தொடர்புகள்

எவையுமே தமக்கு இல்லை என்றாகிப் போன சோகங்களும் இங்கு இடம் பெறத் தான் செய்கின்றன.

**இதனை என்னென்று சொல்வது?**

கோரகல்லிமடு என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடும்பப் பெண் தனது குடும்ப கஷ்டம் காரணமாக வெளிநாட்டிற்கு வேலை பார்க்கச் சென்றிருந்தாள். அவள் உழைத்து அனுப்பிய பணத்தைக் கொண்டு அவளது கணவன் ஒரு சில்லறைக் கடை ஆரம்பித்து அதை நடத்தி வந்தான். சில வருடங்களின் பின்பு அவள் நாடு திரும்பிய போது, அவளது கணவன் வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்துவதைக் கண்டு திகைப்புற்றாள். இவளது சம்பாத்தியத்தில் கட்டப்பட்ட வீடு, கடை என்பன அவளது கணவனால் அபகரிக்கப்பட்டன. இன்று அந்தப் பெண் தனது கணவனை விட்டுப் பிரிந்து தனது பிள்ளைகளுடன், ஒரு குடிசையில் கூலித்தொழில் செய்து வாழ்ந்து வருகின்றாள்.

ஒரு பெண் வெளிநாட்டில் எந்த அளவிற்கு கஷ்டப்படுகின்றாள் என்பதை இங்குள்ளவர்கள் உணர்வது இல்லை. அவள் வெளி நாட்டில் இருந்து அனுப்பும் ஒவ்வொரு ரூபாவும் அவள் சிந்திய இரத்தத்தின் விலை என்பதும் அவளது உறவினர்களுக்குத் தெரிவதில்லை.

இந்தப் பணத்தை அனுப்புவதற்கு அவள் எதிர்கொண்ட வேதனைகள், துன்பங்கள் எத்தனை என்பதும் இங்குள்ளவர்களுக்கு புரிவதில்லை. மதிய கிழக்கு நாடுகளில் பணி புரியும் அனேகமான பெண்கள் உடல் உள இம்சைகளுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகவே கருதப்படுகின்றது.

இவர்கள் வெளிநாடு பயணமாகும் முன்பு இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தால் (SLBFE) வழங்கப்படும் பயிற்சிகளில் உடல் ரீதியிலான இம்சைகளை எதிர்கொள்வது எப்படி என்ற பயிற்சியும், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களை சமாளிப்பது எப்படி என்ற பயிற்சியும் வழங்கப்பட்டே அனுப்பப்படுகின்றார்கள்.

அத்தோடு, கர்ப்பம் தரிக்காமல் பாதுகாப்பான உறவு கொள்வது எப்படி என்கின்ற போதனையும், "எயிட்ஸ்" ஆட்கொல்லி நோயில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்ற போதனையும் இவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இது வெளிநாடுகளில் இவர்களுக்கு இப்படியான அச்சுறுத்தல்கள் இருக்கின்றன என்பதைக் காண்பிப்பதாகவே அமைகின்றது.

இது ஓரளவு உண்மையும் கூட.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 14600 பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடுகளில் தொழில்-

தப்படுகின்றாள்.

வெளியில் ஏதோ வெற்றிகரமாக தாம் சம்பாதித்து விட்டதாக கூறிக்கொள்ளும் அனேகமான பணிப்பெண்கள், உண்மையிலேயே வெட்கத்தாலும், விரக்தியினாலும் கூனிக்குறுகி வாழ்ந்து வருவதையும் தமது வாழ்வையே இழந்துவிட்டு தவிப்பதையும் நோக்கும் போது, இவர்களைச் சார்ந்த சமுதாயம் இவர்களுக்கு வழங்கிய மிகப்பெரிய கொடுமையே - இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்று எண்ணத் தோன்றுகின்றது.

'பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்ல' அவர்கள் தங்களது வாழ்க்கையின் சுபீட்சத்திற்காகவே வெளிநாடு செல்கின்றார்கள் என்று வரிந்து கட்டிக் கொண்டு பெண் உரிமை பேசுபவர்கள் எல்லாம், இந்தப் பெண்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கவோ, அல்லது இவர்களுக்கு நீதி கிடைக்கப் போராடவோ முன்வருவது இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிகரமாக செயற்படுவதாக கூறிக்கொள்ளும் 70 இற்கும் மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. ஆனால் இவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர வேறு எந்த அமைப்புகளும் இந்த அபலைப் பெண்களின் மீட்பு சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த முன்வருவதில்லை.

வெளிநாட்டு பயணத்திலுள்ள கஸ்டங்கள், அங்கு அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய இன்னல்கள் பற்றிய அறிவுறுத்தல்கள் என்பன வெளிநாடு புறப்படும் முன்பு இப்பெண்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

கூடிய வரையில் எமது பெண்கள் வெளிநாடு செல்வதைத் தவிர்த்து அவர்கள் இங்கு சுயதொழில் செய்து சம்பாதிக்கக் கூடிய வழிவகைகளையும் ஆலோசனைகளையம் வழங்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும் போரின் இரைச்சலில் அமுங்கிப்போய் மௌனங்களாகிப் போய்விட்ட இப்பெண்களின் கூக்குரல்கள் எமது சமூகத்தால் சரியான முறையில் செவிசாய்க்கப்பட வேண்டும்.

# புத்தர் கேள்விகட்கு அப்பாற்பட்டவர் தானா?

## - சு.வி.யின் கட்டுரைக்கு ஒரு எதிர்வினை

– எஸ்.கே.வி.

சரிநிகர் 208வது இதழில் (நவ. 2000) வெளியான கலாவின் 'அழுகை' கவிதை தொடர்பாக சு.வில்வரத்தினம் அவர்கள் எழுதிய விமர்சனக் கட்டுரையைப் படித்த பலருக்கும் கவிஞர் ஒரு நியாயமான குரலை எழுப்பியிருக்கிறார் என்று தோன்றியிருக்கக் கூடும். இக்கட்டுரையாளருடனான நேர்ப் பேச்சில் பலர் 'தமது அபிப்பிராயமும் அதுவே' என்று தெரிவித்திருக்கிறார்கள். கவிஞர் சுவியினதும், தமது அபிப்பிராயமும் அதுவே என்று குறிப்பிடும் நண்பர்களதும் அக்கவிதை தொடர்பான கருத்துக்கள் எப்படியிருப்பினும், அந்தக் கருத்துக்களை முன்வைக்க காரணமாக இருந்த அடிப்படைகள் தொடர்பாக சில கேள்விகளை எழுப்புவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

கௌதம புத்தர் தொடர்பாகவும், மனுநீதிச் சோழர்கள் தொடர்பாகவும் கவிஞர் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலேயே கலாவின் கவிதையின் அரசியல் தொடர்பான விமர்சனம் எழுகிறது. சரிநிகர் தொடர்பான கவிஞரின் விமர்சனமும் இதன் அடியாகவே எழுகிறது. புத்தரை இவ்வளவு கீழ்த்தரமாக யாரும் எழுதியதில்லை என்ற ஆதங்கமும் அந்த ஆதங்கம் காரணமாக கவிஞரிடம் எழும் தார்மீகக் கோபமும் கலாவின் கவிதையை 'இனவாதக்' கவிதையாக பலவீனப்பட்டுப் போன ஒன்றென அவரை எண்ண வைக்கின்றன. இங்கே சர்ச்சைக்குரியதான இந்தக் கவிதையை விட்டு விட்டு புத்தர் பற்றியும், மனுநீதிச் சோழர்கள் பற்றியும், பாடவும் பேசவும் கவிஞர் குறிப்பிடும் வரையறை சரியானதா என்ற கேள்விக்குள் நுளைவோமானால், கவிஞர் சு.வி. அவர்களது 'தொன்மங்கள் பற்றிய மறுவாசிப்பு' படர்ந்து நிற்கும் அரசியற் கோட்பாட்டுத் தளத்தினை நாம் புரிந்து கொள்ள முடியும்.

முதலாவதாக புத்தர் பற்றிய கவிஞர் சு.வியின் கருத்தமைவுக்கான தர்க்கம் 'காவிய கால முதல் இன்று வரையும் தமிழகத்தின் பலன் கவிஞர்களும் புத்தரின் அன்பும், கருணையும் நிரம்பிய வடிவையே சித்திரித்தனர்' என்று ஆரம்பிக்கிறது. 'புத்தர் உண்மையைத் தேடியவர்' அதன் பொருட்டாக அரசபோக வாழ்வையே துறந்தவர். இந்தியாவில் வருணாசிரமக் கோட்பாடு மனித விடுதலைக்கான கோட்பாடாக இறுகிய போது அதை உடைத்தெறியும் விதத்தில் சாதி, வர்ண, இன பேதம் தாண்டிய மாற்றத்திற்கான சிந்தனையை முன்வைத்தவர். அதற்காக கடுமையாக உழைத்தவர் என்று புத்தர் பற்றி விளக்கும் அவர் 'அம்பேத்கார் புத்தரின் கோட்பாட்டை வரித்துக் கொண்டதையும், அயோத்திதாசப் பண்டிதர் 'பௌத்த நெறி தமிழ் நெறியே' என்று உள்வாங்கியதையும் குறிப்பிட்டு, வரலாற்றில் தமிழ் பௌத்தர்களும் இருந்துள்ளார்கள் என்று நிறுவும் ஆதாரங்களை தந்து, 'ஆனால் அறிவறிந்தோர் தமது பேச்சிலும் எழுத்திலும் உணர்ச்சி மிகுதியால் புத்தரின் விடுதலை விம்பத்தை உடைத்துச் சிதைக்கும் வகையில் சித்தரிப்பதை மன்னிக்க முடியாது' என்று தனது தர்க்கத்தை முடிக்கிறார்.

இந்தத் தர்க்கத்தின் முடிவு புத்தர் இவர் தான்; இவரை விட வேறு புத்தர் கிடையாது; அப்படிப் பேசுவதும் எழுதுவதும் மஹா பாவம் என்ற கோட்பாட்டிறுகத்துள் கவிஞரைக் குப்பிற வீழ்த்திவிடுகிறது.

ஆனால் ஆச்சரியப்படும் விதத்தில் இந்தக் கோட்பாட்டியயைவை கவிஞர் மனுநீதி கண்ட சோழர்கள் பற்றிய தனது விமர்சனத்தில் கடைப்பிடிக்க மறந்துவிடுகிறார். அதைப் பேசுகையில் அவரிடம் 'தொன்மங்கள் பற்றிய மறுவாசிப்பு' அக்கறை தொற்றிவிடுகிறது. 'காலொடிந்த ஆட்டிற்காய் கண்ணீர்விட்ட புத்தரின் அன்பு கண்டு மெய்சிலிர்க்கும் கவிஞருக்கு 'அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறுதுயரமெய்தி; வெவ்விடம் தலைக் கொண்டாற் போல் வேதனை அகத்துமிக்கிங் இவ்வினை வினைந்தவாறென்றிடருறு மிரங்கு மேங்கும்; செவ்விதன் செங்கோல் என்று தெருமரம் தெளியும் தேறா' நின்ற மனுநீதிச் சோழன் தனது ஒரே மகனை தேர்க்காலில் போட்டு நெரித்ததையிட்டு பெரிய அக்கறை ஒன்றும் ஏற்படவில்லை.

காலொடிந்த ஆட்டுக்காக கண்ணீர் விடுவது எந்தவிதத்தில் தனது மகனைக் கொன்று நீதி நிலைநாட்ட விரும்பிய-'ஆவுறு துயரமெய்த' விரும்பிய - மன்னனின் உணர்வை விட சிறப்பாகி விட்டது என்பதை உண்மையில் புரிந்து கொள்ளத்தான் முடியவில்லை.

சோழ மன்னரின் ஆதிக்க வெறியும் பேரரசுகளை நிறுவும் போக்கும் அவர்களது மக்களுக்கெதிரான நடவடிக்கைகளும் உண்மையல்ல என்று யாரும் மறுக்கவில்லை. ஆனால் அது மனுநீதி கண்ட சோழனின் நீதியை - ஒரு பாற் கோடாமையை - இல்லாததாக்கிவிட முடியுமா? இங்கே கவிஞர், இதற்குப் பதிலாக, 'அநபாயச் சோழனை' பட்டும் சொல்லவில்லை, சோழர்களை சொல்கிறார்' என்ற ஆழமற்ற ஒரு தர்க்கத்தினை தனது பக்கத்துக்கு துணைக்கழைத்து நிற்கிறார்.

'மனுநீதிச் சோழன்' என்ற பெயர் அநபாயச் சோழனால் வந்ததெனினும்' அந்தணர்கள் விதித்த வழி நிறுத்தல் அறமென்ற' மந்திரிமார் கூற்றை மறுத்து பிராயச்சித்தம் செய்யாமல் நீதி நிலைநாட்டியவன் ஒருவனே என்றாலும் மனுநீதிச் சோழர் என்ற சொற்றொடர் சோழர் குலத்தை அல்ல குறிக்கிறது. பல அநபாயன்களையே பொதுப்பண்புச் சொற்றொடராய் நின்று குறிக்கிறது என்ற கவிதைக்கேயுரிய பொதுமையாக்கல் சிறப்பை கவனிக்க கவிஞர் மறந்து விடுகிறார்.

கவிஞரின் மறுவாசிப்பு வேகம் இலக்கியங்களில் "ஆழ்ந்திருக்கும் கவியுளம்" காண்பதை விடுத்து சூழ்ந்திருக்கும் அரசியற் சூழலை கற்பிதம் செய்து காட்ட முனையும் நிலைக்கே இட்டுச் செல்கிறது. இப்படிப் பார்த்தால் வாலிக்கு அம்பு விட்டும்; மனைவியை சந்தேகித்தும்; மனைவியை கடத்தியவன் இலங்கை மன்னன் என்பதற்காக இலங்காபுரியையே தகனம் செய்தும்; பல குற்றங்களை இளைத்த இராமனை கவிதையில் அன்புக்கு, நட்புக்கு, வீரத்திற்கு, தர்மத்திற்கு, ஒருதார விரதத்திற்கு என்று எந்தப் பண்புக்கும் உதாரண புருஷனாக காட்டிவிட முடியாது! கேவலம் ஒரு பொய் சொல்லாமல் இருக்கும் தன்னுடைய சுய திருப்திக்காக மனைவியையே விற்றுவிடும் நிலைக்கு போன அரிச்சந்திரன் உண்மையின் நாயகனாக கொள்ளப்பட முடியாது.

கவிஞர் தப்பவிட்ட விடயம் எல்லாம் கவிதையின் சாரமென்ன? அதன் தொனிப் பொருள் என்ன? அதில் சூழ்ந்திருக்கும் உணர்வு என்ன? என்பதை, வெறும் வரிகளில்

**புத்தர் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட முடியாத ஒருவர் தானா? உலகெங்கும் வாழ்கிற பௌத்தர்கள் அனைவரும் புத்தரை சு.வி. போலத் தான் வாசிக்கிறார்களா? வாசிக்க வேண்டுமா? இலங்கையரின் வாசிப்பு என்ன? புத்தர் சொன்ன மனித விடுதலையின் அர்த்தம் என்ன? இந்தக் கோட்பாட்டால் விடுதலை பெற்ற மனிதர்கள் வாழும் தேசமெது? இவையெல்லாம் கேள்விகளே அல்ல என்று கவிஞர் ஒதுக்கிவிடப் போகிறாரா?**

மட்டும் வைத்து மதிப்பிடும் சராசரி அணுகுமுறைக்குள் நுழைந்ததுதான். இந்த வரிகளிலும் சொற்களிலும், எழுத்துக்களிலும், அவை ஏற்படுத்தும் ஓசை நயத்திலும் கூட அழகு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. கட்டப்பட்ட வீடு குச்சியால் ஆனதா? கல்லால் ஆனதா? என்பதை வைத்து வீட்டினுள் நிலவும் அமைதியையும், புனிதத்தையும் அதன் நோக்கத்தையும் எப்படி மதிப்பிட முடியாதோ அவ்வாறே சொற்களை மட்டும் பற்றிப் பிடித்துக் கொண்டு "தரிசனத்தை" கண்டுவிட முடியாது.

புத்தரின் விடயத்திலும் சரி, மனுநீதிச் சோழரின் நிலையிலும் சரி, சு.வியின் அரசியல் கோட்பாட்டுத் தளத்தின் பார்வை இன்றைய ஈழத்து அரசியல் குறித்த பகுப்பாய்வு மட்டத்திற்கு அப்பால் போகவில்லை. பௌத்தத்தையும் புத்தரையும் கீழிறக்கும் விதத்தில் பேசுவதைத் தவிர்த்துக் கொள்வதும் அதை விமர்சிக்காமல் இருப்பதும் இன்றைய அரசியல் போக்கில் - அதுவும் மத அரசியல் பலம்பெற்றிருக்கும் சூழலில் - அவசியம் என்ற கருத்து நியாயமானது என்று சொல்லலாம்; வேண்டுமானால் அதுவே அவசியமானது என்றும் சொல்லலாம். ஆனால், சரியானது என்றும் அப்படிச் செய்யாது விமர்சிக்க முனைவது மன்னிக்க முடியாதது என்று சொல்வதும் எப்படிப் பொருந்தும்?

புத்தரை விமர்சிப்பவர்கள் இனவாதிகளாகத்தான் இருக்க வேண்டுமா? அல்லது இனவாதிகள் மட்டும்தான் புத்தரை விமர்சிப்பார்களா? மனுநீதிச் சோழனை ஏற்பவர்கள் எல்லோரும் மனுநீதியை ஏற்கிறார்களா? அல்லது அதை ஏற்காதவர்கள் எல்லோரும் குடிமக்களின் நலன் பற்றிப் பேசுபவர்கள் ஆகிவிடுவார்களா?

புத்தர் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட முடியாத ஒருவர் தானா? உலகெங்கும் வாழ்கிற பௌத்தர்கள் அனைவரும் புத்தரை சு.வி. போலத்தான் வாசிக்கிறார்களா? வாசிக்க



வேண்டுமா? இலங்கையரின் வாசிப்பு என்ன? புத்தர் சொன்ன மனித விடுதலையின் அர்த்தம் என்ன? இந்தக் கோட்பாட்டால் விடுதலை பெற்ற மனிதர்கள் வாழும் தேசமெது? இவையெல்லாம் கேள்விகளே அல்ல என்று கவிஞர் ஒதுக்கிவிடப் போகிறாரா?

உண்மையில் சு.வியின் வாசிப்பில் எனக்கு உடன்பாடு என்று சொல்கிற அனைவரது நிலைப்பாடும் அவர்களது அரசியல் தளத்தில் நிலைகொள்கிறது. சிங்கள இனவாதத்திற்கு பதில் தமிழ் இனவாதத்தை நாம் முன்வைக்கலாமா? பௌத்த மத சிந்தனைகளை கேவலப்படுத்தலாமா? தமிழ்த் தேசியம் பௌத்த மதத்தை எதிரியாக கருதுவதா? அல்லது மதத்தைச் சார்ந்த பேரினவாதிகளை எதிரியாகக் கொள்வதா? எது சரியானது என்ற அரசியல் சர்ச்சையில் தமிழ்த் தேசியவாத நிலை நின்று பேசும் ஒருவரது குரலையே இந்தக் கருத்துக்கள் எதிரொலிக்கின்றன. இதில் நியாயம் இருக்கிறது. இந்த நியாயம் அரசியல் நடைமுறை சார்ந்தது. அரசியல் செயற்பாட்டு வடிவம் சார்ந்தது. புத்த பிக்குகளைக் கொல்லல்; புத்தர் சிலைகளை உடைத்தல்; விகாரைகளை அழித்தல் போன்றவை பதில் இனவாதச் செயற்பாடுகள். இவை அரசியல் மனித நாகரீகமுள்ள எவரும் செய்யவொன்னாத செய்யக் கூடாத செயல்கள்.

ஆனால், இன ஒடுக்கலும், படுகொலையும், அழித்தொழிப்பும் நடக்கும் ஒரு தேசத்தில் மௌனமாக மோனத்தவம் இருக்கும் புத்தரை அவரும் இந்த இனவெறிக்கு சார்பானவராகிவிட்டார் என்று சந்தேகப்படுகிற எண்ணம் ஒருவருக்கு தோன்றுவது சாத்தியமில்லையா? சாத்தியம்தான் என்கிறார் கவிஞர். ஆனால் அதை எழுதாமல் தவிர்க்கலாம் என்பது அவரது வாதம். இது அவரது அரசியல் தளத்தின் குரல். நியாயம் தான். ஆனால் இப்படி எண்ணங்களைச் சிறைப்படுத்தி புத்தரை புனிதப்படுத்த வேண்டும் என்கிற மாயையை நாம் ஏன் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அரச போகத்தை துறந்ததும், மனைவியை விட்டு வெளியேறியதும் மாபெரும் தியாகங்களாக இருக்கலாம். துறவு வாழ்க்கை அதைவிட தியாகமாக இருக்கலாம். அதற்காக முழு உலகமும் துறவு நோக்கிச் செல்தலை - பரிநிர்வாணமடைதலை - மனித விடுதலைக்கான வழியாகக் காட்டுவதை கேள்விக்குள்ளாக்க முடியாதா? கூடாதா?

போகட்டும். புத்தரின் வாயிலிருந்து வீணீர் வடியவில்லை. கண்ணிலிருந்து இரத்தம் வழிந்தது என்று கலா எழுதியிருந்தால் என்ன நடந்திருக்கும்.

கலா விக்கித்திருக்க மாட்டார். சு.வி விக்கித்துப் போயிருக்க மாட்டார்.

ஆனால், பிந்துனுவெவ நிகழ்வால் திகைத்துப்போன முழு மக்களதும் விக்கிப்பை இது இல்லாமல் செய்திருக்குமா?

சு.வி. இன்னொன்றையும் இக்கட்டுரையில் குறிப்பிடுகின்றார். "வாரி இறைக்கப்பட்ட இச்சேறு புத்தரின் மீதல்ல: ஒரு காலத்தின் ஒப்பற்ற சிந்தனையின் மீதும் அச்சிந்தனையை அடியொற்றி விடுதலை வளர்ப்போரின் நல்லெண்ணத்தின் மீதும் வீசப்பட்டது" என்கிறார் அவர். இவற்றை எதிர்ப்பிலக்கியம் என்று சொன்னால் அவர்களின் அறியாமைக்காக தாம் வருத்தப்படுவதாக - சற்றே வருத்தப்படுவதாக - சொல்கிறார்.

நல்லது கவிஞர் வருந்துவது இருக்கட்டும் எதிர்ப்பிலக்கியம் என்றால் என்ன? மு.த. குறிப்பிடும் அதிருப்தி நிலையிலிருந்து அந்த அதிருப்திக்கு காரணமான காரணிகள் மீது ஏற்படும் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் படைப்புக்களை எதிர்ப்பிலக்கியம் எனலாமா? சு.வி. இதை ஏற்றுக்கொள்ள மறுக்க மாட்டார் என்று நினைக்கிறேன். ஒரு காலகட்டத்தின் அறிவுத் திரட்சியின் அடிப்படையில் அக்கால கட்டத்தின் சமுதாயத் தேக்கத்தின் காரணிகளை புரிந்து கொள்பவர்கள், அதன்மீது எதிர்ப்பை நிகழ்த்துகிறார்கள். கம்பனை எதிர்ப்பிலக்கியவாதி என்றும் "வீறார்ந்த திராணியும் திறனும்" கொண்டு அவன் "மன்னவனும் நீயோ?" என்று கேட்டதை புகழ்ந்தும் செல்கிறார் அவர். நல்லது. ஆனால் கம்பன் சோழன் நீதி தவறியதாலோ அல்லது குடிமக்களை வருத்தியதாலோ தான் மன்னனை இகழ்ந்து "உண்டோ குரங்கேற்றுக்கொள்ளாத கொப்பு" என்று வெளியேறினான் என்று சு.வி. கூறுவாரா? சோழ மன்னனது ஆட்சியின் போக்கில் அதிருப்திப்பட்டுத்தான் வெளியேறினானா? அல்லது தனது சுய கௌரவத்துக்காக வெளியேறினானா? சு.வி. சற்று யோசிக்கலாம்.

ஆனால், கம்பன் சில மாற்றங்களை விரும்பினான். சமூக அமைதியை விரும்பினான். சோழரின் காலத்து மனுநீதியை ஆழமாக பதிக்க விளைந்தான். இராமனை தேவ புருஷனாக்கினான். கைகேயினால் சூழ்ச்சியாகப் பறிக்கப்பட்ட அதிகாரத்திற்காக சண்டையிட்ட சராசரி இராமனை "எந்தை தன் பணியன்றாகில் உன் பணி மறப்பனோ, என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று கூறவைத்து தேவ புருஷனாக்கினான். அவன் ஆட்சியை எதிர்த்து ஒன்றும் புரட்சி செய்யவில்லை. அன்றைய அரசியலில் மதப் பிரச்சினைகளற்ற அமைதியை, ஒரு வாழ்வமைதியை தரவல்ல விழுமியங்களை உருவாக்க முயன்றான்.

ஆனால், சு.வியால் சற்றே பரிதாபப்படுவதற்குரியவர்களாகிவிட்டவர்கள் எந்தக் கோட்பாட்டையும் நியாயப்படுத்தவில்லை. கலாவின் கவிதை எதிர்ப்பிலக்கியமா என்பதை தீர்மானிக்கவும் யாரும் முனையவில்லை. அதை வரலாறு தீர்மானித்துக் கொள்ளட்டும். தவிரவும் இப்படித் தீர்மானிக்க புத்தர் பற்றிய அவரது அபிப்பிராயம் முக்கியமென்று கருதவும் இல்லை. அது எதிர்ப்பிலக்கியமாக இல்லாமலே போகட்டும். ஆனால் ஒரு கேள்வி. புத்தரை மீட்டெடுக்க உதவிய இரத்தக் கறை மாறாத ஆயுதங்களை சு.வி. தன் சரிநிகர் 211 இல் எழுதிய கவிதையில் காண்கிறாரே அவை எந்தப் புத்தரை மீட்டெடுத்தன? அன்பும் கருணையும் கொண்ட புத்தரையா?

சு.வி.தான் பதில் சொல்ல வேண்டும்.

## சிறையிலிருந்து மடல்கள்

கனவுகளின்றிக்
காத்திருக்கின்றேன் நான்

என் உயிரின் அவலத்தின் குரல்
உங்களுக்குக் கேட்கவில்லையா?
அது ஏனென்றும் புரியவில்லையா?

கனவுகளின்றிக் காத்திருத்தலென்பது....
உயிரின் அவலம் தான்....
ஏனா?

ஒரு கணப்பொழுதில் வரிசையாய்
வெளியேறிய விந்தின் முதற்துளி
முட்டையை உடைக்கப் பாரினில் பத்துத்
திங்களின் பின் வலியுடன் வீழ்ந்தவன்
நான்....

இது கால்.... இரு கை.... ஒரு முகம்....
வெறும் தசை....

உணர்வுகளின்றிச் சுதந்திரமற்ற
குழந்தைகளைப் பிரசவிப்பதை விட - எம்
இனம் மலடர்களாகவே இருந்துவிட்டுப்
போகட்டும்...

நேற்றைய பொழுதுகளில் எங்களில்
ஒருவன் வெட்டிக் கொல்லப்பட்டான் ....
அதற்கும் முதல் நாள் இருவர் காணாமற்
போயினர் - எனினும் முகங்களற்ற
முண்டங்களாய் மீளக் கிடைத்தனர்.....

எனது நேற்றைய பொழுதுகள் இறந்தவர்
காலமே - இறந்த காலம்.....

இன்றைய பொழுதுகள் எதுவோ
நிகழ்வதற்கான காத்திருப்புடன் நான் -
நிகழ்காலம்

அது இன்று நிகழாவிட்டால் நாளை
நிகழும் எனும் எதிர்பார்ப்புடன் - எதிர்காலம்

முக்காலத்தின் எக்காலத்திலும் மரணத்தின்
நிழல் என்மீத படியும்....
எனவே நான் கனவுகளின்றிக்
காத்திருக்கின்றறேன்...

கனவுகளென்பது வாழ்வதற்காய் மட்டும்
பூமியிற் பிறந்தவர்க்கான வாழ்த்து....

அவர்களின் நாளைகள் நிட்சயமானவை...
ஏன்? நேற்றைகளும் இன்றைகளும்
கூடத்தான்....

எப்போதாவது எரியும் மயானத்தின்
அடுப்புகள் எப்போதுமே எரியும்
எங்களின் தேசத்தில்

பிணங்களின் மத்தியிலிருந்து கொண்டு
வாழ்வதற்காய் கனவுகள் வளர்ப்பது எப்படி?

புதிய எஜமானர்களின் சவாரிக்காய்
முதுகுகளைச் சுத்தப்படுத்தி வாழும் காலம்
போகட்டும்....
மறு பிறப்பின் மீது பெருவிருப்புக்
கொண்டு....

கனவுகளின்றிக் கழுதையாய் வாழும்
எனைக் கொல்லுங்கள்....

மறுபடியும் பலநிறப் பேனாக் கொண்டு
கவிவ்ரையும் கழுதையாயப் பிறக்காமல் -
ஒரு கணப்பொழுதில் வெடித்து
உங்களையும் அழிக்கும்
மறு பிறப்பின் மீது பெரு விருப்புக் கொண்டு....

கனவுகளின்றிய என் காலத்தின் மீது
ஆணை...

என்னைக் கொல்லுங்கள்...

சத்சுதன்
06.02.2000

## கலீல் ஜிப்ரான்– நூற்றாண்டு விழாவின் பதினேழு ஆண்டுகளுக்குப் பின்.....

கலீல் ஜிப்ரானின் காப்பாளர்களிலவ் அவருக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களில் பொஸ்டன் மால்ப்ரோ வீதிப் பாடவாலையின் அதிபர் Mary Haskell முக்கியமானவர் ஓர் ஆலோசகராக ஆசானா அவரின் ரசிகையாக, அவரை வழிபாட்டி நடாத்தும் ஓர் உள்ளுணர்வாகவென பல வழிகளிலும் அவர் ஜிப்ரானுடன் இணைந்து வந்திருக்கிறார். பன்னாளில் ஜிப்பாரான் பாரிசில் பற்பதற்கும் உதவி புரிந்தவர் இவர் தான். இவற்றிற்கெல்லாம் நன்றிக் கடனாக ஜிப்ரான் தன் ஓவியங்கைள அவருக்டகு உரித்துடையதாக்கினார். பதிலுக்கு அவரும் தன் நன்றிக்காக அவற்றை வுநடகயசை கல்வியகத்திற்கு வழங்கினார். ஜிப்ரானஜன' சரிதை எழுதிய ஒருவர், ஜிப்ரானின்' தீர்க்கதரிசி நூலில் வரும் யுடஅவைசய என்ற பாத்திரம் இந்தப் பெண்ணையே ஆதர்சனமாகக் கொண்டது என்கிறார்.

இவ்வாறெல்லர் பொஸ்டன் இருந்தபோதிலும் கூட அது ஜிப்ரானின் வளர்ச்சியின் ஒரு தரிப்பிடமாகவே இருந்தது. அவர் தன் உய்ரிவனது பாதையில் பல இடங்களில் தரிக்க வேண்டியிருந்தது. தனது பதின்னான்காம் வயதிலவ் அவர் லெபனானுக்கு அரபு மொழி, அரபு இலக்கியம் கற்பதற்காகச் சென்றாாப். என்றாலும், அங்க கலிலின் படைப்பாளுமைப் போக்குகளை கண்டு கொள்ளாமல் அவற்றை எதிர்த்த தன் தந்தையுடன் முரண்பட்டுக் கொண்டார். இந்த வேதனைக்குரிய நிகழ்வின் பின்னரும் கூட ஜிப்ரான் லெபனானில் தங்கியிருந்தவராக தொழில் பார்த்துக் கொண்டு தன் வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருந்தார். 1898 லிருந்து 1902 வரை அங்கு கல்லுாரியொன்றில் கற்றார். ,அதன் பிறகு மீண்டும் பொஸ்டன் திரும்பினார். 1904 இல் அவர் மிகுந்த சோதனைகளுக்கும் வேதனைகளுக்கு உட்பட வேண்டிய நிகழ்வுகள் நடந்தன. அந்த ஆண்டில் அவர் தன் தாயை, தன் சகோதரி சுல்தானாவை, தன் உடன் பிறவா சகோதரன் பீட்டரை என மூன்று பேரை இழந்தார். அது மட்டுமல்லாது அவரது அனைத்து ஓவியங்களுக்கு தீக்கிரையாகின.

இவையெல்லாம் ஜிப்ரானுக்கு ஈடு செய்ய முடியாத இழப்புக்களாகவே இருந்தன. என்ளாலும் சில வருடங்களின் பின்னர், இக் கவலைகளிலிருந்து விடுபடும் முயறடசழகளழலட ஒனட.ற:ாக தன்னை புலம் பெயர்ந்த அரபு எழுத்தாளர்களின் உலகில் இணைத்துக் கொண்டார்.



நியூயோர்க்கில் வெளியாகும் பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுபவராக, புலம் பெயர்நதோன் என்ற பெயரின் கீழ், புரட்சிகரர, காதல் மயமான உள்ளார்ந்த அர்த்தங்களை வெளிப்படுத்தும் வகையிலான எழுத்துக்களை (allegories) நூல் வடிவில் பிரசுரிப்பவராக பொஸ்டனில் வாழும் அராபிய அமெரிக்கர்கள் ஒன்று கூடும் அமைப்பான Golden links ன் ஏற்பாட்டு உதவியாளராகவென தன்னை பல வழிகளிலும் ஈடுபடுத்திக் கொண்டார். அத்துடன் நியூயோர்க்கில் யுட-சுயடிடைன என்ற அமைப்பின் தோற்றத்திற்கும் உதவினார். இந்த அமைப்பு, புலம் பெயர்ந்த அராபிய அலக்கியத்திற்கு பிரதான பங்களிப்புச் செய்த எட்டு எழுத்தாளர்கள் இணைந்த ஓர் அமைப்பாகும். அவர்களில் அமீன் ரிஹானியும், மீகாயில் நயீமியம் குறிப்பிடத்தக்கவர்கள். இரண்டாமவர் பிற்காலத்தில் நியூயோர்க்கின் அராபிய புலம் பெயர்ந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர். கலீல் ஜிப்ரான் அவரது வாழ்வும் உலகமும்: என்ற சரிதை நூலை எழுதிய ஜீன், கலில் போன்றோரின் குறிப்புப்படி, இக்காலம் ஜிப்ரானுக்கு ஒரு வளம் நிறைந்த காலமாக இருந்தது மட்டுமன்றி, கிழக்கு அராபிய நவீன எழுத்துக்களில் நிலையான அரபு மொழியைப் பாவிக்க வேண்டிய தேவையிருந்த ஒரு காலமாகவும் இருந்தது என்கிறார்கள். இன்று, ஜிப்ரானும் அவரது மைத்துனரும் வளர்ந்த இடத்திலிருந்து மிகத் துாரமல்லாத இடத்திலிருக்கிற ஒரு நவீன வீட்டில் ஜீனும், கலிலும் ஜிப்ரானுடைய கையெழுத்துப் பிரதிகளையும், அவரது ஓவியங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது 60 வயதாகும் கலில் தனது மைத்துனன் ஜிப்ரானின் இடத்தை அமெரிக்க கலை இலக்கிய உலகில் நிரந்தரமாக்குவதற்கு முயன்று கொண்டிருக்கிறார். குறிப்பாக 1908 -1910 கிடையிலான ஆண்டுகளில் பாரிசில் பயின்ற குறியீட்டு ஓவியத்தின் பிரதிநிதியாக அவரை நிலைப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். குறித்த இந்தக் காலப்பகுதியில் ஜிப்ரான், Academie julien ல் கற்றதோடு atelier ல் தொழிலும் பார்த்து வந்தார். குறியீட்டு ஓவியர் Pierre Marcel என்பவரின் கீழே கலீல் தன் ஓவியக் கற்கையைத் தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர் பிரபலமான, பெரிய ஓவியக் கலைஞர்களின் உருவங்களை (Portraits) வரைந்ததோடு அவற்றை நுக்கலைகளுக்கான தேசிய அமைப்பில் காட்சிக்கும் வைத்தார்.

பாரிசிலிருந்து திரும்பியதும், நியுயோர்க்கின் கிரீன் விச் கிராமத்தில் குடியேறினார். அங்கிருக்கையில் அரபு மொழியில் கண்ணீரும் புன்னகையும், முறிந்த சிறகுகள்: (இவைகள் தமிழிலும் மொழிபெயர்ப்பாகியிருக்கின்றன. - மொ-ர்) என்ற இரண்டு நூல்களை வெளியிட்டார். அத்துடன் Montrose கலாபவனத்தில் தன் ஓவியங்களையும் காட்சிப்படுத்தினார். அரபு மொழியில் தொடர்ந்தும் கவிதைகளையும், குறுங்காவியங்களையும் எழுதியதோடு ஆங்கிலத்தில் எழுதவும் தொடங்கினார்.

லெபனானியக் கிராமியக் கந்தைகளின் அடியாக அவர் எழுதிய நீதி போதனைக் கதைகள் கொண்ட அவரது முதல் நூல் 'The Madman' Alfred knopf பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. (இன்றுவரை இப்பதிப்பகமே அவரது நூல்களை வெளியிட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்) இந்நூல் ஜிப்ரானின் வாழ்வியல் அனுபவங்களின் தாக்கங்களுக்குட்பட்ட வெளிப்பாடாகவும் இருந்தது. Mary Haskell தன் நாற்குறிப்பேட்டில்: ஜிப்ரான் சிரியா, அமெரிக்கா என்ற இரு உலகங்களில் வாழ்ந்தாராயினும், அங்குள்ள அவரது வீடுகளிலல்ல.!: என்று எழுதியிருப்பது கவனிப்புக்குரியது.

1923ல் அவரது தீர்க்கதரிசி நூல் வெளியானதும் ஜிப்ரானின் மாற்றம் ஏற்படலாயிற்று. அந்நூலின் உடனடி விற்பனையும், பரவலாக அங்கீகாரமும் அவரை சர்வதேசப் பிரபலமாக்கியது. இன்னொரு வகையில் சொல்வதானால், அவர் ஆங்கிலத்தில் எழுத வேண்டிய நிலைக்குள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அதாவது தேசியப் பார்வையை விட சர்வதேசியப் பார்வைக்கு தன் படைப்புலகை நகர்த்தினார். இதை அவரே நான் உலகத்தின் பிரதிநிதி: எனச் சொல்லிக் கொண்டார். தொடர்ந்த அவரின் வெளியீடுகளாக Sand and Foam, the Earth Gods, the wanderers என்பன வந்தன.

இந்தப் படைப்புக்களினூடாக 19ம் நூற்றாண்டின் ஆரம்பகால அதி யதார்த்தவாதத் தத்துவத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் என அவரது சரிதையாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். முதலாம் உலகப் போர்க் காலங்களில், குறிப்பாக துருக்கி, ஜேர்மனி, அவுஸ்திரியா போன்றவற்றுடன் இணைந்தன் பின்னர் மத்திய கிழக்கு தொடர்பான உத்திகளிலொன்றாக அந்நாடுகள் சிரியாவை ஆக்கிரமித்திருந்தன. இந்தக் காலங்களில் ஜிப்ரானின் உணர்வுகள் முற்றிலும் தேசியமயப்பட்டவையாகவே இருந்தன என்பதை அவதானிக்கலாம். என்றாலும் பின்னர் அவர் சர்வதேச அனுகலை நோக்கித் தன்னை நகர்த்திக் கொண்டார்.

(தொடரும்)

எக்கேஎம். ஷரீப்

# போங்கடா டேய்

கொக்கரக்கோ கொக்கரகோ என சேவல் கூவியது. காகமும் கா... கா . . . காவெனக் கரைந்தது. பறவையினம் எல்லாம் கீகீ என சந்தோசமாக கத்திப் பறந்து பகலவனின் வரவுக்கு ஆரவாரம் செய்தன.

பிள்ளையார் கோவில் கோபுரத்தில் கட்டியிருந்த லவுட்ஸ்பீக்கரில் இருந்து 'விநாயகனே வினை தீர்ப்பவனே' என்ற சீர்காழி கோவிந்தராஜனின் பக்திப் பாடல் ஊரெல்லாம் பக்தி மணம் பரப்பியது.

ஐந்து மணிக்கெல்லாம் கண்விழித்த கமலா மனம் நிறைந்த சந்தோசத்துடன் கிணற்றடிக்குக் குளிப்பதற்குச் சென்றாள். பல் துலக்கி வாய் கொப்பளித்து விட்டு ஒரு வாளி நீரை உடலில் ஊற்ற - நீரில் நனைந்த தாமரை போல் கமலா அழகாய் இருந்தாள்.

'கமலாவின்ர வடிவுக்கு இந்த யாழ்ப்பாணத்தில மாப்பிள்ளை ஒரு இடத்திலையும் கிடைக்க மாட்டான். எங்கயெண்டாலும் வெளிநாட்டில தான் இவளுக்குக் கலியாணங் கட்டிக் குடுக்க வேணும்' என்று கமலாவின் அப்பா அடிக்கடி சொல்வார்.

குளித்து முடித்த கமலா உடலைத் துடைத்து குறுக்கே கட்டியிருந்த பாவாடையை அவிழ்த்துவிட்டு வெள்ளைச் சட்டை அணிந்தாள் பாடசாலை செல்வதற்கு...

இப்படித்தான் ஆரம்பித்தது புன்னாலைக் கட்டுவன் புண்ணியமூர்த்தி எழுதிய 'தண்டவாளத்தில் சங்கமிக்கும் ஜீவன்கள்' என்ற அந்தச் சிறுகதை.

தொடர்ந்து படிப்பதா இல்லையா என்கின்ற எண்ணம் எனக்கு எழவேயில்லை. வாரக் கடைசி நாள். விடுமுறை. பொழுது போக்க வேண்டும். பத்திரிகைக் கட்டுகளும், புத்தக மூட்டைகளுமாயக் குவிந்து கிடக்கின்றன. நிறைய உள்ளூர் வெளியீடுகளும் - சில வெளிநாட்டு வெளியீடுகளுமாய் என் முன் பரவிக் கிடக்கின்றன.

இப்படி அமைதியாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த கமலாவின் வாழ்வில் திருமணம் என்னும் பெயரில் புயல் நுழைகிறது என்று ஒரு வித பீடிகையுடன் கதையின் திருப்பத்தை விபரித்த புன்னாலைக்கட்டுவன் புண்ணியமூர்த்தி - கமலாவின் கதையான தண்டவாளத்தில் சங்கமிக்கும் ஜீவன்களின் முன்பாதியை யாழ்ப்பாணத்திலும், பின் பகுதியைக் கனடாவிலும் நடப்பதாக சித்திரிக்கின்றார்.

கமலாவைத் திருமணம் செய்த கனடா மாப்பிள்ளை அவளைக் கனடா அழைத்து வந்து சிறைக் கைதி போன்றும், அடிமை போன்றும் நடத்துகின்றான். சமயங்களில் போதைச் சுருட்டு போன்ற சுடுகலன்களால் அவள் அவயங்களைச் சுட்டுச் சித்திரவதையும் செய்கின்றான்.


அழகான பெண் குழந்தை ஒன்றுக்கு அம்மாவான கமலா விரக்தியின் எல்லைக்கே சென்று - குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடுகின்றாள். பின் 'சப்வே'(subway) என்று அழைக்கப்படும் நிலக்கீழ் சுரங்க இரயில் முன் பாய்ந்து - தன் குழந்தையின் உயிரையும் தன் உயிருடன் சேர்த்துத் தண்டவாளத்துடன் சங்கமித்துக் கொள்கிறாள் என்று கதையை முடித்த புன்னாலைக் கட்டுவன் புண்ணியமூர்த்தி நட்சத்திரக் குறிப்பு ஒன்றுடன் இப்படிச் சொல்கின்றார்.

இப்படி கனடாக் கணவன்களால் வஞ்சிக்கப்படும் பெண்கள் தற்கொலை செய்து தங்களுயிரை மாய்ப்பதைக் காட்டிலும் பாஸ்போர்டைக் கிழித்தெறிந்து விட்டு - தன் இன விடுதலைக்காக இலங்கை சென்று போராட வேண்டும்.

இது போன்று கனேடிய பெண்களுக்கு அதுவும் பாதிக்கப்பட்ட - பாதிக்கப்படும் - பாதிக்கப்படப் போகும் சகல பெண்களையும் பாஸ்போர்ட்டைக் கிழித்தெறிந்து விட்டு தாய்நாடு சென்று போரிடச் சொல்லும் ஐந்நூற்றி ஐம்பத்தி ஏழு சிறு கதைகளுக்கு மேல் படித்தாயிற்று . சலிப்புத் தட்டவேயில்லை.

ஆனாலும் ஒரு கேள்வி - இல்லை இரண்டு கேள்விகள் என்னுள் உறுத்திக் கொண்டே இருக்கின்றன.

முதற் கேள்வி: ஏன் பாதிக்கப்பட்ட 'பெண்கள்' மட்டுமே போராட வேண்டும் என்னும் பிரமையை இந்தக் கதாசிரியர்கள் உண்டு பண்ணுகிறார்கள்?



இரண்டாம் கேள்வி: அது எப்படிப் பாஸ்போட்டைக் கிழித்தெறிந்து விட்டுக் கனடாவில் இருந்து இலங்கை செல்ல முடியும்? (பாஸ்போர்ட்டை கிழித்தெறிந்து விட்டு - விமானம் விட்டு இறங்குதல் எங்கள் சடங்கு என்பதை வேறு வகையில் சித்திரிக்கின்றார்களோ என்னமோ?)

எதுவாக இருந்தாலும் நாமே நமக்குள் கேள்வியும் கேட்டுப் பதிலும் சொல்லிக் கொண்டு தான் இருக்க வேண்டும். தப்பித் தவறி வாய் விட்டோம் என்றால் துரோகி தான் நாம்!

இப்படித்தான் ஒரு தடவை 'மேற்கே மறையும் நிலவுகளும் கிழக்கே உதிக்கும் சூரியன்களும்' என்னும் காதலும் வீரமும் கலந்த இன்னோர் நானூறோ எண்ணூறோ என்று அறுநூற்று முப்பது பத்திரிகை(?)களும் விளம்பரம் செய்ய நானும் போய் வெளியீட்டு விழாவை வேடிக்கை பார்த்தேன்.

சகல சம்பிரதாயங்களும் முடிய எல்லாப் பொடிபெட்டைகளும், கிழடுகட்டைகளும் போய் சுன்னாகம் சுந்தரலிங்கத்திடம் கையொப்பம் இட்டு புத்தகத்தைப் பெற்றுக் கொள்ள - நானும் போய் அவர் பக்கம் நின்று கொண்டேன். தலையைக் குனிந்து, மூக்குக் கண்ணாடியை மூக்கு நுனிக்கு அனுப்பி விட்டு - கறுப்பு விழியை மேல் விழிக்குள் செருகிக் கொண்டு அர்த்த புஷ்டியாய் என்னைப் பார்த்தார்... நான் ஒப்புக்குப் புன்னகைத்தேன். பின் நெடுநாளாய் என்னுள் அரிப்பெடுத்துக் கொண்டு இருந்த அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

'அது எப்படி ஐயா புலம் பெயர்ந்த தமிழர் எல்லாரையும் திட்டி வைக்கிறியள்? ஓடி வந்த தமிழரெல்லாம் நக்க வந்த நாயள் எண்டும் திட்டுறியள். நாட்டில நிண்டு சண்டை பிடிக்காமல் தப்பி வந்த பேடியள் எண்டு குற்றம் சொல்லுறியள்.

நீங்கள் பாஸ்போட்டைக் கிழிச்செறிஞ்சு போட்டுக் குண்டக் கட்டிக் கொண்டு கொழும்புக்குப் போகலாந் தானே... எண்பதாம் ஆண்டுக்கு முன்னமே உங்கட பிள்ளையளை லண்டனுக்கு அனுப்பிப் போட்டு ஊரான் பிள்ளையளைப் போராடச் சொல்லுறதும், போராடப் போகாதவங்களைத் துரோகி எண்டு சொல்லுறதும் எந்தவிதத்தில நியாயம் சொல்லுங்கோ... சரி உங்களுக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம் உங்கட பேரப் பிள்ளை, ஒண்டையாவது நாட்டுக்கு அனுப்பலாந்தானே. . .'

சுன்னாகம் சுந்தரலிங்கம் என்னை ஒரு மார்க்கமாய்ப் பார்த்தார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டு பெருவிரலும் சுட்டுவிரலும் கொண்டு கண்களை இறுக்கி அமுக்கினார். பின் கண்ணாடியை மூக்கு நுனியில் அமர வைத்து விட்டு -

'எனக்கு தெரியும் நீர் எந்த அணி ஆள் எண்டு. நீர் துரோகி' என்றானே அந்தச் சுன்னாகம் சுந்தரலிங்கம்.

'போங்கடா நாய்களா. போர் விற்று வயிறு வளர்க்கும் பேய்களா' என்று உரக்கக் கத்த வேண்டும் போல் தோன்றினாலும் - அன்று அவமானப் பட்டுத் தான் வீடு வந்தேன். நான் புலம் பெயர்ந்து மனிதாபிமானமிக்க நாட்டில் வாழ்வது எத்துணை பெரும் பாக்கியம் என்பதை அன்று தான் உணர்ந்தேன்.

அறுபத்தி நான்கு பக்கங்கள் கொண்ட பத்திரிகையின் எட்டுப் பக்கங்களைப் புன்னாலைக் கட்டுவன் புண்ணியமூர்த்தியின் சிறுகதை ஸ்வாகா பண்ணியிருந்தது.

பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டி முன்பக்கம் வந்தேன்: செய்திகள் படிக்க. முன் பக்கம் முழுவதும் செய்தித் தலைப்புகளும், நான்கு வரிகளில் செய்தி பற்றிய விபரமும் இத்தனையாம் பக்கம் பார்க்கவும் என்றும் இருந்தது.

கலைஞர் கருணாநிதி ஈழத்தமிழர் முதுகில் குத்தினார்.

தமிழ் நாட்டின் முதல்வரான கலைஞர் கருணாநிதி என்னும் பழம் கிழவன் எங்கள் இனத்தை என்ன நினைத்துக் கொண்டான்.

47ம் பக்கம் பார்க்க.. .

பலஸ்தீனிய பயங்கரவாதிகள் வைத்த குண்டில் ஜெருசலேத்தில் ஒரு தேவாலயம் தரை மட்டம்

எம் இனத்தைப் போலவே பலஸ்தீனிய மக்களின் விடுதலைக்காகப் போராடும் பலஸ்தீனியப் பயங்கரவாதிகள் இஸ்ரேலியர்கள் நடமாடும்...

33ம் பக்கம் பார்க்க

நான்கு வாரங்களாக தணியாத நிலையில் காணப்பட்ட வன்னிச் சமர் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பம்.

மண் மீட்பு போராட்டமான யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்கும் அடுத்த கட்டமாக நடை பெற்றுக் கொண்டிருக்கும்

52ம் பக்கம் பார்க்க. . .

இலங்கைத் தீவின் சனாதிபதி சந்திரிக்காவுக்கு பலத்த அடி. மூக்குடைந்த அம்மையார் ஒப்பாரி. மாமனார் ஆறுதல்.

தமிழ் இனத்தையே அடியோடு ஒழித்தே தீருவேன் என்று கோசமிடும், அறிவுகெட்ட, மூளை இல்லாத, சிறிமாவின் மகளான இராட்சசி சந்திரிகா ஆனையிறவு அடியால் மூக்குடைந்து போனார்.

இத்தனையாம் பக்கம் பார்க்க என்னும் இடம் வெறுமனே கோடு இழுபட்டு இருந்தது.... (கோடிட்ட இடத்தை நாம் தான் நிரப்ப வேண்டும் போலும்!)

செய்தித் தலைப்புகளும் அதன் குறுவிபரமும் படித்தாயிற்று. சரி: இனி விபரமான செய்தி படிக்க 0 ம் பக்கத்தைப் புரட்ட வேண்டியதுதான்.

கிழட்டுக் கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர் முதுகில் குத்திய செய்தியின் விபரம் படிக்க நாற்பத்தி ஏழாம் பக்கத்தைப் புரட்டினேன்.

இடமிருந்து வலமாக நான்கு பெட்டிகளும் மேலிருந்து கீழாக ஐந்து பெட்டிகளுமாக மொத்தம் இருபது சதுரப் பெட்டிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது நாற்பத்தி ஏழாம் பக்கம்.

இடமிருந்து வலமாக முதலாவது பெட்டிக்குள் 'மறவர்கள் போராடி இரத்தம் சிந்தி வாங்கும் என் தேசத்தில் என் உடல் வேக வேண்டும். (ஆகவே) என்னிடம் வீடு வாங்குங்கள், விற்பனை செய்யுங்கள்' எனும் விளம்பரம். அத்துடன் விளம்பரதாரரின்

**நீங்கள் பாஸ்போட்டைக் கிழிச்செறிஞ்சு போட்டுக் குண்டக் கட்டிக் கொண்டு கொழும்புக்குப் போகலாந் தானே... எண்பதாம் ஆண்டுக்கு முன்னமே உங்கட பிள்ளையளை லண்டனுக்கு அனுப்பிப் போட்டு ஊரான் பிள்ளையளைப் போராடச் சொல்லுறதும், போராடப் போகாதவங்களைத் துரோகி எண்டு சொல்லுறதும் எந்த விதத்தில நியாயம் சொல்லுங்கோ... சரி உங்களுக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம் உங்கட பேரப் பிள்ளை, ஒண்டையாவது நாட்டுக்கு அனுப்பலாந்தானே. . .'**

பதினெட்டு வயது பாஸ்போர்ட் புகைப்படமும் பிரசுரமாகி இருந்தது.

'தொலைந்து போகும் உங்கள் தாயகத்து நினைவுகளை நாங்கள் மீட்டுத் தருகிறோம் எங்களிடம் இடியப்பம் வாங்குங்கள்' என்கிறது மேலிருந்து கீழாக இரண்டாம் பெட்டி.

இடமிருந்து வலமாக இரண்டாம் பெட்டி இப்படிச் சொல்கிறது: மண்ணின் சுவையையும் ஈழத்து நினைவையும் உங்களுக்கு நாங்கள் தருகின்றோம். உறைப்புக் கூடிய / குறைந்த / mild மிளகாய்த் தூள்.

இப்படியே மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் பத்தொன்பது பெட்டிகளையும் தாயகம், ஈழம், மண், மறவர், விடுதலை, வீரம், நினைவு என்னும் சொற்களை மாற்றியும் இடம் பெயர்த்தும் போட்டுவிட்டு - இடைச் செருகலாய் அரிசி, மிளகாய்ப் பொடி, இடியப்பம், பிட்டு, கறிவேப்பிலை, வாழை இலை, சொதி குழம்பு என்று இடைவெளிகள் நிரப்பிக் கொள்ள[illegible]ட்டிருக்கின்றன... இல்லை... எங்கள் சோகத்தையும் எங்கள் மண்ணின் நினைவுகளையும் வியாபாரிகள் விற்றுக் காசாக்கி கொண்டிருக்கின்றார்கள்.

மண், வீரம், ஈழம், நினைவு, மறவர், தாயகம் எல்லாம் மீன்பிடிப்பவர்கள் தூண்டிலில் கொழுவும் புழு மாதிரி இவர்களுக்கு. பாவம் எம் மக்கள்.

இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் வருகின்ற இருபதாவது பெட்டிக்குள், இந்த இடத்தில் விளம்பரம் செய்ய கூலி 20 மட்டுமே என்றிருந்தது. இந்த இருபது பெட்டிகள் எதற்குள்ளும் எனக்குக் கிடைக்கவில்லை, கிழட்டுக் கலைஞர் முதுகில் குத்திய செய்தியின் விபரம்.

பலஸ்தீனிய பயங்கரவாதிகளின் கதை படிக்கப் பக்கம் முப்பத்து மூன்றைப் புரட்டினேன்.

இவ்வார ராசிபலன்.

சோதிட மேதை - சோதிட கலாநிதி இணுவயூர் இரத்தின சிங்க குருக்கள் (கனடா வீரபத்திரன் கோயில் பிரதம குருக்கள்)

இனி என்ன செய்வது கழுதையைக் கல்யாணம் முடித்து விட்டு கச்சேரி கேட்க முடியாது என்றால் சரியாகி விடுமா? இன்றைய பொழுதைக் கடத்த வேண்டும். பல்லைக் கடித்துக் கொண்டு.....

மேடம் - அச்சுவினி: பரணி: கார்த்திகை 1ம் பாதம்.

ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தல்: பணக் கஸ்டம்: உறவினர் விரோதம்: பயணங்களால் பயன் இல்லை: நம்பிக்கை எதுவும் கைகூடாது.

இடபம் - கார்த்திகை 1, 2ம் பாதம் ரோகினி.

வாழ்வில் இத்தனை துன்பம் இருக்க முடியுமா என எண்ணத் தோன்றும். நோயின் ஆதிக்கம் கூடும். உயிராபத்தான சம்பவம் நிகழும். காரியங்கள் தடையாகும். பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்படும்.

மிதுனம் -

## ● சக்ரவர்த்தி ●


துன்ப காரியங்களுக்கு செலவு அதிகம் ஏற்படும். குடும்பத்துக்குள் மரணம் அல்லது சச்சரவு நிகழும். இவ்விராசிக்காரர்களுக்கு 7 1/2 நடப்பதால் எந்தக் காரியமும் கை கூடாது. செய் தொழில் எதுவும் உருப்படாது. மனைவி வேலை செய்யும் இடத்தில் பிற ஆளுடன் உறவு கொள்ளக் கூடும்.

பன்னிரு ராசிக்காரர்களுக்கும் இதே நிலை. மனைவி அவனுடன் ஓடுவாள். கணவன் கார் மோதிச் சாவான். வேலை இழப்பாய். பொலீஸில் பிடிபடுவாய். தீராப் பிணி பீடிக்கும். நண்பனை நம்பாதே .....

இந்த கேடு கெட்ட குருக்கள்மார் எழுதுகின்ற அபத்த சோதிடத்தை நம்பும் அப்பாவி யாராவது இதனைப் படிக்க நேரின் அவன் வாழ்வில் விமோசனம் உண்டென்று எனக்குத் தோன்றவில்லை. ஒரு நல்ல வார்த்தை வரவே வராதா இந்த அறுவான்களின் மனதில் இருந்து? என்ன மனிதர்களோ!

அவன் தான் புத்திகெட்டு எழுதுகின்றான் என்றால் இதைப் பிரசுரிக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கு எங்கே போயிற்று புத்தி? எதை எதை மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற விபரம் கூடத் தெரியாது... அவங்களுக்குக் கல்லா நிறைய வேண்டும்.

ஆயுதக் கலாசாரம் மிகச் சரியோ என்று சில நேரங்களில் எண்ணத் தோன்றுகின்றது.



தங்களுக்குள்ளேயே தங்களைச் சுட்டு வீரம் விளையாடும் கனடாத் தமிழ்ச் சிறார்கள் - இந்த பூசாரிகளையும் பத்திரிகை ஆசிரியர்களையும் சுட்டு விளையாடினால் சமுதாயம் முன்னேற சாத்தியம் உண்டோ!

என் கை உதிர்த்த துவக்குகள்

மீண்டும் என் கை துளிர்ப்பின்... ஆமாம், நிச்சயமாக!

**'ஈழமக்களோட விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ற தேசியத் தலைவரையும், தளபதி எண்டு எழதி: 'காட்டிப் பிழைப்பு' நடத்திற சினிமாக்காரிய, கட்டிப்பிடிச்சு ஆடுறவனையும் தளபதி எண்டு நீர் எப்படி எழதலாம்? மேதகு தேசியத் தலைவரை விஜய்யோட இடத்துக்கு நீர் தாழ்த்துறீரா? இல்லாட்டி உங்களோட அடுத்த தேசியத் தலைவரா விஜய்ய கொண்டு வாற உள்நோக்கம் ஏதேனும் இருக்கா?'**

செய்திகளை வேறு எங்கு தேடிப் படிப்பது என்பது பற்றி எனக்குள் பெரும் குழப்பம். எதற்கும் வன்னிச் சமர் பற்றி அறிய 52ம பக்கத்தைப் பார்த்தேன்.

முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தரும் இன்னாள் வைரவர் கோயில் (கனடா) நிர்வாகியும், தர்மகத்தாவும் ஆன கொடிகாமம் (தமிழீழம்) பிறப்பிடமாகவும் மட்டக்களப்பில் (இலங்கை) தொழில் பார்த்தவரும் முல்லைத்தீவில் (இலங்கை) வசித்தவருமான சுப்பையா சிவக்கொழுந்து ரொரண்டோ (கனடா) வில் காலமானார்.

ஆமாம் சாட்சாத்.... அதே... அதேதான்.

ஐம்பத்தி இரண்டாம் பக்கம் முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தரின் மரண அறிவித்தல். மூச்சு விடாமல் முழுவதையும் படித்து முடிக்க எனக்கு அழுகை வந்தது முதலில். பின் மூச்சு முட்டியது.

உலகத்தில் இத்தனை நாடுகளில் தமிழன் இருக்கின்றானா என்ற ஆச்சரியம் எழுவது மரண அறிவித்தல்களைப் படிக்கும் போது தான்.

ஒரு முன்னூறு உறவினர் இருக்கும் இறந்த ஒவ்வொருவருக்கும். ஒவ்வொரு உறவினர் பின்னும் ஒவ்வொரு நாடு, அடைப்புக்குறிக்குள்.

உதாரணம் - வரதன் (ஜேர்மனி), குமுதன் (பிரான்ஸ்), முகுந்தன்(நோர்வே), உதயன் (கனடா), அவன் (அமெரிக்கா), இவன் (இங்கிலாந்து), யாழினி(சுவிஸ்), கேழினி (ஓமான்), தேனினி (புருனே).

ஒவ்வொரு அடைப்புக் குறிக்குள்ளும் அகதி என்ற சொல்லும் அடைந்து கிடப்பது இவர்களுக்குப் புரியுமோ என்னவோ?

பாவம் புலம்பெயர்ந்த தமிழன்.

'என்ன பத்திரிகை ஆசிரியரே! இத்தனையாம் பக்கம் பார்க்க எண்டு போட்டிட்டு - அந்தப் பக்கம் எல்லாம் தாயகத்தை நினைவூட்டுற விளம்பரமா போட்டு வைச்சிருக்கிறீங்கள். இது பிழையல்லே' என்று ஒரு போன் போட்டு கேட்க ஆசை தான். ஆனால் முடியாது. இரத்தக் கொதிப்பு அதிகமாகி சில நேரம் கேட்க வேண்டி வந்தால் நாம் துரோகி-தான்.

ஒரு ஒன்றரை, இரண்டு வருடங்கள் இருக்கும் அந்தச் சம்பவம் நிகழ்ந்து.

இந்த ஆண்டின் த[illegible]ர் தழுவல் விருது பெற்ற அன்றைய நெற்றி முரசு பத்திரிகையில் வந்த தலைப்பைப் பார்த்தால் மண் புழுவுக்கும் இரத்தக் கொதிப்பு வரும்.

ஈழத்தின் மருமகனே இளைய தளபதியே, எங்கள் விஜய்யே

வருக...! வருக...!! வருக...!!!

வருமோ வராதோ இரத்தக் கொதிப்பு?

அன்றைய நெற்றிமுரசு ஆசிரியரான Son of Veena க்கு ஒரு போன் போட்டேன்.

'ஐயா பெரியவரே... நீங்கள் இப்பிடிச் செய்யலாமோ?... பத்திரிகை இலக்கணத்தையே நாறடிக்கிறியளே? இது நியாயமே?'

நான் கேட்க Son of Veena கேட்டார் என்னிடம்: 'பத்திரிகை கூடாது என்கிறீரா? இல்லை பத்திரிகையே கொடியவர்களின் கூடாரம் ஆகிவிட்டது என்கிறீரா?'

'பெரியவரே... கலைஞர் உங்கட நண்பன் என்றது பற்றியோ, அறிஞர் அண்ணா உங்கட அப்பா, பெரியார் உங்கட தாத்தா என்றது பற்றியோ. பாதிப்பு என்ற பேரில இப்பவும் நீங்கள் பராசக்தி வசனம் பேசுறது பற்றியோ கல்கியின் அலை ஓசை தான் உங்கட மன ஓசை என்றது பற்றியோ நான் எந்த மறுப்பும் சொல்லேல்லை. உங்கட தமிழ் நாட்டு விசுவாசத்தக் காட்டுறதுக்காக - ரொறன்ரோ பியர்சன் எயாப்போட்டிலையே குடியிருந்து தமிழ்நாட்டில இருந்து ஆர் வந்தாலும், அவங்கட சப்பாத்த உங்கட கண்ணீரால நனைச்சு, நாக்கால துடைச்சு விடுறது பற்றியும் எனக்கு அக்கறையில்லை. . . ஆனால் தமிழ் நாட்டில இருந்து வாற எல்லா சொறியன்களுக்கும் உங்கட தனிப்பட்ட விசுவாசத்தக் காட்டுறதுக்காக ஈழவனோட தன்மானத்தையும், சுயகௌரவத்தையும் விக்காதையுங்கோ.'

நான் பேசப் பேச Son of Veena க்கு கோபம் வந்து விட்டது போலும்.

'நீர் என்ன சொல்ல வாறீர்' என்றார். சற்று நேரம் முன்பு தான் சீனி இல்லாத கோப்பி குடித்திருப்பார் போலும் நாவில் இருக்கும் வழுவழுப்பு பேச்சில் தெரிந்தது. 'ஈழமக்களோட விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ற தேசியத் தலைவரையும், தளபதி எண்டு எழுதி: 'காட்டிப் பிழைப்பு' நடத்திற சினிமாக்காரிய, கட்டிப்பிடிச்சு ஆடுறவனையும் தளபதி எண்டு நீர் எப்படி எழுதலாம்? மேதகு தேசியத் தலைவரை விஜய்யோட இடத்துக்கு நீர் தாழ்த்துறீரா? இல்லாட்டி உங்களோட அடுத்த தேசியத் தலைவரா விஜய்ய கொண்டு வாற உள்நோக்கம் ஏதேனும் இருக்கா?'

என் கோபம் நியாயமா, இல்லையா?

'நீர் இன்னார் தானே?' என்றார் son of Veena. தொலைபேசி ஊடாகவே என் தோரணையை வைத்து என்னை அடையாளம் கண்டு கொண்டார் போலும்.

'ஓம் நான் அன்னார் தான்'

'நீர் தமிழ் படிக்க வடுகப்பட்டி செல்ல வேண்டும். விசித்திரப் பூச்சியான நீர் விரக்தியை வாந்தி எடுக்கும் தமிழீழத் துரோகி...!' என்று விட்டு தொடர்பைத் துண்டித்துக் கொண்டார்.

இப்படித் தான் எங்கள் ஊடகவியலாளர்களின் அறிவு இருக்கிறது.

நான் ஏன் வடுகப்பட்டிக்குப் போய்த் தமிழ் படிக்க வேண்டும்?

எப்போது நான் விசித்திரப் பூச்சியானேன்?

வாந்தி எடுப்பவன் எப்படித் துரோகியாக முடியும்?

ஈழம் என்னும் ஒரு சொல்லை வைத்துக் கொண்டு எப்படியெல்லாம் ஜாலம் செய்கின்றார்கள். பாவம். ஊரில சண்டை பிடிச்சுச் செத்துக் கொண்டிருக்கிற எங்க பிள்ளையள்...

அடிமனதின் ஒரு ஓரமாய் அற்ப ஆசை ஒன்று எழ பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டினேன்...

இரண்டாம் பக்கம் - சிறுவிளம்பரம்

முன்றாம் பக்கம் - கோயில் திறப்பு விழா

நாலாம் பக்கம் - கோயில் அடிக்கல் நாட்டு விழா

ஐந்தாம் பக்கம்-கோயில் கும்பாபிஷேகம்

ஆறாம் பக்கம் - அகண்ட சாயி பஜனை.

ஏழாம் பக்கம் - ஸ்நோ(Snow) பகவானுக்கு யாகம்

--- ---

அறுபதாம் பக்கம் தாயகத்தின் எல்லை வரை அழைத்துச் செல்லும்

விமான சேவை.

அறுபத்தி ஓராம் பக்கம் - ஓட்டு மடம் ஓமனக்குட்டி (இப்பெயர் யாழ்ப்பாணப் பெண்ணுக்கு வந்ததன் காரணமறிய * குறிப்பிட்ட இடத்தில் படிக்கவும்) எழுதிய கவிதை... படித்தேன்... ஓடடா... நடடா... உக்கார்டா, எழும்புடா... பாயடா... வெட்டடா குந்துடா... தூக்குடா.... நீ தமிழன்டா... அவன் சிங்களவன்டா. மலை பச்சையடா... வானம் நீலம்டா...(டுண்டா .... டுண்டுண்டா)... இன்னும் நூறு டாக்களுடன் கவிதை தொடர்ந்தது.

**(அடுத்த இதழில் முடியும்)**

## சியாம் செல்வத்துரையின்

## 'FUNNY BOY'

# 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 3

**தமிழில்:**
**எஸ்.கே.விக்னேஸ்வரன்**

அன்றைக்கு நாங்கள் வருவதற்கு கொஞ்சம் பிந்திவிட்டோம். காரணம் எங்கள் குடும்ப கௌரவம் தான். அது,(இன்னும் சரியாகச் சொல்வதானால் எங்கள் அப்பா) அம்மா தனது மாமியாரின் அறுபதாவது பிறந்த நாள் விஷேடக் கொண்டாட்டத்திற்கு கட்டாயம் சேலை உடுத்தியாக வேண்டுமென்று வற்புறுத்தியது. தனது தாவணி சரியாக தனது முழங்காலுக்கு மேலே நிற்க வேண்டுமென்பதில் அம்மா மிகவும் உறுதியாக இருந்ததும் அவவின் மிக ஆறுதலான வெளிக்கிடுகையும் எங்கள் எல்லாரையும் பைத்தியமாக்கிக் கொண்டிருந்தது. (அதிலும் அண்ணா தோண்டிக்கோவென்றால் தான் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மீனா தன்னுடைய குழுவிலுள்ள நல்ல ஆட்களை எல்லாம் தன்னுடைய பக்கத்திற்கு 'கதைகுடுத்து' மாற்றிவிடுவாள் என்ற நியாயமான பயம் இருந்தது.) அம்மா சேலை கட்டி வெளிக்கிடுகிற சடங்கை பார்த்துக் கொண்டேயிருக்கிறதற்கு வழமையாக ஆசைப்படுகிற நானே, மற்றவர்களுடன் சேர்ந்து அவவின் அறைக் கத்வருகே நின்றபடி அம்மா இன்றைக்கு உண்மையாகவே வெளிக்கிட்டு முடிப்பீங்களோ என்று ஏக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்தேன்.


கடைசியாக நாங்கள் ராமநாயகம் வீதிக்கு வந்தபோது மற்ற எல்லோரும் ஒரு மணிநேரத்திற்கு முன்பாகவே வந்து காத்துக் கொண்டிருந்தார்கள். அம்மாச்சிக்கு முத்தமிட்டு அவவுக்குரிய பரிசைக் கொடுப்பதற்கு அம்மா வழிகாட்ட நாங்கள் மூவருமாக அதைப் பிடித்துக் கொண்டு அவவின் பின்னால் போனோம். சித்தப்பாமார் சித்தியவை மாமா மாமியவை எல்லோரும் அங்கு அமர்ந்திருந்தார்கள். அம்மாச்சிக்குப் பக்கத்தில் காந்தி அன்ரியின் முழங்கால்களுக்கிடையில் 'தொக்கையம்மா' நின்று கொண்டிருந்தாள்.


எங்களைக் கண்டதும் குற்றம் சாட்டுமாப்போல் ஒரு கோபப்பார்வையை என்னை நோக்கி வீசிவிட்டு தனது தாயின் கால்களுக்குள் மேலும் தன்னைச் செருகிக் கொண்டாள். மாலா அன்ரியுடன் பேசிக்கொண்டிருந்த தனது உரையாடலை சற்று நிறுத்திவிட்டு என்னை நோக்கித் திரும்பிய காந்தி அன்ரி புன்னகைத்தபடி இனிமையான தொனியில் 'என்ன இது நான் கேள்விப்படுகிறது? ஆ..என்ரை சின்ன மகனோடை ஒருத்தரும் விளையாடிறியளில்லையாமே?' என்று கேட்டார்.

இந்தப் படு பொய்யால் அதிர்ந்துபோய் நான் காந்தி அன்ரியையும் பிறகு தொக்கையம்மாவையும் பார்த்தேன். எனது புலன்கள் எல்லாம் ஏதோ நடக்கப் போகிறது என்ற உள்ளுணர்வுடன் திடீரென விழிப்படைந்து விட்டிருந்தன.

காந்தி அன்ரி தனது விரலை என்னை நோக்கி நீட்டி ஆட்டியபடி விளையாட்டாக கண்டிக்கும் தொனியில சொன்னார்: 'சரி..சரி.. இனிமேல் அர்ஜி, என்ரை சின்ன மகனோடை நீ அன்பாக நடந்துகொள்ள வேணும். சரிதானே.. என்ன இருந்தாலும் அவள் இப்பதான் வெளிநாட்டிலிருந்து இஞ்சை வந்தவள்..' அதிர்ஸட வசமாக நான் பதிலளிக்கும் நெருக்கடியிலிருந்து தப்பிக் கொண்டேன். ஏனென்றால் அம்மாச்சிக்கு முத்தமிடுவதற்கு அடுத்ததாக கன்னத்தை கொடுக்கிற முறை என்னுடைய முறையாக இருந்தது. காந்தி அன்ரியின் இனிப்பான கண்டிக்கிற கதையை விட அம்மாச்சியின் மூக்குத்தி குத்துகிற நோ பரவாயில்லைப் போல இருந்ததால் நான் விருப்பத்துடன் அந்தக் குத்தை வாங்கினேன்.

காந்தி அன்ரி அப்பாவின் குடும்பத்தில் நாலாவது பிள்ளை. முதலாவது அப்பா. பிறகு ரவிச்சித்தப்பா. அடுத்தது மாலா மாமி, அதுக்கடுத்தது காந்திமாமி, பிறகு பாபுச் சித்தப்பா,





அடுத்தது சீலன் சித்தப்பா, கடைசியாக ராதா மாமி. இதில் ராதா மாமி மற்றெல்லாரையும் விட ரொம்பவும் வயது குறைந்தவர். அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்தார். காந்தி அன்ரி ஒல்லியாயும் உயரமாயும் இருப்பா. நாங்கள் அவவைக் கடந்து போகிற நேரங்களிலோ அல்லது வாழ்த்துச் சொல்கிற வேளைகளிலோ வாஞ்ஞையுடன் எங்கள் தலைகளைத் தடவி விடுவா என்றாலும் எல்லாரையும் விட அவவில்தான் எங்களுக்குக் குறைந்தளவு விருப்பம் இருந்தது. அவவின் அன்பான அரவணைப்புக்குக் கீழே குமுறிக் கொண்டிருக்கிற ஒரு கோபம் மறைந்திருக்கிறதான ஒரு உணர்வு எங்களிடம் இருந்தது. அவரது வாழ்வின் ஏமாற்றம் காரணமாக இறுகிப் போயிருந்த இந்தக் கோபம் எங்களுக்கெதிராகத் திருப்பப்படுமானால் அது பெரிய பின்விளைவுகளைத் தரக கூடும் என்று நாங்கள் அஞ்சினோம்.

அம்மா தனது சகோதரியான நெலியா அன்ரிக்கு காந்தி அன்ரி பற்றி 'பாவம் காந்தி.. வெளிநாட்டிலை அவள் அனுபவிச்ச கஷ்டங்களாலை கசப்படைஞ்சு போய் இருக்கிறாள். என்ன இருந்தாலும் வெள்ளைக் காறங்களின்ரை வீட்டிலை தங்கடை கஷ்ரங்களுக்காக போய் வேலைக்காறியாய் வேலை செய்யிறதெண்டால் எவ்வளவு கொடுமை..' என்று சொல்லிக் கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன்.

அம்மாச்சி பரிசுப் பொதியைத் திறந்து பார்த்தா. வெள்ளியிலான ஒரு பெரிய தட்டு அது. அம்மாச்சி எங்களுக்கு நன்றி சொன்னதுடன் நிற்காமல் மீண்டும் ஒருமுறை எனக்கும் அண்ணாவுக்கும் தங்கச்சிக்கும் முத்தமிட்டா. கடைசியாக நாங்கள் வரவேற்பறையிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டோம். தொக்கையம்மா ஏற்கனவே அங்கிருந்து மறைந்து விட்டிருந்தாள். நான் முன் வாசல் வழியாக வேகமாக வெளியேறி வீட்டின் வெளியோரமாகப் பின்பக்கத்தை நோக்கி ஓடினேன்.

நான் வீட்டின் பின்தோட்டத்தை அடைந்த போது எல்லாப் பெண்களும் பின் தாழ்வாரத்தில் வட்டவடிவத்தில் குந்திக் கொண்டிருந்தார்கள். நான் வாழ்த்துத் தெரிவித்தது கூடக் கேட்காதளவுக்கு வட்டத்தின் நடுவில் நடந்து கொண்டிருப்பதைப் பார்ப்பதில் ஆழ்ந்து போயிருந்தார்கள். இறுதியாக லக்ஷ்மி நான் வந்ததை கண்டதும் தனது கிளர்ச்சியை அடக்கமாட்டாதவளாய் மையத்தை நோக்கி என்னைப் பார்க்குமாறு சைகை காட்டினாள். மையத்தை நோக்கிச் சென்றதும் அவளது கிளர்ச்சிக்கான காரணம் எனக்குப் புரிந்து விட்டது. வட்டத்திற்கு மத்தியில் தொக்கையம்மாவுக்குப் பக்கத்தில் நீண்ட கால்களும் பளபளக்கும் பொன்னிறக் கூந்தலும் கொண்ட ஒரு பொம்மை உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் உடை ஒரு தேவதைக் கதையில் வரும் தேவதை ராணியினுடையது போன்றிருந்தது. மினுங்கிக் கொண்டிருந்த அதன் பாவாடையில் வெள்ளி நட்சத்திரங்கள் வைத்து இழைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் வெளிர் நீல சூட் போட்ட அதன் ஆண் தோழன் பொம்மை வைக்கப்பட்டிருந்தது.

அந்த அற்புதமான பொம்மைகளை நான் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். இறக்குமதி செய்யப்படும் பொருடகள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதித்துள்ள ஒரு அரசாங்கத்தின் கீழ் வளர்ந்த எங்களுக்கு இத்தகைய பொம்மைகள் கற்பனைக்கும் எட்டாதவை. தொக்கையம்மா அந்தப் பொம்மைகளைத் தொட்டுப் பார்க்க விரும்புகிறார்களா என்று மற்றவர்களிடம் கேட்டாள்.

எல்லோரும் ஆர்வத்துடன் ஓம், ஓம் என்று கத்தினார்கள். பொம்மைகள் ஒருவர் கை மாறி ஒருவர் கையாகப் போய்க் கொண்டிருந்தது. நான் அதை வடிவாகப் பார்ப்பதற்காக கொஞ்சம் நெருக்கமாகப் போனேன். என்னை அறியாமலே எனது பார்வை தொக்கையம்மா மீது விழுந்தது. அவள் ஒரு கம்பீரமான கர்வப் பார்வை ஒன்றை என்மீது வீசினாள். திடீரென்று அவளது திட்டம் எனக்குப் புரிந்துவிட்டது. இந்தப் பொம்மைகளைக் காட்டி மற்றவர்களை என்னிடமிருந்து பிரித்து விடலாமென்று அவள் நினைக்கிறாள் என்பது எனக்குத் தெளிவாயிற்று.

ஆனால் துரதிர்ஸ்டவசமாக அவள் மணப்பெண் விளையாட்டிற்கிருந்த அபார சக்தியை குறைத்து மதிப்பிட்டுவிட்டாள். எல்லோரும் பொம்மையைப் பார்த்து முடிந்ததும் அவர்கள் விறுவிறுவென்று மீண்டுமொரு தடவை அந்தப் பொம்மையைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் திருமணச்சடங்கு வேலைகளைச் செய்வதற்காக தாழ்வாரப் படிகளில் இறங்கிப் போகத் தொடங்கினார்கள். அவர்களைப் பின்தொடர்ந்த நான் வெற்றிப் பெருமிதத்துடன் தொக்கையம்மாவைத் திரும்பிப் பார்த்தேன்.

தனது அழகான அந்தப் பொம்மைகளை நெஞ்சுடன் அணைத்தபடி தாழ்வாரத்தில் இன்னமும் உட்கார்ந்திருந்தாள் அவள்.

நான் வீட்டின் பின்தோட்டத்தை அடைந்த போது எல்லாப் பெண்களும் பின் தாழ்வாரத்தில் வட்டவடிவத்தில் குந்திக் கொண்டிருந்தார்கள். நான் வாழ்த்துத் தெரிவித்தது கூடக் கேட்காதளவுக்கு வட்டத்தின் நடுவில் நடந்து கொண்டிருப்பதைப் பார்ப்பதில் ஆழ்ந்து போயிருந்தார்கள். இறுதியாக லக்ஷ்மி நான் வந்ததை கண்டதும் தனது கிளர்ச்சியை அடக்கமாட்டாதவளாய் மையத்தை நோக்கி என்னைப் பார்க்குமாறு சைகை காட்டினாள். மையத்தை நோக்கிச் சென்றதும் அவளது கிளர்ச்சிக்கான காரணம் எனக்குப் புரிந்துவிட்டது.

**வரும்**

# குருவிக்கூடும் சில குரங்குகளும்



இதுவல்ல என்னில்லம்
உதிரமும், சதையுமாகி
குருவிச்சிரமமாய்
புனரமைத்த வீடு என்னது.

என் மனையோ மழலையின்
சிரிப்புத்ததும்பினது
சொந்தங்களினதும், நண்பரினதும்
சகவாசம் சுமந்த தலைவாசல் என்னது.

அதனுள் என் பேடையுடன் இரவிலும், பனிவிசிறும்
மாலையிலும்
முயங்கிக் கிடந்தேன் தனிமையில்.

என் வீட்டை என் செய்திருக்கிறாய்
கொடியவனே.

என் கவிதைகள் மூச்சுத்திணறி சாகும் வரை
தீ - நாக்கால் துளாவினாய்,
என் கூரையின் மேல்
நான் துடித்து நின்றேன்.

நான் பார்த்திருக்க
என் சதையும், உதிரமும்
கரைந்தோடி உறைந்திற்றென் காலடியில்.

என் புறாக்களின்
மாடத்தை நீ - தகர்த்தெறிந்தாய்
உன் - சமாதானப் போரால்.

உருகி வழிந்து தரையுடன் உறைந்திருக்கும்
மெழுகுவர்த்தி சிதைவென
இதோ என்னில்லம்.

கழுதைகள் சயனிக்கவும், நாய்கள் புணரவுமான
மயானமாக்கினாய்
என் வீட்டை.

என் பூவலில்
நீ - கடித்துண்ட மனிதரின்
எலும்புகளை வீசிச்சென்றாய்

பார்
என் வீட்டை
பெருவெளியில்
மழையில் கரைகிறது.
வெய்யிலில் கருகுகிறது
உன் நண்பர்களின் சப்பாத்தொலியிலும்
எக்காளச்சிரிப்பிலும் சிறுத்து நிற்கிறது என் வீடு.

இனி எப்போதுமுள்ள
என் வாழ்க்கையைப் போல் .



அறபாத்
2000.06.28


# நினைவுக் குறிப்புகள் - 10

## ரிக்ஷாவில் தடைசெய்யப்பட்ட பத்திரிகைகளை எடுத்துச் சென்றேன்!

தலைமறைவு அமைப்பில் டொறிக்கின் பாத்திரம் மிகவும் முக்கியமானது. அவர் கட்சியுடன் சம்பந்தப்பட்டவர் என்பது வெளிப்படையாக தெரியாத ஒரு விடயமாக இருந்ததால் அவரால் 'பாதுகாப்பான வீடுகளை' (சமசமாஜக் கட்சியில் இந்தப் பதம் அப்போது புழக்கத்தில் இருக்கவில்லை) தேவைப்படுகிற போதெல்லாம் வாடகைக்கு அமர்த்திக் கொள்ள முடிந்தது. இவ்வாறு வாடகைக்கு அமர்த்தப்படும் வீடுகளில் சட்டவிரோத பத்திரிகைகளை அச்சடித்து பிடிபடுவதற்கான குறைந்த வாய்ப்புடன் பத்திரிகைகளை விநியோகிக்க முடிந்தது.

அவர் தன்னுடைய சில தனிப்பட்ட 'பூர்ஷுவா' நண்பர்களிடமிருந்தும் தேவைப்படும் போது சில உதவிகளைப் பெற்றுக் கொண்டார். அவரிடம் இருந்த வளங்களும், அறிவுத்தீட்சண்யமும் இவ்வாறான ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பை நடத்துவதற்கு கிடைத்த பெரும் சொத்துக்கள் எனலாம்.

இருந்த போதும், ஒரு தடவை அவரது அறிவுக்கூர்மை தோல்வியில் முடிந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் இந்த அத்தியாயத்தில் எழுதிக் கொண்டிருக்கிற சம்பவங்கள் நடந்த காலத்தில் ஒரு முறை அவர் இந்தியாவுக்குப் போயிருந்தார். இந்தியாவில் போல்ஸ்விக் லெனினிஸ்ட் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான தயாரிப்புகள் நடந்து கொண்டிருந்த காலம் அது. அங்குள்ள இந்திய ட்ரொஸ்கியவாதிகளை சந்திப்பது இவரது பயணத்தின் நோக்கமாக இருந்தது. அவர் பம்பாயில் இருந்த போது, அவரை ஒரு பொலிஸ்காரன் நீ இங்கே என்ன செய்கிறாய் என்று விசாரணை செய்திருக்கிறான். (இந்த விசாரணைக்கு காரணம் இவர் பற்றி அவனுக்கு தகவல் கிடைத்திருந்ததாலென்று நான் நினைக்கவிலலை. ஆனால், இவர் சந்தித்த யாராவது ஒருவர் பற்றிய அவர்களது விழிப்புணர்வு காரணமாக இந்த விசாரணை நடந்திருக்கலாம். பொலிஸ் விசாரித்துவிட்டு இவரைப் போகச் சொன்னதும், இதுபற்றி இங்குள்ள கட்சிக்கு அறியத்தர வேண்டும் என்று விரும்பினார் டொறிக். ஆனால், அது யுத்த காலமாகையால், வெளிநாட்டுக் கடிதங்கள் எல்லாம் தணிக்கை செய்யப்பட்டு வந்தன. டொறிக் ஒரு அருமையான வழியைக் கண்டுபிடித்தார். டொறிஸ் வீற்லி என்ற பெயரில் அப்போது ஒரு துப்பறியும் நாவலாசிரியர் விநோதமான முறையில் தனது புத்தகங்களை வெளியிட்டு வந்தார். அவரது ஒவ்வொரு புத்தகமும், ஒரு கொலை பற்றிய கடிதங்கள் புகைப்படங்கள், பொலிஸ் அறிக்கைகள் போன்ற ஆவணங்களைக் கொண்ட ஒரு பைல் கோப்புப் போல அமைந்திருக்கும். அதன் முடிவில் ஒரு ஒட்டப்பட்ட என்வலப்பில் துப்பறிபவர் கதையைத் துலக்கும் விபரம் அடங்கியிருக்கும். டொரிக் இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தை வாங்கி வந்தார். தன்மீது நடந்த விசாரணை பற்றிய தகவலை ஒரு விளக்கமான கடிதமாக தட்டச்சுச் செய்து தயாரித்தார். பிறகு அதை அந்த என்வலப்பில் போட்டு ஒட்டி அதை கட்சியின் ஆதரவாளரான ஒரு சட்டத்தரணிக்கு அனுப்பி வைத்தார். அவர் கட்சியை இந்த




தலைமறைவு வாழ்க்கை
றெஜி சிறிவர்த்தன

விடயம் சம்பந்தமாக எச்சரிக்கையாக இருக்கும்படி தகவல் தருவார் என்ற நம்பிக்கை டொரிக்குக்கு. டொரிக் சில வாரங்களின் பின், திரும்பி வந்த போது, கட்சி தன் மீதான விசாரணை பற்றி எதுவும் தெரியாமல் இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். தான் கடிதம் அனுப்பிய சட்டத்தரணியிடம் ஓடிப்போய் விசாரித்தார்.

அவருக்கு அந்தப் புத்தகம் கிடைத்திருந்தது. அதை வாசித்து அதிலுள்ள கதையை அவர் மிகவும் சந்தோசமாக அனுபவித்திருந்தார். ஆனால், அதில் ஒரு செய்தி இணைக்கப்பட்டிருந்ததை அவர் கண்டுபிடிக்கவே இல்லை!

0 0 0

1941 அவருடனான எனது முதலாவது வாரம். டொரிக் என்னை, நான் முதல் குறிப்பிட்ட பூர்ஷுவா ஆதரவாளர்களில் ஒருவரது வீட்டுக்கு கூட்டிச் சென்றார். அவரை எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு மறுநாள் மாலை கட்சியின் சட்டவிரோதப் பத்திரிகை அங்கு வரும் என்று தெரிவித்தார். நான் அவற்றை எடுத்து ஒரு ரிக்ஷோவை வாடகைக்கு அமர்த்தி (அப்போதெல்லாம் மத்திய தரவர்க்கத்தின் பொதுவான போக்குவரத்து சாதனமாக இருந்தது இதுதான்) எனக்காக ஒரு தொழிலாளி காத்திருக்கும் ஒரு இடத்திற்கு கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். இதை மறுநாள் பொழுதுபட்ட பின் நான் செய்து முடித்தேன். பத்திரிகைகள் ஒரு 'பிரவுண்பேப்பரினால்' பாசல் செய்யப்பட்டிருந்தது. அதற்குள் எத்தனை பிரதிகள் இருந்தன என்று எனக்குத் தெரியாது. ஆனால், ஆயிரத்திற்கும் அதிகமாக இருந்திருக்கும் என நான் நினைக்கவில்லை. இன்று 'ரப்ளோயிட் சைஸ்' என்று அழைக்கப்படும் அளவிலான ஒரு தாளில் இரு புறமும் சிங்களத்தில் அச்சடிக்கப்பட்ட பத்திரிகை அது. அன்றைய தலைமறைவு கால 'சமசமாஜய' இதுதான்!

அந்தத் தொழிலாளி நான் வருவதைக் கண்டுவிட்டு என்னை நோக்கி வந்தார். (ரிக்ஷா வண்டி தான் அடையாளமாக இருந்திருக்க வேண்டும்) பார்சலை தூக்கிக் கொண்டு என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மறைந்து விட்டார். பிறகு நான் அவரை பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்திக்க வேண்டியிருந்தது. அவரது பெயர் நீலகண்டன். அவர் ஒரு மலையாள தொழிலாளி என்பதும் அப்போது நீண்டகால வேலைநிறுத்தமொன்றின் பின் கட்சியின் மிகவும் பலமான தளமாக மாறியிருந்த வெள்ளவத்தை நூற்றல் நெய்தல் ஆலையில் வேலை செய்பவர் என்றும் அறிந்து கொண்டேன்.

அந்த வேலை முடிந்தது. தலைமறைவு வேலையில் நான் மிகவும் வேகமான முன்னேற்றத்தைப் பெற்றுக் கொண்டேன். எனக்கு ஒரு பாதுகாப்புப் பெயர் தரப்பட்டிருந்தது. இரகசியத்தைப் பேணுவதற்காக கட்சியின் ஆவணங்களில் இந்தப் பெயர்தான் இருந்தது. அதைப் புழக்கத்தில் கொண்டு வருவதற்காக உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையிலும் குழுக் கூட்டங்களிலும் இந்தப் பெயரையே பாவித்தோம். எனக்குத் தரப்பட்டிருந்த பெயர் 'ஹமித்'.

**1940இல் நான்கு தடுப்புக்காவல் கைதிகளும் கைது செய்யப்பட்ட போதும் லெஸ்லி தப்பி தலைமறைவாக இருந்தார். அவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவர் 1941 இல் நடந்த சிறிய கட்சிப் பிரதிநிதிகள் மாநாடுகளில் கலந்துகொண்டார்.**

இந்த பத்திரிகை விநியோக வேலையை நான் முடித்த பின் என்னை லெஸ்லி தங்கியிருந்த மறைவிடத்தில் அவரைச் சந்திப்பதற்காக டொறிக் அழைத்துச் சென்றார். 1940 இல் நான்கு தடுப்புக்காவல் கைதிகளும் கைது செய்யப்பட்ட போதும் லெஸ்லி தப்பி தலைமறைவாக இருந்தார். அவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவர் 1941 இல் நடந்த சிறிய கட்சிப் பிரதிநிதிகள் மாநாடுகளில் கலந்துகொண்டார். அதன் பின் இந்தியாவிற்குச் சென்றார். டொறிக் என்னை அவரைச் சந்திக்குமாறு அழைத்துச் சென்றதற்கு காரணம் இருந்தது. ஏனென்றால் நான் அவருக்கும் கட்சிக்கும் இடையிலான தொடர்பாளனாக செயற்பட வேண்டியிருந்தது!

வரும்

## மறுக்குறிப்பு

**– மு.பொ**

# பலஸ்தீனக் கவிதைகள்

புத்தாயிரம் ஆண்டு முடியுந்தறுவாயில் 'மூன்றாவது மனிதன்' வெளியீட்டாளர்களால் மறு பதிப்புக்குள்ளாகி வெளிவந்திருக்கிறது கலாநிதி எம்.ஏ.நுஃமானின் 'பலஸ்தீனக் கவிதைகள்'. இது ஒரு முக்கிய வரவாகவே எனக்குப் படுகிறது.

1981 இல் இதன் முதற்பதிப்பு வெளிவந்த போது தமிழ் பேசும் இனம் இதை எதிர்கொண்டு உள்வாங்குவதற்கு இருந்த நிலையை விட, தற்போது அது பெற்றிருக்கும் அனுபவமும் அதன் வழிவந்த சிந்தனை விசாலிப்பும் பக்குவமும் பன்மடங்கு பெரிதென்றே கூற வேண்டும். இந்நிலையில் இந்நூல் பல தரப்பட்ட வாசிப்புக்கு உள்ளாக்கப்படுவதோடு, இந்நூலில் முனைப்புறும் அடக்கியொடுக்கப்படும் மக்கள் கூட்டத்தின் விடுதலைக்கான உத்வேகம் பல்வகை மட்டங்களில் அதிர்வுகளை ஏற்படுத்துவதாகவும் அமையும்.




இதனால் தான் நுஃமான் அவர்கள் தனது முதலாம் பதிப்பின் முன்னுரையில், "இன்று பலஸ்தீன மக்கள் மரணத்துள் வாழ்வு தேடுகின்றனர். அபகரிக்கப்பட்ட தங்கள் தாய் நாட்டுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடுகின்றனர்... அவ்வகையில் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் உலகெங்கும் விடுதலைக்காகப் போராடும் மக்களின் போராட்டத்தின் ஒரு பகுதியாகும்" என்றும், இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் அவர், "கடந்த இருபது ஆண்டுகளுள் பலஸ்தீனக் கவிதை சமகால ஈழத்துப் படைப்பாளிகள், வாசகர்களைப் பொறுத்த வரை இது அவர்களின் உணர்வின் குரலாக அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவத்தின் வெளிப்பாடாகவே அமைகிறது.." என்றும் கூறுவதையும், இதன் பதிப்பாசிரியர் பௌசர், "எம்.ஏ.நுஃமானின் மொழி பெயர்ப்பில் தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்படும் இத்தொகுதியிலுள்ள கவிதைகள் இன்றும் நமது குரலாகவே இருக்கிறது என்பதும் தான் இத்தொகுதி பதிப்பிக்கப்படுவதன் உள்ளார்ந்த நோக்கமாகும்" என்றும் கூறுகின்ற இன்னோரன்ன கூற்றுக்களிலுள்ள தாற்பரியத்தை தமிழ், முஸ்லிம் மக்கள் இப்போது தான் அதன் பூரண அர்த்தத்தில் விளங்கிக் கொள்ளும் வாய்ப்பேற்பட்டிருக்கும் எனலாம்.

மேலும், இத்தொகுதியின் உள்ளடக்கத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் இத்தொகுதி பற்றி இதன் ஆசிரியர் கூறுவதைத் தெரிந்து கொள்வதும் உபயோகமாக இருக்கும்.

"பல்ஸ்தீனக் கவிதைகள் முதலாம் பதிப்பு 1981 நவம்பரில் வெளிவந்தது. அத்தொகுதியில் 9 கவிஞர்களின் 30 கவிதைகளே இடம் பெற்றன. இப்போது வெளிவரும் திருத்தி விரிவாக்கப்பட்ட இந்த இரண்டாம் பதிப்பில் 15 கவிஞர்களின் 71 கவிதைகள் இடம் பெறுகின்றன. நிசார் கப்பானியும், ஃபத்வா துக்கான் தவிர்ந்த ஏனைய 5 பெண் கவிஞர்களும் இத்தொகுதியில் புதிதாக இடம் பெறுகின்றனர்..." என்று ஆசிரியர் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் கூறுவது கவனிக்கத்தக்கது. மேலும் இக்கவிதைகளுள் சமீம் அல்காசிமின் ஏழு கவிதைகளை, நுஃமானின் வேண்டுகோளுக்கிணங்க கவிஞர் முருகையன் மொழி பெயர்த்ததாகவும் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கப்பட வேண்டியது. இவற்றோடு' பலஸ்தீனக் கவிதைகள் ஓர் அறிமுகம்' பற்றி கடாகர்மி எழுதிய ஓர் சிறு குறிப்பொன்றும் வாசகர்களுக்கு உதவும் வகையில் தரப்பட்டுள்ளது.

2

நுஃமான் மொழிபெயர்ப்பில் வெளிவந்திருக்கும் இப்பலஸ்தீனக் கவிதைகளைப் படித்த போது, இதையொத்த வேறு நாடுகளில் விடுதலை அவாவி வீறுகொண்டெழுந்த மக்கள் கூட்டத்தின் குரலாக எழுந்த வேறு பல கவிதைகளும் என் ஞாபகத்தைப் புரட்டிக் கொண்டு வந்தன. லத்தின் அமெரிக்கக் கவிதைகள், ஆபிரிக்கக் கவிதைகள், வியட்நாமியக் கவிதைகள், நம் உள்ளூர் கவிதைகள் என்று பல என் நினைவில் புரண்டன. இவை அனைத்தினதும் முக்கிய பண்பாக இருப்பது நாம் வேறு நிலைகளிலும் ''துாரத்திலிருந்து'' புத்திஜீவித்தனங்களில் இருந்து பார்க்கும் போதும் "பயங்கரவாத"மாகத் தெரியும் ஒன்று, இக்கவிஞர்களால் பூஜிக்கப்படும் ஒன்றாகப் பார்க்கப்படும் விடுதலைத் தேவையே. ஆகவே எம் விடுபட்ட இருப்புக்கு அருவருப்பையும் அந்தரத்தையும் ஏற்படுத்துவனவாகத் தெரிபவை அவர்களுக்கோர் இனிய நிகழ்வே. அதனால் தான் அவர்கள்,

"ஆயினும்
பட்டினி வருத்தும் போதிலோ என்னைக்
கொள்ளை அடித்தவன் தசையினைப் புசிப்பேன்
கவனம்,
என் பசியை அஞ்சிக்
கவனமாய் இருங்கள்
எனது சினத்தை அஞ்சிக் கவனமாய் இருங்கள்"
(பலஸ்தீனக் கவிதைகள் பக்கம் ௨0)

இத்தகைய நர இறைச்சியையே புசிக்கச் செய்யும் கோபம் அவர்களுக்கேன் வரவேண்டும்? இதோ அவர்களே சொல்கிறார்கள்.

"எனது பாட்டி திறந்த கண்களால்
வெறித்துப் பார்ப்பதைக் காணும் நிலைமை
எனக்கேன் வருவான்!
வானத்தை நோக்கி நிர்வாணமாக
எனது தாயின் சடலம் கிடப்பதைக்
காணும் நிலைமை எனக்கேன் வருவான்?
(பலஸ்தீனக் கவிதைகள் பக்கம் 77)

இந்நிலை தான் அவர்களை நர இறைச்சியையே புசிக்க வைக்கும் வெஞ்சினக்காரர்களாய் மாற்றுகிறது. இதனால் தான் அவர்கள் சொற்களே ரொட்டியாயும் ஆயுதமாயும் மாறுகின்றன. இதோ அவர்கள் தம் எதிரிகளையும் துரோகிகளையும் நோக்கி கூறுகிறார்கள்.

"கோழைகள் சூரியனின் எதிரிகள்
அவமான ரொட்டியினால் ஊதிப் புடைக்கட்டும்.....
நான் வாழும் வரை எனது சொற்களும் வாழும்
சுதந்திரப் போராளிகளின் கைகளில்
ரொட்டியாயும் ஆயுதமாயும்
என்றும் இருக்கும்"
(பலஸ்தீனக் கவிதைகள் பக்கம் ௰)

இவ்வாறு சுதந்திர வேட்கை கொண்டு போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் கூட்டத்தின் மனோநிலைக்கும் அதிலிருந்து விடுபட்டு நிற்போர் மனநிலைக்கும் பாரிய வித்தியாசமுண்டு. இதோ ஒரு தென்னாபிரிக்கக் கவிஞன் தம் விடுதலை வேட்கைக்கு எதிராக நிற்போர் மேல் கொள்ளும் ஆத்திரத்தில், முழு உலகத்தையே அழித்துவிட வேண்டும் என்பது போல் கோபங் கொள்வதைப் பாருங்கள்:

WAS I WRONG TO IGNITE THE EARTH
AND DANCE ABOVE THE STARS ...
WATCHING AMERICA DISINTEGRATE WITH ITS GODS OF STEEL
WATCHING THE PERSECUTERS OF MANKIND TURN INTO DUST
WAS I WRONG? WAS I WRONG?
(MODERN AFRICAN POETRY)

தான் செய்வது பிழையா என்று கேட்கும் அக்கவிஞன் மனநிலைக்கு அது சரியாகப்படுவதால் தான் அவன் அவ்வளவு ஆக்ரோஷத்தோடு கேட்கிறான்

அசிங்கமாகவும் அருவருப்பைத் தருவதாகத் தெரியும் அனர்த்தங்களும் அழிவுகளும் ஒரு புதிய ஒழுங்கின் வரவைக்கூறும் அருட்டல்களே என்று சகோதரி நிவேதிதா (அன்னை காளி) கூறுவது இதை விளங்கிக் கொள்ள உதவும். இதோ, இதையே, ஐக்கிய நாடுகள் சபைக்கு முறையீடு செய்வதாக கூறும் பலஸ்தீனக் கவிதை அறிவிக்கிறது.

"இருபது ஆண்டுகள் நாம் காத்திருந்தோம்
பெற்றவையெல்லாம் வார்த்தைகள் மட்டுமே
வெற்று வார்த்தைகள் மட்டுமே பெற்றோம்......
ஆண்டாண்டு காலமாய் அடித்து நொறுக்கிச்
சிதறப்பட்ட மக்களாய் வாழ்ந்தோம்......
நட்புடன் வாழ நாங்கள் செய்யும்
கடைசி முயற்சி இதுவேயாகும்...

ஒரு புது ஒழுக்கம் உருவாகுமாறு
உலகிடம் நாங்கள் விண்ணப்பம் செய்கிறோம்..."

ஆம், விடுதலை வேட்கை கொண்ட மக்கள் ஒரு புது ஒழுங்கின் உருவாக்கிகளே என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இது இன்று ஈழத்தில் வாழும் தமிழ் பேசும் இனத்தின் குரலாகவும் இணைகிறது என்பதும் உண்மையே.

**பலஸ்தீனக் கவிதைகள்**
**எம்.ஏ.நுஃமான்**
வெளியீடு :
Moondrawathu Manithan Publication,
No: 37/14, Vauxhall Lane,
Colombo - 02
விலை: 200.00

# சிறுவர் இலக்கியப் பரிணாமத்தினை விஸ்தரிக்கும் முயற்சிகள்

**– வேலோன்**

ஈழத்திலே தற்போது ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ நூறு தமிழ் நூல்கள் வெளியாகின்றன. இதன்படி பார்த்தால் வாரமொன்றிற்கு இரு நூல்கள் வீதம் அறுவடையாகின்றன. சிறுகதை, கவிதை, கட்டுரைகள் என்பன போலவே சிறுவர் இலக்கியத்திலும் கணிசமான அளவில் நூல்கள் வெளிவர ஆரம்பித்து விட்டன. பலர் சிறுவர் இலக்கிய முயற்சியில் மிக ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இத்தகையவர்களது பங்களிப்புகள் எல்லாம் சிறுவர் இலக்கியப் பரிமாணத்தினை விரிவடையச் செய்கின்றன.

சிறுவர் உளவியல் அறிந்து அவர்களது மொழியில் அவர்களது எல்லைக்குள் நின்று இலக்கியம் படைக்க வேண்டிய பாரிய பொறுப்பிற்கு சிறுவர் இலக்கிய கர்த்தாக்கள் உள்ளாகின்றனர். இந்த வகையில் இப்பரிமாணத்தில் திருமலையிலிருந்து அண்மையில் அறுவடை செய்யப்பட்ட மூன்று நூல்கள் சிறுவர் இலக்கியப் பரிமாணத்தினை விஸ்தரிக்கின்ற முயற்சிக்குத் துணைபோவதாக அமைந்திருப்பது மகிழ்வைத் தருகின்றது. குறுகிய காலத்தில் குழந்தை இலக்கியத்தில் திருமலையில் அதிக தடம் பதித்த கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அமைத்த அடித்தளமும் இத்தகைய நூல்களின் வருகைக்கு ஏதுவானதொன்று என்ற கூற்றினை இலகுவில் மறுதலிக்க முடியாது.

**அச்சாக்குட்டி**
**வீணைவேந்தன்**
வெளியீடு :
ஈழத்து இலக்கியச் சோலை
திருகோணமலை
விலை : 25.00




பாலர் வகுப்பு மாணவர் மெச்சி மெச்சி படித்து மகிழத்தக்கதாக வடிவமைக்கப்பட்ட இச்சிறு நூலில் உள்ள கவிதைகள் தாமரைத்தீவான் கூறுவது போலவே 'உச்சாணி போம் பிஞ்சுக்கான' ஊட்டக் கவிகளாகவே' விளங்குகின்றன.

வீணை வேந்தன் எனும் புனைபெயரில் சித்தி அமரசிங்கம் இந்நூலினை வெளிக்கொணர்ந்துள்ளார்.

'தண்ணியைத் தான் தன் மொழியில்
நண்ணிதா என்பான்!
கிண்ணியிலே கொடுத்து விட்டால் அள்ளித் தெளிப்பான்!'

போன்ற கவிதை வரிகள் சிறுவர் இலக்கியம் மீது ஆசிரியர் சித்தி அமரசிங்கம் கொண்டுள்ள அதிதீவிர ஈடுபாட்டினையும் பிரக்ஞையினையும் சுட்டுவதாய் அமைகின்றன.

**நந்தனப் பூக்கள்**
மனோ பற்குணம்
விலை : 60.00




இந்நூல் ஆறுவயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு உகந்ததாக விளங்குகின்றது. குழந்தைகளின் வாசிப்புத்திறனை ஊக்குவிக்கவல்ல 'நந்தவனப் பூக்கள்' வெவ்வேறு மகுடங்களில் கவிதைப் பூக்களாக விரிவடைகின்றன.

புத்தகமும் புத்துயிரும் என்ற தலைப்பில் ஆசிரியை எழுதிய

'எண்ணம் எல்லாம் நிறைந்து விட்ட
எனது தோழமைப் புத்தகமே
விண்போல் உயர்ந்து தெரிகின்றது
வியந்து நானும் நிற்கின்றேன்'

போன்ற கவிதைகள் அவரது எழுத்தின் நோக்கத்தினை அடையாளப்படுத்துகின்றன.

இந்நூலில் மொழி அழகு பெற்றுள்ளது. கவிநடை ஆசிரியைக்கு கைதேர்ந்ததாகி நந்தவனப் பூக்களின் நறுமணத்திற்கு அணிசேர்த்துள்ளது.

⇨19

# மூத்திரம் பெய்தாலும் செய்தியாக்கி விடுவார்!

இதழ் 212 இல் டி.சிவராம் எழுதிய கட்டுரை பல விடயங்களை தெளிவாக்கியிருக்கிறது. வடக்கு கிழக்கிற்கு ஒரு மாகாண சபையையோ அல்லது ஒரு இடைக்கால நிர்வாக சபையையோ இதுவரை வழங்க முன்வராத சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வை வழங்குவதாகக் கூறுவது எவ்வளவு பம்மாத்து என்பதையும், அது சாத்தியமற்றது என்பதையும் தெளிவாக விளக்கியிருந்தார். அதுவும் அரசாங்கம் கேட்டுக் கொண்டபடி ஆயுதங்களைப் போட்டு விட்டு வந்த தமிழ்க் குழுக்கள் இன்று சிதறுண்டு ஒன்றுக்கும் லாயக்கில்லாமல் இந்தப் பேரினவாத அரசை அண்டி வாழ வேண்டியிருக்கின்றன. ஆக, ஆயுதங்களைப் போட்டுவிட்டு தீர்வுக்காக கையேந்தி நிற்பது என்பது கோவணத்தையும் களவாட விட்டு கைகட்டி இருப்பதற்கு ஒப்பாகும்.தமிழ் மக்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு சிவராம் போன்றவர்களின் எழுத்துக்கள் மிகவும் அவசியமானவை.

நாசமறுப்பான் தனது கட்டுரையில் பிரபாகரன் சொல்லத் தவறிய விடயங்களைச் சொல்லியிருக்கிறார். அவர், பிரபாகரன் முஸ்லிம்கள் தொடர்பாக எதுவும் கூறாததையும் சுட்டிக் காட்டியிருந்தால் நன்றாக இருக்கும்.

சரிநிகரின் தொடர் வாசகன் என்ற வகையில்1999 ஆம் ஆண்டு மாவீரர் தின உரை குறித்து எழுதும் போது நாசமறுப்பான் இந்த முஸ்லிம்களின் விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்ததை நான் அறிவேன். ஆனால் புதிய வாசகர்களுக்காகவும், அதனை அழுத்துவதற்காகவும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மட்டக்களப்பில் இருந்து படையினரின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக வி.ஜே.கே. எழுதிய கட்டுரை இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருந்தது. ஒன்று அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் எத்தகையன என்பது. இரண்டாவது ஊடகவியலாளர்கள் எவ்வாறு மக்களின் குரலாக செயற்படத் தவறுகிறார்கள் என்பது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் எப்படி ஆள்பவர்களின் நலன்களில் பழுது ஏற்படாதவாறு பாதுகாக்கின்றன என்பது பற்றி இன்னும் ஆழமான ஆய்வுகள் தேவை. அவை மக்களுடைய நலன்களை பாதுகாப்பதற்கு வழி வகுக்கும். அண்மைக் காலமாக ஊடகவியலாளர்கள் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சி அல்லது அமைப்புக்களின் ஊதுகுழல்களாகச் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. சிலர் விதி விலக்காக இருக்கிறார்கள் என்பது வேறு விடயம். எங்கள் ஊரிலும் ஒரு பத்திரிகையாளர் இருக்கிறார். அவருக்கு, அவர் சார்ந்த கட்சியிலிருந்து மாதாமாதம் பணமும் அவ்வப்போது அன்பளிப்புகளும் கிடைப்பதுண்டு. அவர் அக்கட்சிப் பிரதிநிதி மூத்திரம் பெய்தாலும் அதனைச் செய்தியாக்கி விடுவார். தினசரிப் பத்திரிகைகளோ அவற்றை வெளியிட்டு விடுகின்றன. இந்தத் துர்ப்பாக்கிய நிலை மாறாமல் தமிழ் மக்கள் விடுதலை பெற முடியாது.

**எஸ்.ராஜேந்திரன்.**
**மன்னார்**

# சுகபோக.........

அங்குள்ளவர்கள் விழித்துக் கொள்ள தனக்கு ஆபத்து அருகில் என்றவுடன் அங்கிருந்து வவுனியாவுக்குத் தனது ஜாகையை மாற்றி விட்டார்.

வவுனியா கூமாங்குளத்திற்கு வந்து சேர்ந்தார். கூமாங்குளத்திலும் பலிக்கவில்லை இவருடைய அம்மன் விளையாட்டு. இதன் பின்னர் பெரியார்குளம் பகுதியில் ப.ரமேஸ் என்பவரது காணியில் தற்காலிகமாக வீடு அமைத்து இருக்கப் போவதாகக் கூறி மெல்ல இடம் பிடித்தார். அயல் நிலவரங்களை சற்று நோட்டமிட்டு அம்மனாடத் தொடங்கினார். சனக் கூட்டமும் வந்தது. மக்கள் தமது துயரத்திற்கு அரச அதிகாரிகளிலிருந்து தமிழ்க் கட்சிகள் வரை ஓடித்திரிந்து ஒரு விடிவும் வராததால் அவர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய ஆறுதல் தரக்கூடிய ஏதோ ஒன்று தேவைப்பட்டது. அது கிடைத்ததோ இல்லையோ அதனைத் தேடத் தொடங்கினர். ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இந்தப் புள்ளி தானே அவசியம். தனது விளையாட்டுக்களை ஆரம்பித்து விட்டார்.

தன்னை அம்மன் போல பெண்ணாக அலங்கரிப்பார். ஆடுவார். பாடுவார். ஒவ்வொரு வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் மு.ப. 11.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரையும், ஞயிற்றுக்கிழமைகளில் பி.ப. 2.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரையும் கலையாடி மக்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வைப்பது போல செயற்படுவார். அம்மனாகவே இவர் தன்னை அலங்கரித்துக் கொள்வார். சேலை கட்டி, சட்டை போட்டு... உள்ளே பிறா போட்டு மார்பு புடைத்தால் போல் காட்டுவதற்காக துணி அடைந்து விடுவார்கள் அவருடைய எடுபிடிகள். கொஞ்சம் கொஞ்சமாக இளம் பெண்களும், இளைஞர்களும் வரத் தொடங்கினர். ஏன்? வவுனியா அரச திணைக்கள உயரதிகாரிகள் கூட இங்கு வந்து அருள் பெற்றுச் சென்றனர். சிலர் பிரசாரமும் செய்தனர்.

சாமி குடியிருந்த ரமேஸ் என்பவரின் காணியை அம்மனின் பெயரால் அபகரிக்கும் திட்டம் ஆரம்பித்தது. விழித்துக் கொண்ட ரமேஸ் காணியிலிருந்து வெளியேற்றி விட்டார். பின்னர் மகாரம்பைக்குளத்தில் குடிபகுந்தது இந்த ஆசாமி. அங்கு ஒரு கோயிலையும் கட்டி விட்டார். தொழில் இப்போது கொடி கட்டிப் பறக்கிறது. இளம் பெண்களுக்கு அம்மனாடி குறி சொல்லும் போது அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்ற தனியே வரும்படி சொல்லுவார். போனவர்கள் துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று ஓட்டத்துடன் திரும்பி வந்திருக்கிறார்கள்.சாமியின் சில்மிசம் தாங்கவில்லையாம். ஏமாந்தவர்கள் புலம்பித் திரிகிறார்கள். திட்டுகிறார்கள். இந்த ஏமாற்று வேலைக்கு நடவடிக்கை எடுக்க யாருமில்லையா என்று கேட்கிறார்கள்.

# பேச்சுவார்த்தைகளால் கண்ட பயன் ஏதுமில்லை!

சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் என்ற தலைப்பில் சிசைரோ எழுதிய கட்டுரை படித்தேன். புலிகளைப் பயங்கரவாத பட்டியலில் சேர்த்துவிடத் துடிக்கும் சர்வதேச சமூகம் உண்மையில் பயங்கரவாதிகள் யார் என்பதைக் கண்டு கொள்ளாமல் தூங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை விளக்கியிருந்தார். இனியாகிலும் சர்வதேச சமூகம் விழித்துக் கொள்ள வேண்டும் என்று கோரும் கோரிக்கையும் அவரின் கட்டுரையிலிருந்தது. சர்வதேச சமூகங்களுக்கு இவை ஒன்றும் தெரியாமலில்லை. அவை தூங்குவது போலப் பாவனை பண்ணிக் கொண்டு மக்களுடைய போராட்டங்களை எப்படி நயவஞ்சகமாக முறியடிக்கலாம் என்றே கனவு காணுகின்றன.

அதனை ஒடுக்கப்படும் மக்கள் புரிந்து கொள்ளாதவரை சர்வதேச சமூகத்தின் சதி வலையில் விழுவதைத் தவிர வேறு வழியில்லை. பலஸ்தீனப் பிரச்சினையில் தீர்வு முயற்சியில் ஈடுபட்ட அமெரிக்காவும், நோர்வேயும், இஸ்ரேலும் பெற்றுக் கொண்ட இலாபத்தை விட பலஸ்தீனியர்கள் பெற்றுக் கொண்டது எதுவுமில்லை. அவர்கள் இழந்தது தான் அதிகம். சில வேளை பேச்சுவார்த்தைக்குப் போகாமல் தொடர்ந்து யுத்தம் செய்திருந்தால் இழப்பு இதனை விடக் குறைவாக இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றும்.

பேச்சுவார்த்தை ஆரம்பித்து ஏழு வருடங்கள் முடிந்தும் இன்னமும் பலஸ்தீன மக்களின் நிலங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இது ஒன்றே போதும் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஒடுக்கப்படும் மக்களுக்கு எவ்வித நலனையும் பெற்றுக் கொடுப்பதில்லை என்று கூற.

சிசைரோ தனது கட்டுரையில் நீதித்துறை எவ்வாறு பாரபட்சமாக நடக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார். இது மிகவும் முக்கியமான ஒன்று. தமிழ் மக்களுடைய அல்லது முஸ்லிம் மக்களுடைய அல்லது மலையக மக்களுடைய பிரச்சினை என்று வந்து விட்டால் நீதித்துறை தூங்க ஆரம்பித்து விடும்.

விசாரணைக் கமிசன் நியமிப்பதோடு சரி. வருடங்கள் பல கடந்து அந்த அறிக்கை வந்தாலும் அது கிடப்பில் போடப்பட்டு விடும்.

தகப்பன் படையினரால் கொல்லப்பட்டதாக படையினருக்கு எதிராகப் போடப்பட்ட வழக்கு முடியு முன்னரேயே மகன் சிறையில் சித்திரவதைப் பட்டிருப்பான். அக்குடும்பத்தினர் எதற்கு வழக்குப் போடுவார்கள். அதற்குச் செலவு செய்ய யார் பணம் கொடுப்பார்கள்?

இருக்கிற மனித உரிமை நிறுவனங்களும் யாருக்கும் நோகாமல் நடவடிக்கை எடுப்பதோடு பணியை நிறுத்திக் கொண்டு விடுகின்றன. சட்டத்தரணிகளிடம் போனாலோ வீட்டை விற்றுத் தான் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும். யுத்தத்துள் நடத்துகிற பிழைப்பாக இது போய் விட்டது.

இது பற்றியும் சரிநிகர் எழுத வேண்டும்.

சிசைரோவின் ஜே.வி.பி. தொடர்பான கட்டுரையும் காலத்திற்கு உகந்த ஒன்று. எனினும் அவர் தனது மொழி நடையை சற்று இலகுவாக்கினால் மக்களைச் சென்றடைய இலகுவாகவிருக்கும் என்பது என் எண்ணம்.

**எம். முரளிதரன்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**
**பேராதனை**

# சிறுவர் இலக்கியம் .........................

**தேன்சிட்டு**

ராணி சீதரன்

வெளியீடு :
மீரா பதிப்பகம்
191/23, ஹைலெவல் வீதி,
கிருலப்பனை,
கொழும்பு - 06

விலை : 55.00




வன்முறை, மூட நம்பிக்கை, மாஜா ஜாலங்கள் போன்ற சிறுவர்களைப் பாதிக்கக்கூடிய இன்னோரன்ன அம்சங்களைத் தவிர்த்து, தன் பாடல்களை ராணி சீதரன் யாத்திருப்பது இந்நூலில் விதந்துரைக்கக் கூடியது.

'மாங்கல்யம் தந்து நீயே...' என்ற சிறுகதைத் தொகுதியூடாக தனது கதை புனையும் ஆற்றலை இனங்காட்டிய ராணி சீதரன் குழந்தை இலக்கியத்தில் அடைந்த உயர்வினை எடுத்துக் காட்ட எத்தனிக்கின்றது தேன்சிட்டு எனும் இச்சிறுநூல்.

# புதிய தலைமை தேவை!

மலையகம் தொடர்பாக அண்மைக் காலமாக சரிநிகர் கவனமெடுத்து வருவது வரவேற்புக்குரியது. வீரகேசரி போன்ற பத்திரிகைகள் மலையக மக்களுடைய விடயங்களை வெறும் வியாபாரமாக்குவதைத் தவிர அம்மக்களுடைய உண்மையான பிரச்சினையை வெளிக் கொண்டு வரத் தவறி விட்டன.

பிந்துனுவெவ சம்பவத்தை சரிநிகர் வெளியிட்டது போல வேறு எந்தப் பத்திரிகையும் கவனமெடுத்து வெளியிடவில்லை. கொல்லப்பட்ட இளைஞர்கள் தங்களது பெற்றோருக்கு எடுத்த தொலைபேசி அழைப்புக்கள், மற்றும் அவர்கள் எழுதிய கடிதங்கள் அப்படுகொலைகள் முன்னமேயே திட்டமிட்டு நடாத்தப்பட்டன என்பதை வெளிப்படுத்தியிருந்தது. மலையகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களோ இப்படுகொலை குறித்து பத்திரிகையில் அறிக்கை விட்டதோடு கொழும்புக்குச் சென்று விட்டார்கள். அடுத்த தேர்தல் வந்தால் அல்லது இவ்வாறு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மெல்லத் தலை காட்டுவார்கள் அதுவும் எல்லாம் ஓய்ந்தபின்.

மலையகத் தமிழ் மக்கள் மலையக மக்கள் முன்னணியையும், இ.தொ.காவையும் தூக்கியெறிந்து விட்டு புதிய தலைமையைத் தேட வேண்டிய காலம் வந்து விட்டது.

**என்.கோபால்குமார்,**
**பொகவந்தலாவ.**

# நகைச்சுவையையும் சேருங்களேன்!

ரி.என்.எல்.இல் சரிநிகர் விளம்பரத்தைப் பார்த்து விட்டு சரிநிகரைத் தேடி வாங்கிப் படித்து வருகிறேன். சரிநிகரில் வெளியாகும் விடயங்களில் என்னைக் கவர்ந்தது ஈழமோகத்தின் வெண்பா. ஒவ்வொரு முறையும் அவர் வெண்பா என்கிற சாட்டையைச் சொடுக்கி விடுகிறார். மிக அற்புதமாக அவை விளாசுகின்றன.

வண்ணத்தில் வந்த முதலாவதோ இரண்டாவதோ சரிநிகரில் பார்த்த ஞாபகம் 'எங்கை போற?" என்கிற ஒரு சித்திரம். உண்மையில் தமிழ் மக்களின் பாரம்பரியத்திலிருக்கும் வீட்டிலிருந்து வெளியே புறப்படும் போது போகுமிடத்தைக் கேட்கக்கூடாது என்கிற விசயத்தை எடுத்துக் கொண்டு மிக நகைச்சுவையாக யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழலைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் சி.கதிர்காமநாதன். பாரம்பரியங்களில் வரும் உடைவு நகைச்சுவையாகவும், அதே நேரம் மனதில் படும்படியாகவும் அழுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறான நகைச்சுவையும் விசயதானமும் நிரம்பிய விடயங்களை சரிநிகர் அவ்வப்போதாவது வெளியிட வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

**வி.சுந்தரம்பிள்ளை,**
**கொழும்பு**

# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி, தொலைமடல் 074400045

**மின்னஞ்சல்** : sarini@sltnet.lk


## என்ன செய்ய வேண்டும்?

உங்களைச் சுற்றி என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரியாமல் இருப்பதற்கு ஏதேனும் அற்புதமான மருந்து இருக்குமானால் எவ்வளவு சந்தோசமாக இருக்கலாம் என்று உங்களுக்கு ஒரொரு சமயம் தோன்றக்கூடும்!

அல்லது விட்டு விடுதலையாகி ஒரு சிட்டுக் குருவியைப்போல் இந்த உலகத்தின் ஓசைகள் காதில் கேட்காத, காட்சிகள் கண்ணிற்படாத உயரத்திற்குப் பறந்து போய்விடவேண்டும் போல் இருக்கக்கூடும்.

அதிலும் நீங்கள் இலங்கையில் பிறந்த தமிழராக இருந்தாலோ ஏதாவது ஒருகணமாவது உங்களுக்கு இந்த உணர்வு நிச்சயம் தோன்றியிருக்கும்.

எத்தனை நாளைக்குத் தான் ஒருவர் அவமானத்தையும் ஆக்கினைகளையும் சுமந்து கொண்டிருப்பது? எத்தனை நாளைக்குத்தான் யுத்தத்தின் சுமைகளையும் சாவின் துயரங்களையும் சகித்துக் கொண்டிருப்பது? எத்தனை நாளைக்குத் தான் நம்மைச்சுற்றி நடக்கும் அநியாயங்களையும் ஒடுக்கு முறைகளையும் பொறுத்துக் கொண்டிருப்பது.

ஆனால், என்ன செய்வது? நாம் ஆசைப்படுகிற அந்த மருந்து தான் எங்கும் கிடைப்பதில்லையே. எங்களுக்குத்தான் சிட்டுக்குருவியின் இறக்கைகள் இல்லையே... ஆனால், இலங்கையில் வந்து பிறந்து விட்டோம்.

இந்த நாடு வேண்டாம். இந்த அவஸ்தை வேண்டாம் எங்காவது ஓடிப்போய் விடுவோம் என்று ஓடிப்போய்விடலாம். அப்படியும் சிலர் ஓடிப்போய்த்தான் இருக்கிறார்கள். அப்படி எத்தனை பேருக்குத்தான் ஓடிப்போக முடிகிறது? அப்படியும் ஓடிப் போனவர்கள் என்ன சொல்கிறார்கள்? போன இடங்களில் அவர்களால் நிம்மதியாக இருக்க முடிகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்கிறார்கள். எங்கு போனாலும் பிரமத்தி தோஷம் துரத்தி வருவது போல இந்த நாட்டின் நிலைமைகள் எங்களைத் துரத்திக் கொண்டு தான் வருகின்றன. நிலவுக்கொழித்துப் பரதேசம் போக முடியுமா என்றது போல இருக்கிறது நிலைமை.

ஆக என்ன தான் செய்ய முடியும்? வேறு வழியேயில்லை என்று ஆன பின் எதிர்த்துச் சண்டையிடுவதைத் தவிர வேறு எதைத்தான் செய்ய? ஆனால், சண்டை என்றதும் திரும்பவும் அதே யுத்தம் சாவு என்று அதே வட்டத்துள் சிக்கிப் போகிறோம்.

ஆக முடிவேயில்லாத இந்தச் சுழிக்குள் கிடந்து மூச்சுத்திணறுண்டு உழல்வது தான் நமது விதியாகிப் போய்விட்டதா?

அத்தியாவசியப் பொருட்கள், பாவனைப் பொருட்கள் என்று விலையேறாத பொருட்களே இல்லை எனலாம். அதுவும் நாளுக்கு நாள் றொக்கற் வேகத்தில் ஏறிக்கொண்டிருக்கின்றன. எரிபொருட்கள், மின்சாரம், தொலைபேசிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என்று எல்லாவற்றினதும் விலைகள் ஆளை விழுங்கிவிடுமளவிற்கு ஏறிவிட்டிருக்கின்றன. போதாததற்கு வரிகளின் ஏற்றமும் சேர்ந்து கொண்டு விட்டிருக்கின்றது.

இவ்வளவும் போதாதென்று அரசாங்கம் 44 மந்திரிகளையும் முப்பதுக்கு மேற்பட்ட பிரதி அமைச்சர்களையும் உருவாக்கி வைத்திருக்கிறது. அதுவும் போதாதென்று, இப்போது ஒரு அமைச்சுக்கு இரண்டு பிரதி மந்திரிமார்களையும் நியமிக்கத் தொடங்கி விட்டது. தனது கட்சிக்காரர்களுக்கெல்லாம் மந்திரிப் பதவியைத் தருகின்ற ஒரு ஜனாதிபதியை சோவின் "முகம்மது பின் துக்ளக்" நாடகத்தில் வரும் துக்ளக்குக்குப் பிறகு இப்போது தான் நாங்கள் பார்க்கிறோம்! இவையெல்லாம் அநியாயமாக நாட்டின் செலவை அதிகரித்து விட்டிருக்கின்றன.

யுத்தம் நடப்பதால் தான் இந்த விலையேற்றம் என்று தீவிரமாக யுத்தத்திலீடுபடும் அரசாங்கமே சொல்கிறது. நோயும் தெரியும். நோய்க்கான காரணமும் தெரியும். அதற்கான மருந்தும் தெரியும். ஆனால், மருந்தைக் குடிக்கப் போவதில்லை என்று அடம் பிடிப்பது மட்டுமல்லாமல் நோயை மேலும் அதிகரிக்கும் செயலில் அரசாங்கம் ஈடுபட்டுவருகிறது.

இப்போது சமாதானத்திற்குத் தயார் என்று அது அறிவித்துவிட்டிருந்த போதிலும் சமாதான முயற்சியில் அக்கறையுடன் ஈடுபடுமா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்த நிலையில் நாம் என்னதான் செய்யமுடியும்? ஓடிப்போவதா? செத்துத் தொலைவதா?

இரண்டுமே எங்களைப் பிரச்சினையிலிருந்து காத்துவிடப் போவதில்லை.

இருக்கிற ஒரே வழி, அரசாங்கத்தைச் சமாதான வழியில் தீவிரமாக இறங்க நிர்ப்பந்திப்பது தான். சமாதானத்துக்காக ஏங்கும் அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து சமாதானப் பாதைக்கு வருமாறு அரசையும் புலிகளையும் வற்புறுத்துவது தான். யுத்தம் எங்களுக்கு வேண்டாம் என்று குரலெழுப்பிப் போராடுவது தான்.

சரிநிகர் இந்தப் போராட்டத்தில் மக்களின் குரலாய் முன்னின்று ஒலிக்கிறது.

யுத்தத்தை உடன் நிறுத்துக: சமாதானத்தைக் காணும் செயலில் இறங்குக!

## சமாதானத்திற்கான ஒரு முயற்சியும் ஒரு கொள்ளி வைப்பும்!

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்துக்கும் அதிகம்.

* அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கும் அதிகம்.

* கணவனை இழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்துக்கும் அதிகம்.

* காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்துக்கும் அதிகம்.

* இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்திற்கும் அதிகம்.

* பெற்றோர்களை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்துக்கும் அதிகம்.

* கல்வியை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்துக்கும் அதிகம்.

* அழித்தொழிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகம்.

* உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டோர் 10 ஆயிரத்துக்கும் அதிகம்.

* இழக்கப்பட்ட விவசாய நிலங்கள் பத்தாயிரம் ஏக்கருக்கும் அதிகம்.

* அழிக்கப்பட்ட சூழலை விலை மதிக்க முடியாது.

* தடைப்பட்ட அபிவிருத்தி வேலைகளின் பெறுமதி பல கோடி ரூபாய்களாலானவை.

* அழித்தொழிக்கப்பட்ட



புனிதத் தலங்கள் ஆயிரக்கணக்கானவை.

இவை எல்லாம் யுத்தம் ஏற்படுத்திய விளைவுகள்.

இந்த யுத்தத்தை நிறுத்தக் கோரி ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த திங்களன்று விகாரமாதேவி பூங்காவில் ஒன்று கூடினர். ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள பதாகையில் யுத்தத்துக்கெதிரான சுலோகங்களை எழுதுமாறு இவ்வார்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்த மக்கள் சமாதான முன்னணி கேட்டிருந்தது. பாடசாலை மாணவர்கள் தொடக்கம், தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர், கணவனை இழந்த பெண்கள் என்று ஆயிரக்கணக்கில் குழுமியவர்கள் தமது யுத்தத்துக்-



கெதிரான எதிர்ப்பலைகளை வெளியிட்டனர்.

யுத்தத்தை நிறுத்து, பேச்சுவார்த்தையை ஆரம்பி, வன்முறை வேண்டாம் என்பன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களது பிரதான கோஷங்களாக இருந்தன.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தைக்கெதிராக ஜே.வி.பி., சிஹல உருமய, மற்றும் பொ.ஐ.முவுக்குள்ளிருக்கும் இனவாத சக்திகள், பௌத்த மகா சங்கங்கள் போன்றன அணி திரண்டிருக்கும் இவ்வேளையில் சமாதான முனைப்பை உந்தித் தள்ளும் சக்திகள் ஒன்றுபட வேண்டியதும் அதற்காகக் குரல் கொடுக்க வேண்டியதும் அவசியமானது. அந்தத் தேவையை இவ்வார்ப்பாட்டம் முன்னெடுத்துள்ளது வரவேற்புக்குரியது.

அரசு சமாதானம் பற்றிப் பேசும் போது சமாதானப் பாடலிசைத்து அரசு யுத்தம் பற்றிப் பேசும் போது யுத்தபல்லவி பாடாமல் மக்களுடைய சமாதானத்திற்கான விருப்பு தொடர்ந்து வலியுறுத்தப்படல் வேண்டும்.

இவ்வார்ப்பாட்டத்தின் இறுதியில் நோர்வே தூதரத்திற்கு ஊர்வலமாகச் சென்று பேச்சுவார்த்தை மூலமாக இப்பிரச்சினையைத் தீர்க்க வலியுறுத்தும் மகஜர் ஒன்றையும் நோர்வே தூதுவரிடம் சமர்ப்பித்தார்கள்.


ஆர்ப்பாட்ட முடிவில் 'தமிழ் மக்கள் கௌரவத்துடனான சமாதானத்தையே எதிர்பார்க்கிறார்கள் என்றார் மனோகணேசன். இந்தக் கௌரவமான சமாதானத்தை எப்படி ஏற்படுத்துவது. அதற்கான புறச்சூழலை எவ்வாறு வெற்றி கொள்வது? என்பது குறித்து சமாதானத்தை விரும்பும் சக்திகள் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும். இல்லையேல் ஆர்ப்பாட்ட முடிவில் விகாரமாதேவி பூங்காவைச் சுற்றிப் போடப்பட்டிருந்த பதாகைக்கு விஷமிகள் தீவைத்தது போல நாட்டின் சமாதானத்திற்கும் கொள்ளி வைத்து விடுவார்கள்.


* அரச சார்பற்ற நிறுவனங்கள் வியாபாரிகளா?

* யாழ்ப்பாண இளைஞனின் ஊடாக யாழ் நிலை

* **NIPU** அரச நிறுவனமும் அதன் உண்மை நிலையும்

* இணையங்களில் வெளிவரும் கட்டுரைகளில் ஆயுதப் போராட்டங்களில் சிறுவர்களை ஈடுபடுத்தல் பற்றி...



**டிச. 19 செவ்வாய் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்..**

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது


ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 14.12.2000